Regd. No. 2514 Swadesamitran Illustrated Weekly

சக்தி மலர்கள்

	ரூ.	அ.
டால்ஸ்டாய் கதைகள் (2-பாகம்)	2	0
அசலா (கிருஹதாஸ்) (சரத் சந்திர சட்டர்ஜி) (ஸ்ரீ ஆர். ஷண்முகசுந்தரம் மொழி பெயர்ப்பு)	1	8
கூண்டுக்கிளி முதலிய நாடகங்கள் (ஹரீந்திரநாத சட்டோபாத்யாய) ஸ்ரீ தி. ஜ. ர. மொழிபெயர்ப்பு.	1	0
அமெரிக்கா (ஏ. கே. செட்டியார்)	1	0
சரித்திரக் கதைகள் (ஸ்ரீ எம். எஸ். சுப்ரமண்ய அய்யர்)	1	0
ஜப்பான் (ஸ்ரீ ஏ. கே. செட்டியார்)	1	0
பாரதியார் சரித்திரம் (ஸ்ரீமதி செல்லம்மாள் பாரதி)	1	0
கமலா முதலிய சிறு கதைகள் (ஸ்ரீ ஆர். திருஞான சம்பந்தம்)	1	0
இனி நாம் செய்யவேண்டியது யாது? (லியோ டால்ஸ்டாய்) ஸ்ரீ ரா. விசுவநாதன் மொழி பெயர்ப்பு.	0	12
உலகம் சுற்றும் தமிழன் (ஸ்ரீ ஏ. கே. செட்டியார்)	0	12
நிர்மல குமாரி (ஸ்ரீ காழி. சிவ. கண்ணுசாமி)	0	12
சிறையனுபவங்கள் (ஸ்ரீ கி. சடகோபன்)	0	12
காந்தித் தாத்தா கதை (ஸ்ரீமதி காவேரி வெங்கட்டராமன்) ஸ்ரீ எஸ். ஆர். வெங்கட்டராமன்	0	8
STRANGE JOURNEY (Harindranath Chattopadhyaya)	2	8
FIVE PLAYS (Harindranath Chattopadhyaya)	1	0
மகாத்மா காந்தி (ஸர். எஸ். ராதாகிருஷ்ணன் ஆங்கிலத்தில் தொகுத்ததை (ஸ்ரீ வெ. சாமிநாத சர்மா மொழி பெயர்த்தது)	3	0
திருக்கேதார யாத்திரை (ஸ்ரீ தி. சு. அவிநாசிலிங்கம்)	1	0
கல்வி (விவேகாநந்தர் ஆங்கிலத்தில் எழுதியது. ஸ்ரீ தி. சு. அவிநாசிலிங்கம் மொழி பெயர்ப்பு.)	0	12

தபாற்செலவு, ரயில் செலவு பிரத்யேகம்.

எமது எல்லா ரயில்வே புத்தகசாலைகளிலும், ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.

இவைகள் [illegible] வியாபாரிகளுக்கும், வாசக சாலைகளுக்கும், பஞ்சாயத்து போர்டுகளுக்கும் தேவையான அகப்படக்கூடிய நாவல்கள் முதலியன ஆர்டரின் பேரில் அனுப்பப்படும்.

மானேஜர்,

"சுதேசமித்திரன்" புத்தகசாலை, சென்னை.

Printed and Published by T. S. Viswanatha Iyer, B.A., at the Swadesamitran Power Press, Mount Road, Madras. Editor, C.R. Srinivasan, B.A.

சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

Vol. 13 No. 5 1-3-'42 Price 2 Annas.

மூன்று தலை முறைகள்.

தாய் தன் மகளுக்கு
வுட்வார்ட் வைத்தியனின்
கிரைப் வாட்டர் என்னும்
மருந்துத் திராவகம்
எப்படி குழந்தைக்கு சுகம்
தருகிறதென்று சொல்லுகிறுள்.

WOODWARD'S
GRIPE WATER

W. WOODWARD LTD., LONDON. ENGLAND

சுதேசமித்திரன்

வாரப் பதிப்பு - 1-3-'42

சென்றவார நிகழ்ச்சிகள்

காந்திஜியின் கட்டுரை

மகாத்மா காந்தி 'ஹரிஜன்' பத்திரிகையில் பின் வருமாறு எழுதியிருக்கிறுர்:—

சமீபத்தில் பிரிட்டிஷாருக்கு ஏற்பட்ட தோல்விகளால் நாட்டில் குழப்பமேற்படக்கூடாது. பிரிட்டிஷாருடன் நாம் கொண்டுள்ள சம்பந்தத்தில் நாம் வேறெதையும் கற்றுக் கொள்ளாவிட்டாலும், துரதிர்ஷ்டங்களுக்கிடையில் சாந்தத்தையும் மன அமைதியையுமாவது கற்றுக் கொள்வோம்...

கிலிக்கு ஏதாவது இடமுண்டா? உண்மையாக அஹிம்சையில் நம்பிக்கையுள்ளவர்களுக்கு கிலிக்கு இடமில்லை: ஏனெனில் பயமும், அவநம்பிக்கையும் கொள்வது அவர்கள் சுபாவமல்ல. பீதியை எதிர்க்கவும் பீதி பரவாமல் தடுக்கவும் ஒவ்வொரு தொண்டரும் முயல வேண்டியது கடமையாகும், 'பயங்காளிகள் நிஜமரணத்திற்கு முன்பே பல தடவை பயத்தினுல் சாவார்கள்' என்பது ஒரு பழமொழி. ஆனுல் நாம் அவ்வாறு நடந்து கொண்டோமென்ற பெயர் ஏற்படக்கூடாது.

நகரங்களுக்கே உண்மையில் ஆபத்திருக்கிறது. சிங்கப்பூர் வீழ்ந்து விட்டதாலும் பர்மாவும் நஷ்டமாகக் கூடுமாதலாலும், ஆபத்து நம்மையும் சமீபித்து விட்டது. நகரங்களில் வசிக்க வேண்டி அவசியமில்லாதார்களும் ஆபத்தைத் தடுக்க விரும்புகிறவர்களும் கட்டுப்பாடாக கிராமங்களுக்குச் சென்று விடுவது தகுந்த முன்னெச்சரிக்கையாகும். குழப்பமாக ஓடுவது கூடாது. வேலை காரணமாக நகரங்களில் இருக்க வேண்டியவாகள் அதிகாரிகளின் எச்சரிக்கைகள் படி நடந்து கொள்ள வேண்டும். அப்படி நடந்து கொள்ள இஷ்டப்படாதவர்கள் முன்னரே காலி செய்து விடுவது நலம்.

இப்படிப்பட்ட சுலபமான வழியில் நாம் நடந்து கொண்டால் கவலையில்லாமல் இருக்கலாம். இதற்கு மேல் நான் சொல்ல விரும்பவில்லை. ஏனெனில் நமக்குள்ளேயே பிளவிருக்கிறது; அதிகாரிகளுக்கும் ஆளப்படுவோருக்கும் நெருங்கிய தொடர்பில்லை. தொடர்பில்லாதது விபரீதம் தான்; ஆனுல் உண்மை. எல்லாக் கட்சியினரும் நிர்க்கதியாயிருக்கின்றனர் என்ற உணர்ச்சி இவ்விபரீதத்தை இன்னும் அதிகமாக்குகிறது.

* * * *

மிஸ்டர் சர்ச்சில் பதில்

பிரிட்டிஷ் பிரதம மந்திரி மிஸ்டர் சர்ச்சில் ஸர் தேஜ் பஹதூர் ஸப்ருவுக்குப் பதில் அனுப்பிவிட்டார். இப்பதில் ஸர் ஸப்ரு புது டில்லிக்கு சென்ற வாரம் வந்து சேர்ந்ததும் அவரிடம் கொடுக்கப்பட்டது: இந்தியா மந்திரியிடமிருந்து வைஸ்ராய்க்குப் பதில் கிடைத்து அவர் மூலம் ஸர் ஸப்ருவுக்கு இது அறிவிக்கப்பட்டது.

மிஸ்டர் சர்ச்சில் தமது பதிலில் தெரிவித்திருப்பதாவது:—

நான் வாஷிங்டனிலிருந்த போது நீங்களும் உங்கள் சகாக்களும் சேர்ந்து எனக்கு அனுப்பிய தந்திக்குச் சாதாரண சந்தர்ப்பத்தில் நான் முன்னமேயே பதிலளித்திருக்க வேண்டும். ஆனுல் மிகுந்த அலுவல்கள் காரணமாகவே அப்படிச்செய்ய முடியாமல் போய்விட்டது, ஆகவே உங்கள் விஞ்ஞாபனம் விஷயத்தில் நான் ஏதோ அசிரத்தையாக இருந்துவிட்டதாக எண்ணவேண்டாம்.

நீங்கள் கிளப்பியுள்ள பிரச்னைகளில் இரண்டு சம்பந்தமாக ஏற்கனவே உங்கள் கருத்துக்கு ஆதரவு கிடைத்திருக்கிறதென்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். லண்டனிலுள்ள யுத்த சபையிலும், பஸிபிக் யுத்தசபையிலும் கொள்கைகள் வகுக்கப்படுவதில் கலந்துகொள்ள விருப்பமிருந்தால் பிரதிநிதிகளை அனுப்பும்படி இந்திய சர்க்காருக்கு ஏற்கெனவே அழைப்பு விடுவிக்கப்பட்டிருக்கிறது. பொறுப்பு வாய்ந்த இவ்வேலைகளில் பங்கெடுத்துக்கொள்ள யார் தெரிந்தெடுக்கப்பட்டாலும் சரி, அவர்களை நாங்கள் வரவேற்போம்.

நீங்கள் பிரஸ்தாபித்துள்ள இதர யோசனைகள் மிகவும் விரிவானவை. ஆகவே அவற்றைப் பற்றி நன்கு யோசித்து சீக்கிரத்தில் பதில் அனுப்பலாமென்றிருக்கின்றேன்.

* * *

ஸர் ஸப்ருவின் கண்டனம்

புதிய டில்லியில் சென்ற மாதம் 21-ந் தேதி கூடிய கக்ஷிப் பற்றற்றவர்களின் மகாநாட்டில் தமது தலைமைப் பிரசங்கத்தை நிகழ்த்தி முடித்ததற்குப் பிறகு ஸர் தேஜ் பஹதூர் ஸப்ரு மிஸ்டர் சர்ச்சிலிடமிருந்து தமக்குக் கிடைத்துள்ள பதிலை வாசித்தார்.

அது குறித்து அவர் பேசுகையில், "அப்பதில் மேலும் சமரஸத்துக்கு இடம் வைத்திருப்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனுல் நிலைமை மிகவும் நெருக்கடியாக இருக்கிறது. ஆகவே மேலும் தாமதம் செய்வது விபத்தாகவே முடியும். நமது கோரிக்கைகள் எவையும் புதியவையல்ல. போன வருஷம் மார்ச்சிலிருந்து அவற்றை நாம் வற்புறுத்தி வந்திருக்கிறேம்" என்று கூறினர்.

"1858-ம் வருஷத்திலிருந்து பதவி வகித்து வந்துள்ள இந்தியா மந்திரிகளிலெல்லாம் மிஸ்டர் அமெரி தான் மிகவும் மோசமானவர். பிரிட்டனிடம் இந்தியாவுக்கிருந்த நம்பிக்கையை அழித்தவர் அவரே. மைனுரிடிகளின் நண்பன் என்ற முறையில் சொல்லுகிறேன்: மிஸ்டர் அமெரியும் டெவான்ஷயர் பிரபுவும் தான் பிரச்னை தீருவதற்கு முட்டுக் கட்டையாக இருந்து வந்திருப்பவர்கள். இந்தியா காரியாலயத்துககே அவசியமில்லை என்பதே எனது உண்மையான கருத்து" என்றும் அவர் உரைத்தார்.

இந்தியா சட்ட சபையில் உள் நாட்டிலாகா மெம்பர் ஸர் ரெஜினல்ட் மாக்ஸ்வெல் பேசியதைப் பற்றியும் ஸர் தேஜ் பஹதூர் குறிப்பிட்டார். ஸர் "மாக்ஸ்வெல் இன்று இந்நாட்டில் இருந்துவிட்டு நாளை போய் விடுபவர். நாமோ இங்கேயே வாழ்ந்து இங்கேயே மடியப்போகிறவர்கள். ஆகவே நம்முடைய நிலைமையை அறிய அவரால் இயலாது. மாக்ஸ்வெல் இந்த காலத்தவராக இல்லை. அவரது பேச்சை லேசாக எண்ண வேண்டாமென்று நிர்வாக சபையைச் சேர்ந்த இந்தியமெம்பர்களை நான் கேட்டுக் கொள்ளுகிகிறன்" (இச்சமயத்தில் ஸர் ஸப்ரு மகாநாட்டில் பிரசன்னமாகி இருந்த மேற்படி மெம்பர்களில் ஒருவரான ஸ்ரீ ஆனேயைப்பார்த்துப் பேசினர்.) "துளியும் அசைந்து கொடுக்காத அதிகார வர்க்கத்தினுல் இந்திய மகாஜனங்களுககு ஊக்கம் அளிக்க முடியாது. இது அவர்கள் யுத்தம் தான் என்ற உணர்ச்சியைக் கிளப்பமுடியாது ஐந்தாம் படையைப்பற்றிய பேச்செல்லாவற்றையும் நான் பலமாகக் கண்டிக்கிறேன்."

* * * *

பிரிட்டனுக்கு உபதேசம்

சீனத் தலைவர் சியாங் கேய் ஷேக் கல்கத்தா கவர்னர் மாளிகையிலிருந்து புறப்படுமுன் சென்றமாதம் 21-ம் தேதி இந்திய மக்களுக்கு ஒரு செய்தி விடுத்தார்.

சரித்திரத்தின் மிக நெருக்கடியான இச்சமயத்தில் மனித வர்க்கத்தின் சுதந்திரத்துக்காகப் போராட இந்திய மகா ஜனங்களும், சீன மக்களும் ஒன்று பட வேண்டுமென்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய மகா ஜனங்கள் மேலும் கோரிக்கைகள் விடுக்காமலே பிரிட்டன் இந்தியாவுக்கு உண்மையில் அரசியல் அதிகாரத்தை வழங்குமெனத் தாம் நம்புவதாகவும், அப்பொழுதுதான் ஆத்மீக லௌகிக பலத்தை இந்தியா பெருக்கிக் கொள்ள முடியுமென்றும், இந்தியாவின் கோரிக்கைக்குப் பிரிட்டன் இணங்குவதுதான் விவேகமானதென்றும் சியாங் உரைத்திருக்கிறர்.

"சுதந்திர உலகில் தான் சீனரும் இந்தியரும் தங்கள் சுதந்திரத்தைப் பெற முடியும். இவ்விரு நாடுகளுக்கும் சுதந்திரம் மறுக்கப்பட்டால் உலகின் உண்மையில் சமாதானம் ஏற்படாது"

ஒரு பிரிட்டிஷ் விமானம் இங்கிலீஷ் கால்வாயில் விழுந்து விட்டது. அப்போது விழுந்த விமானியைக் காப்பாற்ற செய்யப்பட்ட முயற்சியை நாஜி விமானிகள் தடுத்தனர். இந்த சமயத்தில் அவ்விரண்டு நாஜி விமானங்களையும் ஒரு போலீஷ் விமானி வந்து விரட்டியடித்தார். கீழே ஒரு யுத்தக் கப்பலும் இருக்கிறது இக் காட்சிகளை இப் படம் காட்டுகிறது.

(16-ம் பக்கம் பார்க்க)

ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் தமது சகோதரர் பண்டித ஜவஹர்லால் நேருவுடன் இங்கிலாந்து சென்றபோது க்ராய்டன் விமான நிலயத்தில் வந்திறங்கிய சமயம் எடுத்த படம். ஸ்ரீமதி பண்டிட் விமானத்திலிருந்து கீழே இறங்குவதைக் காணலாம்.

என் விமான யாத்திரை ★

ஸ்ரீமதி

★ ★ **விஜயலக்ஷ்மி பண்டிட்**

எழுதியது

தேக அசௌக்யம்

சந்தோஷத்தைக் கெடுக்க தேக அசௌகர்யம் ஒன்றே போதும்! எப்போதும் நல்ல சௌக்யமாகவே இருந்து வந்த ஒருவர், ஓய்வுக்காகப் போன இடத்தில் அசௌகர்யம் ஏற்பட்டால், அதைவிட வெறுக்கத் தக்கது எது இந்த உலகில்? இங்கிலாந்திலிருந்து தாய் நாடு திரும்புவதற்குச் சற்று முன்பு எனக்கு இத்தகைய நிலே இருந்தது. ஆனல் எதுவும் நிரந்தரமானதல்ல. சில அன்பு மிகுந்த நண்பர்கள் சகாயத்தினலும், நலல டாக்டர்களின் உதவியினலும் சீக்கிரத்தில் நான் சொஸ்தமடைந்தேன்.

தாய் நாடு திரும்ப ஆவல்

லண்டனை நவம்பர் மாத மூடுபனி கவிழ்ந்திருந்தது: அங்கு சீதோஷ்ண நிலே மிகவும் சீதளமாகியதும், ராஜீய நிலே கலக்கமளித்ததும் என் உள்ளத்தை உபத்ரவித்தன. அங்கிருந்து கிளம்பி விட நான் ஆசைப்பட்டேன். என் தேசத்திற்குப்போய் என் வேலேயைச் செய்ய எனக்கு ஆவல் அதிகரித்தது. சிறிது காலத்திற்கு முன்பு தான் நான் எந்த தஸ்தாவேஜிகளேப் பார்க்கவும் வெறுத்தேனே, அவை மறுபடியும் என்னே வலித்திழுத்தன: நான் பைசல் பண்ணமல் வைத்து விட்ட பல விஷயங்கள் என் மனதில் அடிக்கடி மேலிட்டன. ஐரோப்பாவில் நான் கண்ட பயங்கர காட்சிகள், என் நாடுதான் அமைதியும் இன்பமும் நிறைந்தது என்ற எண்ணத்தை என்னுள் புகுத்தின. தாய் நாடு திரும்பி, சூர்ய ரஸ்மியை அனுபவிக்கவேண்டும் என்ற கருத்துகொண்டு, சீக்கிரம் அவ்வாறு செய்வதற்கு அனுமதி கொடுக்கும்படி டாக்டர்களேக் கேட்டேன். பிரயாணம் செய்ய என்னல் இயலும் என்பதை நான் மிகுந்த பிரயாசையுடன் டாக்டர்கள் நம்பும்படிச் செய்தேன். ஆகவே நான் புறப்படுவதற்கான தினமும் குறிப்பிடப்பட்டது. அந்த நாளும் வந்தது.

விமானத்தில் புறப்பாடு

விமானத்தில் புறப்பட நான் தீர்மானித்தேன்: பிற்பகல் 1 மணிக்கு என் டாக்டர்களுடனும் சிநேகிதர்களுடனும் நான் க்ராய்டன் விமான நிலேயம் வந்து சேர்ந்தேன். நான் புறப்படவேண்டிய டச்சு விமானம், இரு பக்கமும் படர்ந்த இறக்கைகளுள்ள ஒரு பெரிய வெள்ளிப் பறவைபோல், என் முன், பிரயாணத்திற்கு ஆயத்தமாக நின்றது. நான் விமானத்திற்குள் ஏறிக்கொண்டு, என் தேக சுகத்தை பரிவுடனும் சிரத்தையுடனும் பாதுகாத்த நண்பர்களிடமிருந்து போக விடைபெற்றேன். பிரயாணிகள் யாவரும் ஏறிக்கொண்டனர்; விமானத்தின் விசையும் முடுக்கப்பட்டது: கீழிருந்து மேலே அது கிளம்பியது: விமான யாத்திரையும் ஆரம்பமாகியது. நாங்கள் ஆகாயத்தில் மேலும் மேலும் போனேம்; எங்களுக்குக் கீழே பஞ்சு போன்ற வெண் மேகக் குவியல்களேத்தான் கண்டோம். மேக மண்டலத்திற்கு மேலும் நாங்கள் புகுந்தோம்: கடைசியாக ஹாலந்து வந்து சேர்ந்தோம்: காட்சியும் வேறுபட்டது.

ஆம்ஸ்டர்டாம்

சதுரம் சதுரமாக தைக்கப்பட்ட பஞ்சு மெத்தை: அதில் ஒரு சிறிய பசும் புல் மைதானம்: அதன் நடுவில் ஒரு பொம்மை வீடு; இவைதான் நாங்கள் கீழே கண்ட காட்சிகள். விமானம் பூமியில் இறங்கியது: நாங்கள் ஆம்ஸ்டர்டாம் (Amsterdam) வந்து சேர்ந்தோம். அங்கிருந்து ஹோட்டலுக்குப் போவதற்கு

அதிக அவகாசம் பிடித்தது. சுமார் 45 நிமிஷ நேரம் மோட்டாரில் போனேம். போகும் வழி யெல்லாம் பிலியர்ட் மேஜை (Billiard Table) போல் மேடு பள்ளமில்லாமலிருந்தது: பல கால்வாய்களேயும் புல் தன்ரகளேயும் கடந்து சென்ரேம். மடி நிறைய பால் கொண்ட பெரும் பசுக்கள் அங்கு மேய்ந்துகொண்டிருப்பதையும் நாங்கள் கண்டோம். தெருக்களில் ஸ்திரீகளும் புருஷர்களும் சிறுவர்களும் சைக்கிளில் போய்க்கொண்டிருந்தனர். இதற்கு முன்பு இவ்வளவு பேர்களே நான் பார்த்ததில்லே. நாங்கள் வீதிகளில் நூற்றுக் கணக்கில் சைக்கிள்காரரை சந்தித்தோம்: எங்களுக்குத் தென்பட்ட மோட்டார்கார்கள் மிகவும் சொற்பம்.

புஷ்பங்களின் மதிப்பு

ஹோட்டலில் எனக்கு அதிக சலுகை காட்டப்பட்டது. எனக்கு பிரத்தியேக போஜனம்: என் அறை முழுதும் பல வர்ணப் புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்டது, ஐரோப்பாவில் புஷ்பம் மிகவும் கிராக்கி: விலே கொடுத்துவாங்க எல்லோருக்கும் கட்டாது: ஆகவே அழகிய புஷ்பக்கொத்தை ஒருவர் கொடுத்தால் அதை மிகுந்த ப்ரீதியுடன் பாராட்ட வேண்டும். மறு நாள் காலே வெகு சீக்கிரத்திலேயே நாங்கள் கிளம்ப வேண்டியிருந்ததால், அங்கு ஓய்வு எடுத்துக்கொண்டது எனக்கு திருப்தியைத் தந்தது.

நேபிள்ஸ் கடல்

மறு நாள் காலே 6 மணிக்கு மறுபடியும் புறப்பட்டோம். முதலில் மார்ஸேல்ஸில் (Marseilles) இறங்கி நாங்கள் காலே போஜனத்தை யருந்தினேம். அங்கு விமானக் கூடம் சமுத்திரத்திற்கு சமீபத்தில் இருக்கிறது: நீல நிறம் நிரம்பிய மத்தியதரைக் கடல் அழகும் அமைதியும் அமைந்து விளங்கியது. மீண்டும் நாங்கள் பறந்தோம். சீதோஷ்ண ஸ்திதி சரிவர இருந்தது. விமானமும் ஒரு பக்ஷிபோல் ஆகாய மார்க்கத்தில் ஆடி அசையாமல் அநாயாசமாகப் பறந்தது: படுத்துக்கொண்டிருந்த நான் விமானத்தின் போக்கைக் கொஞ்சமும் உணரவில்லே. ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்து கீழே கடல் இருப்பதைக் கண்ட பின்புதான், நாம் எங்கே இருக்கிரேம் என்று புலப்படும். இடையில் சிற்றுண்டிக்காக சொற்ப காலம் இறங்கிவிட்டு மறுபடியும் பிரயாணமானேம். சூரியன் அஸ்தமிக்கும் தருணத்தில் நேபிள்ஸ் (Naples) நகரை அடைந்தோம்: இங்கு சுங்க அதிகாரிகள் எங்களே அதிக தாமதப்படுத்தினர். ஹோட்டல் போய்ச் சேரும் போது ஆறு மணி ஆகிவிட்டது. இங்கும் ஹோட்டலில் என் அறையில் பலவித புஷ்பங்கள் நிறைந்த பூக்கூடை வைக்கப்பட்டிருந்தது. எனக்காக இரண்டு அறைகள் கொடுக்கப்பட்டன: நேபிள்ஸ் விரிகுடாவின் பூரணத் தோற்றம் என் அறையிலிருந்து கிடைத்தது!

"சௌந்தர்ய சாகரம்"

நான் மிகவும் களேத்திருந்தேன்: போய்ச் சேர்ந்ததும் படுத்துறங்க நான் பெரிதும் விரும்பினேன்: ஆனல், நான் என் அறைக்குள் போய் வெளியே பார்த்தபோது சந்திரோதயத்தைக் கண்டேன். உடனே அறைக்கு முன்புறமிருந்த பால்கனிக்கு (Balcony) வந்து, சுமார் இரண்டு மணி நேரம் அக்காக்ஷியில் மெய்ம் மறந்திருந்தேன்: சௌந்தர்ய சாகரத்தில் உண்மையிலேயே மூழ்கியிருந்தேன். பூரண சந்திரன் ஸ்வர்ணமயமான காந்தியுடன் உதயமானன்: சமுத்திர ஜலம் சோபை நிறைந்த நகைகள் போல் ஜ்வலித்தது. கடலுக்கப்பால் இருந்த வெஸூவியஸ் (Vesuvius) மலே உச்சியை சந்திர கிரணம் ஸ்பர்சித்தது: இவை யெல்லாம் ஜாலமா என்று நினேக்கும்படி அக் காட்சி இருந்தது: உடனே உட்கார்ந்தேன்:

என் கனவில் வந்தவை

அந்த சந்தியா காலத்தின் சாந்தியிலும் சௌந்தர்யத்திலும் என் ஆத்மா பரவசமாகி விட்டது. உடனே ரோமாபுரியின் பண்டைய காலச் சிறப்புகளேப்பற்றி யெல்லாம் நான் கனவு கண்டேன். இத்தகைய கனவுகளே நான் காணுகையில், இத்தாலிய தேசிய கீதமான "ஜியோவி நெட்ஸா" (Giovinettza) பாடப் படுவதை நான் செவியுற்றேன். கீழே தெருவில் நூற்றுக்கணக்கான இளேஞர்கள், பாஸிஸ்ட் உடையணிந்து ராணுவ முறையில் அணி வகுத்துச் செல்வதை நான் கண்டேன். கிராமப்புறத்திற்கு ஏதோ கொண்டாட்ட நிமித்தமாகச் சென்று, திரும்பி வந்துகொண்டிருந்தார்கள் அவ்விளேஞர்கள்! நல்ல தோற்றமுள்ள அந்த யுவர்கள். பட்டாளம் போல் வரிசையாகப் போனது, ஸ்வப்ன உலகிலிருந்து என்னே விழிப்புறச் செய்தது. பாஸிஸத்தின் கொடிய சக்தி, நியாயத்தையும் சுதந்திரத்தையும் நாசம் பண்ணி, பலத்தின் வலிமையால் ஆட்சி புரியும் சர்வாதிகார நாடு—இவையெல்லாம் உடனே என் ஞாபகத்தில் தோன்றின. தங்களேயும் அறியாமல் கொலேக் களத்திற்கு அழைத்து செல்லப்படும் ஆட்டுமந்தைக்குத்தான் இந்த இளேஞர்கள் சமம் என்று நான் எண்ணலானேன். அந்தோ! அந்த மோஹனமான மாலேயில் எனக்கிருந்த மயக்கம் மாயமாய் மறைந்தது! வேறு சில யோசனேகள் என் மனதில் இடம் பெற்றன அவற்றை வேண்டுமென்றே அலக்ஷியம் செய்யப் பிரயாசைப்பட்டேன்: சமுத்திரம் முழுதும் பரவியிருந்த அந்த பொன் மயமான சந்திரிகையைக் கண்டு சாந்திபெற விரும்பினேன். சிறிது நாழிகைக்கப்புறம்தான் என் மனம் சற்று நிம்மதிபடைந்தது. உடனே உறங்கச் சென்றேன்.

ஹோட்டலில் வழக்கம்

விமானப் பிரயாணிகளேப் பிரதி தினமும் அந்த ஹோட்டலில் எழுப்புவது வழக்கம். படுக்கைக்கு பக்கத்திலிருக்கும் டெலிபோன் மணியடிக்கிறது: உண்மையிலேயே நல்ல உறக்கம் ஏற்படும் போது அந்த மணியோசை தூக்கத்தைத் திடீரென்று கலேத்துவிடுகிறது. உடனே ஒருவர் உள்ளே வந்து, "அம்மா, மணி நான்காகிவிட்டது." என்கிருர்: விமானம் மீண்டும் 5 மணிக்கெல்லாம் புறப்படுவதால், இனி தங்கியிருக்க அதிக அவகாசமில்லே என்பதை இந்த அறிவிப்பு புலப்படுத்துகிறது. அப்போது அவசரம் அவசரமாக எழுந்து கிளம்புவதைத் தவிர வேறு வழியில்லே.

எனக்கு வரவேற்பு

மூன்ரும் தினப்பிரயாணமும் முதல் இரண்டு தினப் பிரயாணம் போல் சௌக்யமாகவே இருந்தது. ஆதென்ஸில் (Athens) இடைவேளே போஜனத்தை அருந்தினேம்: அங்கு விமானத்திற்கு வேண்டிய கரியையும் எடுத்துக்கொண்டோம். அலெக்ஸாண்ட்ரியா (Alexandria) வில் ஓர் இரவு தங்கினேம், அலெக்ஸாண்ட்ரியாவில், வாப்ட் கட்சியாரும், இந்தியர்களும் எனக்கு மனமார்ந்த வரவேற்பை அளித்தனர். அலக்ஸாண்ட்ரியாவில் பிரபல கட்சித் தலேவரின் மனேவியான ஸ்ரீமதி விஸா பே (Madame visa Bey) எகிப்து ஸ்திரீகள் சார்பில் என்னே வரவேற்றுப் பேசினர். அநேக விதமான அழகிய ரோஜா புஷ்பங்களே எனக்கு அவர்கள் அளித்தனர். அவைகளேத் தூக்கிச் செல்ல என்னல் இயலவில்லே: என்னே ஹோட்டலுக்கு ஏற்றிச் சென்ற மோட்டார்காரில் அவ்

அலஹாபாத்தில் இருக்கும் ஆனந்த பவனம். டண்டிட் மோதிலால் நேருவின் மாளிகை. இப்போது ஸ்வராஜ் பவன் என வழங்கி வருகிறது. படத்தில் கட்டிடத்தின் தென்மேற்கு புறத்தோற்றத்தைக்காணலாம். மாளிகைமீது தேசீயக்கொடி பறப்பதையும் பார்க்கலாம்,



பம்பாயைவிட்டு இங்கிலாந்துக்குக் கப்பலில் புறப்படும் சமயம் எடுக்கப்பட்ட படம். இதில் ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட், பண்டித ஜவஹர்லால் நேரு, ஸ்ரீமதி கிருஷ்ணா ஹதிசிங், ஸ்ரீமதி பண்டிட்டின் புதல்வி, ஸ்ரீ ஹதிசிங் முதலியவர்களைப் பார்க்கலாம்.

வழகிய புஷ்பங்கள் நிரப்பப்பட்டன: வழி முழுதும் அந்த சுகந்தத்தை நான் பருகினேன்.

காரணம் என்ன?

அலெக்ஸாண்ட்ரியாவிலிருந்து நாங்கள் பாஸ்ரா (Basrah)வுக்கும் போனோம்: போகும் வழியில் பாக்தாத் இருந்தது. அராபிய ராத்ரிக் கதைகள் குறிப்பிடும் பாக்தாத் அல்ல அது: மண் குடிசைகளும் அலங்கோலத் தெருக்களும் கொண்டது அது: எங்கள் மார்க்கத்தில் அதைப்போல் அதிருப்தி யளித்த இடமே கிடையாது: பாஸ்ராவில் விமானக் கூடத்திற்கருகாமையிலேயே நவீன முறையுள்ள ஹோட்டல் இருக்கிறது: உலகின் முக்கியஸ்தர்கள் அங்கு கூடுவதாக அவர்கள் விளம்பரப்படுத்துகின்றனர். முக்கியஸ்தர் ஒருவரையாவது நான் அங்கு காணவில்லை என்பதை நான் இங்கு கூறவேண்டும்: நான் அகாலத்தில் செய்த பிரயாணம் தான் அதற்குக் காரணமாகும்!

'நான்காம்' நாள் பிரயாணம்

நான்காம் நாள் பிரயாணம் நீடித்திருந்தது; அதிக களைப்பையும் உண்டாக்கியது; விடியற்காலை 4-மணிக்குள் பாஸ்ராவை விட்டு புறப்பட்ட நாங்கள் அன்றிரவு 7-45-மணிக்குத்தான் ஜோத்பூர் வந்து சேர்ந்தோம். ஆனால் சில காரணங்களைப்பற்றி இந்தப் பிரயாணம் மிகவும் ஆச்சர்யகரமானது. பொழுது விடியும் சமயம் நாங்கள் பறந்துகொண்டிருந்தோம்: சூரியன் உதய மாவதை நாங்கள் கண்டோம்: கீழே இந்து மகாசமுத்திரம் ஒரு கண்ணாடிக்குளம் போல், மிகவும் அமைதியாக ஆர்ப்பாட்டமின்றி இருந்தது. மீண்டும் இந்தியாவுக்கு வந்துவிட்டேன் என்ற எண்ணம் அன்றைய தினம் என் உள்ளத்தில் ஒருவித உணர்ச்சியை உண்டாக்கியது. நான் அதிக பரபரப்பு பூண்டேன்: மாலை 4-மணிக்கு கராச்சிக்கு வந்தோம்: இந்தியா வந்து சேர்ந்தது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது.

எனக்கேற்பட்ட உவகை

லண்டனிலிருந்து என் டாக்டர்கள் தந்தி மூலம் அறிவித்திருந்ததையும பொருட்படுத்தாமல், பல காங்கிரஸ் அன்பர்கள் என்னை வரவேற்க விமானக்கூடத்திற்கு வந்திருந்தனர். பரிச்சாந்தி விரும்பிய என்னை போட்டோ பிடிப்பவர்களும் பத்திரிகைப் பிரதிநிதிகளும் சூழ்ந்துகொண்டனர். பழைய நண்பர்களைப்பற்றி அறிவது சந்தோஷத்தையே கொடுத்தது; அதிக சிரமமிருந்ததாயினும், மறுபடியும் விமானத்தில் ஏறிக்கொண்டேன்: இந்த நிலையில் இந்தியாவில் தான் நான் இருக்கிறேன் என்ற உவகை எனக்கு உண்டு.

ஜோத்பூர் மஹாராஜாவின் ப்ரீதி

ஜோத்பூருக்கு நாங்கள் பிரயாணமானோம்: இருள் சூழ்ந்தபின் அங்கு வந்து சேர்ந்தோம். என் தேக அசௌக்யத்தைப்பற்றிக் கேள்விப்பட்டு என்னை விமான நிலயத்தில் சந்தித்து, விமான நிலய ஹோட்டலுக்கு அழைத்துப் போவதற்காக, மஹாராஜா தமது அந்தரங்க காரியதரிசியையும் மோட்டார் காரையும் அனுப்பியிருந்தார். காங்கிரஸ்காரர் உட்பட அநேகர் ஆயிரக்கணக்கில் ஒரு பொதுக் கூட்டம் கூடி எனக்கு உபசாரப் பத்திரம் கொடுக்க விரும்புவதாக என்னிடம் கூறப்பட்டது. நாள் முழுதும் பிரயாணம் பண்ணியது காரணமாகவும், எனக்கு சற்று ஜ்வரம்இருந்தது பற்றியும் நான் கூட்டத்தில் கலந்து கொள்ள சாத்தியப்படவில்லை. மிகுந்த சந்தோஷத்துடன் தாய் நாடு திரும்பிய எனக்கு, தங்களது அன்பையும் மதிப்பையும் தெரிவிக்க விரும்பியவர்களை ஏமாற்றியது, அதிக வேதனையை உண்டுபண்ணியது.

பிறப்பிடம் வந்தேன்

மறு நாள் காலை நான் அலஹாபாத் போய்ச் சேர திட்டமிடப்பட்டிருந்தது. அன்றிரவு முழுதும் அஹோராத்ரியாக இருந்தது: இந்த நிசி எப்போது கழியும் என்ற எண்ணம்தான்: கொஞ்சம்கூட தூக்கமும் கிடையாது. கடைசியாக நான்கு மணி அடித்தது! படுக்கையை விட்டு குதித்தெழுந்தேன்! என் பழைய அலஹாபாத்தை நெருங்கிவிட்டேன்! சீர்கெட்ட தெருக்கள்; தூசி தும்பு: அநேகம் குறைகள்—இவ்வளவும் அங்கு இருந்தாலும் அது என் பிறப்பிடம் அல்லவா? சீக்கிரம் அங்கு போய்ச் சேர ஆவல் கொண்டேன்: முகத்தில் ஒரு வித குறிகளையும் காட்டக் கூடாது என்று நான் முயற்சித்தேன். விமானத்தில் வழக்கம் போல் படுக்கவோ படிக்கவோ என்னால் முடியவில்லை. ஜோத்பூருக்கும் அலஹாபாத்துக்கும் இடையேயுள்ள மூன்று மணிப் பிரயாணம் விரைவில் முடியாதா? கடைசியாக "ஸ்தானத்தை கெட்டியாகப் பிடித்துக்கொள்ளுங்கள்" என்று கூறப்பட்டது தான் தாமதம், விமானம் கீழே இறங்குகிறது என்பதையும், தாயகம் வந்து சேர்ந்தேன் என்பதையும், நான் அறிந்தேன். அந்த க்ஷணம் எனக்கு எவ்வளவு ஆனந்தம்! அதிக காலம் நாடு கடத்தப்பட்டு திரும்புபவருக்குக் கூட அவ்வளவு உத்சாகம் இருந்திருக்காது! விமானம் கீழே இறங்கியது: பூமியில் வந்து சேர்ந்தது: கதவுகள் திறக்கப்பட்டன: நானும் விமானத்தை விட்டு வெளியே இறங்கினேன்.

தேசியக்கொடி தந்த திருப்தி

உணர்ச்சி மிகுந்த என் முன், அன்பான சிநேகிதர்களையும் சகாக்களையும் நான் கண்டேன்: என்னை அநேகர் கை குலுக்கி வரவேற்றனர். விமானக்கூடத்திலிருந்து வீட்டிற்கு வெகு விரைவில் வந்தேன்: சீரழிந்த தெருவைப்பற்றி நான் சிந்திக்கவே இல்லை என்பதைப் பற்றியும் எனக்கு அப்போது யோசனை கிடையாது. கடைசியாக எனக்கு உவப்பளித்தது ஒன்று தான். ஆனந்தபவனத்திற்குள் புகுந்தேன்: மூவர்ண தேசியக் கொடி மிக கம்பீரமாக மாளிகை மீது பறந்து கொண்டிருந்தது நான் செய்யவேண்டிய கடமையைச் சுட்டிக் காட்டுவதுபோல் இருந்தது: அதைப் பார்த்ததும் எனக்கு புது தைர்யம் பிறந்தது. சேரவேண்டிய இடத்தை வந்தடைத்துவிட்டேன். போராட்டமும் நீடித்திருந்தது. இந்திய சுதந்திரத்திற்காக மட்டுமின்றி, அநீதி, அக்ரமம் இவற்றில் அகப்பட்டுக்கொண்டு அல்லல் படுவோரின் விடுதலைக்காகவும் நடக்கும் பெரிய போராட்டத்தில் எனது கடமையை மேற்கொள்ள எனக்கு சீக்கிரம் சந்தர்ப்பம் சம்பவிக்கும்! நான் உடனே வேறு மனுஷியானேன், எதையும் சமாளிக்க நான் சித்தமானேன். உள்ளத்தில் உதித்த இப் புதிய சக்தியுடன் நான் ஆனந்த பவனத்தின் படிக்கட்டுகளை ஏறிச் சென்றேன். விமான யாத்திரை முடிந்தது: என் வேலையும் ஆரம்பித்தது.

Vijaya Lakshmi Pandit

அடுத்த வாரம்
"ஸ்திரீகளும் சமூகமும்"
வெளிவரும்.

பீரங்கியும் துப்பாக்கியும்

★

பிறந்தது எங்கே?

★

தி. நா. சுப்ரமணியம்

எழுதியது

★

பீரங்கிகளும் துப்பாக்கிகளும் நம் நாட்டில் தோன்றியது எப்போது? மேனாட்டாருக்குத் தெரிவதற்கு முன்பே நமக்குத் தெரியுமா? அல்லது பின்னர் தானா? — இந்தப் பிரச்னைகளுக்கெல்லாம் பதிலை இந்த வியாசத்தில் நீங்கள் காணலாம். மிகுந்த சிரமத்துடனும் சிரத்தையுடனும் செய்யப்பட்ட சர்ச்சை! அகன்ற படிப்பு காரணமாக ஆவிர்ப்பவித்த ஆராய்ச்சி! படிக்கப் பலன் தரும் கட்டுரை! நம் பண்டைய நூல்களிலிருந்து ஆதாரம் காட்டியிருக்கிறார் ஆசிரியர். பீரங்கிகளும் துப்பாக்கிகளும் தங்கள் நாசகாரியத்தை நிர்விக்கினமாக நடத்தும் இந்நாளில் அவற்றின் வரலாறு வாசகர்களுக்கு சற்று ரஸமாக இருக்கும்.

★

மக்களுக்கு விஞ்ஞான அறிவு வளர வளர அவர்கள் புதிய புதிய ஆராய்ச்சிகளை நடத்தி நூதனமான பல விஷயங்களைக் கண்டு பிடித்து வருகிறார்கள், அப்படி அவர்கள் கண்டு பிடிக்கும் விஷயங்களுள் மக்களுக்கு நன்மை பயக்கக் கூடியவை பல: அன்றி மனித சமூகத்தையே அழித்து விடக் கூடிய சக்தி வாய்ந்தனவும் உண்டு.

இப்பொழுது நடந்து வரும் உலக மகா யுத்தத்தில் சென்ற யுத்தத்தில் வழங்கி வந்தவற்றைக் காட்டிலும் பல புதிய யந்திர சாதனங்கள் உபயோகிக்கப்பட்டு வருகின்றன. படைப் பிரிவுகளுள் முக்கியமானதாக விளங்கும் பீரங்கிப் படை ஆதிகாலத்திலிருந்தே ஏற்பட்டதன்று. இனி வருங் காலத்தில் இது ஒரு கால் மற்றொன்றுக்கு முக்கிய ஸ்தானத்தை அளிக்க நேரிட்டாலும் அது ஆச்சரியமாகாது.

ஒரு காலத்தில் அம்பும் வில்லும் யுத்தத்துக்கு முக்கியமானவைகளாக இருந்தன. மற்றொரு சமயம் கத்தியும் கேடயமும் அந்த ஸ்தானத்தைக் கைப்பற்றின. இன்றைக்குத் துப்பாக்கியே அந்த ஸ்தானத்தில் இருக்கிறது என்று கூறலாம்.

சொற்கள் ஏற்பட்ட விதம்

நாம் இப்பொழுது உபயோகப்படுத்தி வரும் சொற்களான துப்பாக்கி, தோட்டா, பீரங்கி என்பன போன்றவை தமிழ்ச் சொற்கள் அல்ல. பீரங்கி என்பது போர்ச்சுகீஸிய பாஷையினின்றும் வந்தது, அதே போலத் துப்பாக்கி என்பது துருக்கி மொழியினின்றும் தோட்டாவென்பது உருது வினின்றும் வந்தவை.

இவற்றைப்பார்த்தால் துப்பாக்கி முதலிய ஆயுதங்களை ஐரோப்பியர்களே நம் நாட்டிற்குக் கொணர்ந்தனர் என்று எண்ணவேண்டியிருக்கிறது. இந்தியாவிலே முதன் முதலாக கி. பி. 1702-ம் வருஷத்தில்தான் துப்பாக்கியின் உபயோகத்துக்காக வெடி மருந்து தயாரிக்கப்பட்டது என்று கூறுகிறார்கள். அது சென்னையில் தயாரிக்கப்பட்டது. ஆயினும் ஆராய்ச்சியாளர்கள், அந்தக் குறிப்பு ஐரோப்பியர்கள் இந்தியாவில் முதன் முதலாகத் தயாரித்ததையே குறிக்கும் என்று சொல்கிறார்கள்.

'சுக்ர நீதி'

துப்பாக்கிகளையும் வெடி மருந்துகளையும் பற்றி நம் நாட்டுச் சரித்திரத்திலேயே அதற்கு முற்பட்ட காலத்திலிருந்தே குறிக்கப்பட்டுள்ளன.

சுக்ரநீதி என்று வழங்கப் பெறும் ராஜநீதி சாஸ்திரத்தில் அவற்றைப்பற்றிய குறிப்புகள் உள்ளன. துப்பாக்கிக்கு நாலாஸ்திரம் என்றபெயரும், வெடி மருந்துக்கு அக்நிசூர்ணம் என்ற பெயரும் அந்த நூலில் காணப்படுகின்றன.

சுக்ரநீதி என்பது ஒரே சமயத்தில் எழுதப்பட்ட நூல் அன்று எனவும், அவ்வப் பொழுது தொகுக்கப்பட்ட பல பாகங்களைக் கொண்டதே அந்த நூல் எனவும் ஆசிரியர்கள் கருதுகிறார்கள். அதனால் துப்பாக்கியைப் பற்றிக் குறிக்கும் பாகம் கடைசியாகச் சேர்த்த பாகமோ என்றும் சந்தேகப்படுகிறார்கள்.

துப்பாக்கி வரலாறு

இந்தியாவில் மொகலாயர்கள் ஆட்சி புரிந்த காலத்தில் அவர்கள் துப்பாக்கியை உபயோகித்து வந்தார்கள் என்று தெரிகிறது. இந்தியாவில் அந்த அரசை ஸ்தாபித்த பாபர் கி. பி. 1528-ம் ஆண்டில் கன்னோசிக்குப் பக்கத்தில் கங்கையைக் கடப்பதற்குத் துப்பாக்கி கொண்டு எதிரிகளைத் துரத்தியடித்த பிறகு தான் முடிந்தது என்று தம்முடைய தினசரிக் குறிப்பில் சொல்லியிருக்கிறார்.

ஆனால் அதற்கு முன்னமேயே தக்ஷிணத்தில் அது வழக்கில் இருந்து வந்திருக்கிறது. கூர்ஜர தேசத்தில் ஆண்டு வந்த முகம்மதிய மன்னரான முகம்மதிய பெகுரா என்பவர் கி. பி. 1482-ம் ஆண்டுக்கு அளித்தாக புல்சார் கடற் கொள்ளைக்காரர்களைத் துரத்திய யுத்த காலத்தில் வெடிகுண்டுகளைப் பிரயோகித்ததாகச் சரித்திரம் கூறுகிறது. அந்தக் காலத்திலே கப்பல்களில் உத்தியோகம் பார்த்தவர்களில் பெரும்பாலோர் செங்கடல், பாரசீகம் முதலிய பக்கங்களிலிருந்து வந்த அராபியர்களும் துருக்கர்களுமே யாவார்கள். அன்றி அந்தக் கப்பல்களில் சில சமயங்களில் போர்ச்சுகீஸியப் போர் வீரர்களும் வேலை செய்திருக்கின்றனர்: அவர்கள் மூலமாகத் துப்பாக்கி வந்திருக்கக்கூடும் என்பர் சிலர்.

அதே மன்னர் சம்பஜேர் என்னும் கோட்டையைத் தாக்கிக் கைக்கொண்ட பொழுது அதனை வெடி வைத்துத் தகர்த்தே வெற்றி பெற்றார் என்றும் கூறுவர்.

வெடி மருந்துப் பிரயோகம்

அதற்குப் பத்துவருஷ காலத்துக்கு முன்னாலே, தக்ஷிணத்தில் ஆண்டு வந்த ஸுல்தான் மஹமூது கவான் என்பவர் 1472-ம் ஆண்டில் வெடி மருந்தை உபயோகித்திருக்கிறார். அவர் இரண்டாம் முறையாகப் பெல்காம் மீது படையெடுத்துச் சென்று கோவாவையும் கைப்பற்ற விரும்பினார். ஆனால் பெல்காம் கோட்டையைச் சுலபமாகப் பிடிக்க முடியவில்லை. அரண் வலி கொண்ட அதைச் சுற்றிலும் ஆழமான அகழி இருந்தது. கட்டை முட்டைகளையோட்டு நிரப்பி அகழியைத் தூர்த்துவிட முயன்றார் சுல்தான். ஆனால் பகலில் செய்யும் வேலை முழுவதையும் கோட்டைக்குள் இருப்பவர்கள் இரவு நேரத்தில் பாழ் செய்து கட்டைகளை எடுத்து வெளியில் எறிந்து அகழியைச் சீர் செய்து விடுவார்கள். கடைசியில் வேறு வழியில்லாமல் சுல்தான் கோட்டைச் சுவரைப் போலவே அகழிக் கரையில் மற்றொரு சுவரை எழுப்பினார். அடியில் சுரங்கம் செய்து வெடி வைத்துக் கோட்டைச்சுவரை அழித்தார்.

இந்தச் செய்தியை எழுதி வைத்துச் சென்ற சரித்திர ஆசிரியர், சுரங்கம் செய்து வெடி

(28-ம் பக்கம் பார்க்க)



விமானப் படையெடுப்பு எதிர்ப்பு பீரங்கி தயாராகிறது: பீரங்கியின் மூடி எடுக்கப்பட்டு விட்டது. சுடுவதற்கு சித்தமாகிறது.

உடைந்த மனம்

★

சிறு கதை - ஸ்ரீமதி கமலா

ராஜகோபாலனைப் பார்ப்பவர்களெல்லாம் "ஐயோ! எப்படி இருந்த பிள்ளை எப்படியாகி விட்டது? அவன் பி. ஏ பாஸ் செய்தும் இன்று அவன் கதி ஓர் பிச்சைக்காரனைவிட மோசமாகி விட்டது. பாவம். அவன் தலை எழுத்து!" என்று சொல்லிக் கொள்வார்கள். இப்படி ஊர் ஜனங்களின் பரிதாபத்திற்காளான ராஜகோபாலன் ஓர் பைத்தியம்.

எல்லோரும் அவனை பைத்தியமென்று நினைத்தார்களே ஒழிய, அவனுக்கு அதனால் ஒரு விதமான துக்கமும் வேதனையும் கிடையாது, அவன் மனதில் சாந்திக்கும் அசாந்திக்கும் போராட்டம் நடக்கும்போது, அவன் முகம் போகும் வக்கிரத் தன்மையைக் கண்டு எல்லோரும் பயப்படுவார்கள். அவனுக்கு ஒருவர் பயப்படுகிறார்களென்றும், வெறுக்கிறார்களென்றும் தோன்றினால் தானே அவன் சாதுவாய் இருப்பதற்கு" அவன் 'உடைந்த மனத்தின்' பிரதி பிம்பம்தான் அவன் முகத்தில் தோன்றுவது. அவன் சங்கடத்வனி எப்பேர்ப்பட்ட தைரியசாலியையும் பயமடையச் செய்யும். ஆனால் அவனுக்கோ அந்த த்வனியில்தான் ஆறுதல், அவன் முகத்தை எவ்வளவு கோணல் செய்து கொள்ளுகிறானே அவன் உள்ளத்தில் வேதனையை அவ்வளவு சங்கடத்துடன் அடக்குகிறான் என்பது அவனுக்கல்லவோ தெரியும்,

* * * *

விச்வநாதரின் ஆதரவில் வளர்ந்தவன் ராஜகோபாலன்; விச்வநாதர் தம் மனைவியுடன் சம்சாரம் நடத்தத் துடங்கி பத்தாண்டுகளாகியும் அவருக்கு சந்தான பிராப்தி கிடைக்கவில்லை. அச்சமயத்தில் தாய் தந்தையரற்று அனாதரவாய் இருக்கும் ராஜகோபாலனை எடுத்து வந்து வளர்த்தார், காமாக்ஷியம்மாளும் அப்பையனை அன்பாயும் ஆதரவாயும் காப்பாற்றினாள். காலம் என்றும் ஒரு மாதிரி இருக்காதல்லவா?

சில விருக்ஷங்கள் அகாலத்தில் கூாய்க்கும். சில காலத்தில் காய்க்கும். சிலவற்றிற்கு காலத்துடன் சம்பந்தமே இல்லாமல் என்றும் ஒரே மாதிரி இருக்கும். இது சிருஷ்டி ரகசியம். எக்காலத்தில் எது கிடைக்கிறதோ அக்காலத்தில் அத்துடன் ஆனந்தமாய் தம்மையும் லீனப்படுத்திக் கொண்டு இருப்பது மனுஷத்வத்தின் இன்றியமையாத தன்மை.

சிலர் வயோதிகரான பின் சந்தான பிராப்தி. அவர்களுக்கு அதிலும் ஆனந்தம், சிலருக்கு விருத்தாப்ய காலத்தில் அதிரூப சுந்தரிகளான மனைவிகள். சிலர் இதைப்பற்றி பழித்தாலும் காலம் என்பது எல்லாவற்றையும் விழுங்கி ஏப்பம் விட்டுவிடும். காலதேவனுக்கிருக்கும் சக்தி எவருக்கும் இல்லை

விச்வநாதரும். காமாக்ஷியும், ராஜகோபாலனை வளர்க்கத் தொடங்கிய பின் அவர்களுக்கும் ஓர் பெண் பிறந்தாள். நல்ல கறுப்பு. "காக்காய்க்கு தன் குஞ்சு" என்பார்களே அதைப் போல் தங்கள் நம்பிக்கையை இழந்த காலத்தில் பிறந்த அந்த சிசுவை சதிபதிகள் வெகு அன்பாய் வளர்த்தார்கள். எல்லோரைவிட ராஜகோபாலனுக்குத் தான் அவள் முக்கியம் அதிகமாயிருந்தது.

'மாமு' (ராஜகோபாலன், காமாக்ஷியம்மாளை அழைப்பது) மாமா, இவர்களை விட ருக்கு, அவசியம் ராஜகோபாலனு'க்கு தான் அதிகம். தான் பள்ளியில் கற்றதை, பையன்களுடன் சண்டையிட்டதை எல்லாம் 'ருக்கு'க்கு, மாலை ஒப்புவிப்பான். அதை கேட்பதில் அவளுக்கொரு ஆர்வம். அர்த்தமற்ற பாஷையின் சுவையை அனுபவிக்கிறவர்கள் அறியாத சிறுவர்கள்தாம்.

வயதாக ஆக ராஜகோபாலன் தன்னிலையறிந்து சிரத்தையாய் படித்து உபகாரச்சம்பளம் பெற்று பி. ஏ. பட்டதாரி ஆனான். ருக்குவுக்கு அவன் மேல் அளவிடற்கரிய ஆசை. அவனுக்கோ சொல்லவேண்டியதில்லை. ஆசைக்கும் நேசத்திற்கும், கறுப்புடனும் கண் குருடுடனும் சம்பந்தமில்லை. ஆசைக்கு ரூபகுணத்துடன் சம்பத்து சாமர்த்தியத்துடன் வேலையில்லை.

ராஜகோபாலன் சமர்த்தாய் படிப்பதும், தங்கள் கைகீழ் தங்கள் சொற்படி நடப்பதுமாய் இருப்பதை பார்த்து ருக்குவை ராஜுவுக்குத்தான் 'கொடுத்து விடுவதாக சொல்லி வந்தார்கள் விச்வநாதர் தம்பதிகள். ராஜுவுக்கும், ருக்குவுக்கும், சொல்லறியா சந்தோஷம். சந்தோஷத்திற்கு சிரஞ்சீவித்துவம்தான் கிடையாதே! ! துக்கத்திற்காகிலும் சிரஞ்சீவித்துவம் உண்டு. அது உலகிற்கு நித்தியமாயிருந்தும் யாரும் அதை சரியாய் அறிந்தவர்களில்லை. காலதேவனின் மாயையில் கட்டுண்டு மயங்குகிறார்கள் மானிடர்கள். மனித ஜீவியத்தின் தத்வம் மாயையில் அடங்கி இருக்கிறது.

* * * *

காலம் யுவர்களை வயோதிகர்களாக்குகிறது. குழந்தைகளை யௌவனப் படியில் அதிரோஹிக்கச் செய்கிறது. ஆசையுள்ள ஹிருதயங்களை அதிகாசையில் கொண்டு போய் வீழ்த்துகிறது. துக்கிதர்களை நிராசை கூபத்தில் ஆழ்த்துகிறது. அநாதைகளை அடியுடன் நாசமாக்குகிறது. ஆசை பிசாசுகளை அட்டகாசத்துடன் வாழச் செய்கிறது.

'ருக்கு'வின் யௌவனம் வளர ஆரம்பித்துவிட்டது. யௌவனத்திற்கு கறுப்புடனும் வெளுப்புடனும் கலந்தாலோசிக்க வேண்டிய ப்ரமேயமில்லை. தன் நிகழ்கால செய்கைகளை செய்துக் கொண்டு போக வேண்டியது அதன் கடமை, மனிதர்கள் கடமையை விட்டு நழுவினாலும், காலமும், அதற்கேற்ற சோபையும் தங்கள் கடமையை விட்டு அணு மாத்திரமும் நழுவாது.

'ருக்கு'வின் யௌவனம் ஓர் இரண்டாம் விவாஹக்காரனின் கண்களைக் கவர்ந்தது. "பார்யா ரூபவதீ சத்ரு" என்பதை நன்கறிந்து அவர் கறுப்பான ருக்குவை கண் நிறைய பார்த்து, கை நிறைய பணம் கொடுத்து உடல் முழுதும் நகைகளால் போர்த்தி தன்னவளாக்கிக் கொண்டார்.

காலத்தை எதிர் பார்த்திருந்த ராஜகோபாலன் மனம் உடைந்தது. "இலவுக்காத்த கிளி போல் ஏக்க முற்றது மனம்" ஆசைக் கிணற்றை வெட்டி அதில் அன்பு நீர் ஊற்றை எதிர் பார்த்த ராஜகோபாலனின் வாழ்வில், தாங்கக் கூடாத அடியுடன் மனிதனை மாற்றக் கூடிய நிராசை என்னும் இடி மனதை உடைத்து விட்டது." 'கார்லைல்' 'பார்க்' 'மில்டன்' முதலியவைகளை கரதலாமலகமாய் பாடம் செய்து ஒவ்வொரு வகுப்பிலும் எத்தனையோ போட்டிகளில் ஜயமடைந்த ராஜகோபலனின் மனம் இத்தாங்கலுக்கு தாங்காமல் உடைந்தது.

ருக்குவின் கல்யாணத்தின் போது வேறுபட்ட முகமும் சங்கடத்தின் எதிரொலியும் அவனை விட்டகல மறுத்தன. அவனுடைய தென்று மனப்பூர்வமாய் நம்பின ருக்கு வேற்றாளானாள். மனித சமூகமே பார்த்து வெறுக்கும் பயங்கர சின்னங்கள் அவன் இன்றியமையாத நண்பர்களாயின.

* * * *

ருக்கு பெண்மையின் வெற்றி யடைந்தாள். கணவன் மேல் ஆசையில்லாவிடினும், பலவந்தத்தின் மேலோ, உலகின் நியதிக்குக் கட்டுப்பட்டோ, அறுவருப்புடனோ; ஆனந்தத்துடனோ, யார் மனோபாவம் யாருக்குத் தெரியும்? ஓர் மைந்தனுக்குத் தாயானாள். தனக்காக அல்லாவிடினும் தன் பிரதியங்கமாக விளங்கும் சிசுவின் மேன்மைக்காக மனமில்லா கணவனுடன் மன மகிழ்ச்சியுடன் வாழத்தலைப்பட்டாள். அவளுடைய இரும்பு ஹிருதயம் இன்றியமையாத விதம் பரிபக்குவமாகி விட்டது, ராஜகோபாலனின் ஏங்கிய உள்ளம் இகழ்ச்சிக்குப் பாத்திரமாகியது.

ஒரே வீட்டில் ஒரே படுக்கையில் படுத்து. ஒரே தட்டில் புசித்த இரண்டுள்ளங்கள் ஒன்றுக்கொன்று எவ்வளவோ தூரத்தில் ஒடுங்கி இருக்கின்றன! காலம் கஷ்டத்தையும் சுகத்தையும் மாறி மாறி கொடுத்தாலும் ராஜகோபலனின் வாழ்வில் காலத்தின் கைத்தனம் செல்லாது; என்றும் அவன் "உடைந்த" மனத்தினன். புகழ்ச்சி இகழ்ச்சியுடன் அவனுக்கு சம்பந்தமில்லை, சுகதுக்கங்களுடன் அவனுக்குச் சேர்க்கை யில்லை, பசிதாகங்களுடன் பற்றுதலில்லை, அவன் எல்லோர் கண்களுக்கும் பைத்தியம், ஆனால் அவன் காலத்தின் சுழல் காற்றில் சிக்காமல் உடைந்த மனத்தினனாய் உலகில் சுற்றி வரும் ஓர் உத்தமன்.

விச்வநாதர் தம்பதிகளுக்கு வளர்த்த பாசத்தையும் ஈன்ற அன்பையும்விட பணமோஹம் அதிகமாகி விட்டது: அவன் மனதை உடைத்தார்கள். அவர்கள் சந்தோஷப்பட்டார்கள். 'ருக்கு' பெண்மையின் உயர்வைக் காப்பாற்றினாள். ராஜகோபாலன் அன்பின முறிவினால் ஏற்பட்ட அவச்சொல்லுக்கு ஆளானான்.

"உலகமே, உன்னுடைய நிருத்யதாண்டவம்" இன்னும் எவ்வெவ்வகையில் இருக்கிறதோ? அறியக்கூடியவர்கள் யார்?"

"இது ராஜகோபாலனின் தத்வார்த்த சொற்கள். உடைந்த மனத்திலும் உலகத்தின் தன்மையைப் பற்றிய விசாரம்.

ஆசை நிராசையாயிற்று. நாம் கோருவது நடக்காமற் போய் விபரீதமானால் நாம் ஒவ்வொருவரும் வேதாந்தியாய் விடுகிறோம். வேறு வழியில்லை என்ற சமயம் வேதாந்தம் உதயமாகிறது. ராஜகோபாலன் வாழ்க்கையும் அதே விதம் தான். அவன் வைத்திருந்த ஆசாபாசம் அறுந்ததும் அவன் நிர்மலமான இதயம் உடைந்தது? உடைந்த மனம் விளைவித்தது என்ன?

CATARACT

and all Eye diseases cured radically by COCONAUT Brand LOTUS Honey World-wide Reputed and Tested.
½ Dram Re, 1 4.1 Dram Rs. 2

ULCERINE

A sovereign remedy for all sorts of Boils. Piles, Sinus, Fistulls, Carbuncles, Gangrenes, Foul-ulcers operated wounds, etc. Bottle Rs. 1-4 For these products All India Karachi Congress & Lucknow Govt. Exhibitions awarded medals Free details from:
DADHA & Co., P. T. Madras.

மிஸஸ் ச. கோ. இ.
காதர்மீரா சாயபு,
ஹெட் நர்சரி தோட்டம், சேலம் S.
ஒட்டு மாங்கன்களும், ப்ழச்செடிகளும், இங்கிலீஷ் காய்கறி, புஷ்ப விதைகளுமிருக்கின்றன. கேட்லாக் இனும்

நமது தொடர் கதை

ஸ்ரீகாந்தன்

சரத்சந்திரர் எழுதியது.

(ஸ்ரீ.கு.ப.ராஜகோபாலன் மொழிபெயர்த்தது)

முன் கதைச் சுருக்கம்

இந்திரநாதன் ஸ்ரீ காந்தனைவிட வயதில் பெரியவன். ஸ்ரீ காந்தனுக்கு அவனுடைய சிநேகத்தை சம்பாதிக்க அதிக ஆவல். இந்திரனுக்கும் ஸ்ரீகாந்தனுக்கும் தொடர்பு ஏற்பட்டது. இவ்விருவர்களும் தங்களது இளமைப் பருவத்தை மிகவும் துணிகரமாகவும் நிர்ப்பயமாகவும் சாதித்ததுடன் சமூகத்தை விரோதிக்கும் விதமாகவும் நடந்து கொள்கின்றனர். இதற்கப்புறம் ஸ்ரீகாந்தனுக்கு அவனது பழைய நண்பனான ஜமீன்தாரிடமிருந்து அழைப்புவருகிறது. அங்கு அவன் நடனம் செய்யும் பியாரியைச் சந்திக்கிறான். பியாரிக்குஸ்ரீ காந்தனிடம் விசேஷ ப்ரீதி: பிறகு அவன் வேறு இடம் கிளம்புகிறான்: வழியில் ஒரு சந்யாஸியை அவன் அடைந்து சில காலம் தங்கி விட்டு அவரிடமிருந்து பிரிகிறான். ஸ்ரீகாந்தனுக்கு தேக அசௌக்யம் ஏற்படுகிறது. இந்தச் செய்தியை யறிந்து பியாரி அவனது உதவிக்கு வருகிறாள். பியாரி ஸ்ரீகாந்தனை தன் வீட்டிற்கு அழைத்துச் செல்ல, அங்கிருந்து சொஸ்தமான பின் அவன் கிளம்புகிறான். ஒரு நாள் விவாக சம்பந்தமாக ஒரு கடிதம் கிடைக்க, அதை எடுத்துக் கொண்டு அவன் கிளம்பி முடிவில் பியாரி வீட்டிற்குப் போய் அங்கு குதூஹலத்தைப் பார்க்கிறான். பிறகு அவன் பியாரிடம் தன் விவாகம், ரங்கூன் பிரயாணம் இவற்றைப் பற்றி சம்பாஷித்து விடைபெற்று கப்பலேறிக் கிளம்புகிறான். கப்பலில் அவனுக்குப் பலருடன் பழக்க மேற்படுகிறது. ரங்கூன் போய்ச் சேர்ந்ததும் அவனுக்கு ஏற்படும் அனுபவம் விநோதமாக இருக்கிறது. அங்கு அவன் உத்யோகத்திற்காக அலைந்த பின் அதை சம்பாதிக்கிறான். இதனுடன் தான் கப்பலில் சந்தித்த அபயாவின் புருஷனைக் கண்டு பிடித்து, அவன் அபயாவை ஏற்கும்படி வழி தேடுகிறான். பிறகு அபயாவை ஸ்ரீகாந்தன் சந்தித்தபோது அவள் அவனிடம் பல சீரிய கருத்துகளை வெளியிடுகிறாள். ராஜலக்ஷ்மியிடமிருந்து ஒரு கடிதம் வர ஸ்ரீகாந்தன் ரங்கூனைவிட்டு புறப்பட்டு அவளிடமே வந்து சேருகிறான். அவர்கள் இருவருக்குமிடையே ரசமான சம்பாஷணை நடக்கிறது.

நான் மௌனமாகி விட்டேன். அதற்கு மேல் கேள்வி பதில்களுக்கு இடமேற்படவில்லை.

இரவு ராஜலக்ஷ்மி என்னிடம் "பங்குவின் கலியாணத்திற்கு இன்னும் பத்துப் பனிரண்டு நாட்களிருக்கின்றன. வா, காசிக்குப் போய் என் குருதேவருக்கு உன்னைக் காட்டி விட்டு வருகிறேன்" என்றாள்.

நான் சிரித்துக்கொண்டே "நான் என்ன கண் காட்சி வஸ்துவா?" என்றேன்.

"அதெல்லாம் காட்டுகிறவர்கள் யோசிக்க வேண்டிய விஷயம், உனக்கென்ன?" என்றாள்.

"அதனால் எனக்கென்ன லாபம்? குருதேவருக்கு என்ன லாபம்?"

ராஜலக்ஷ்மி கம்பீரத்துடன் "உங்களுக்கு லாபமில்லாவிட்டாலும் எனக்கிருக்கிறது. எனக்காக வருவாயல்லவா?" என்று கேட்டாள்.

நான் சம்மதித்தேன்! எதிர் காலத்தில் வெகு காலம் வரையில் வேறு நல்ல முகூர்த்தமில்லாததால் எங்கு பார்த்தாலும் விவாகத்தின் பேச்சு. நடு நடுவே பாண்டு முழக்கமும் மற்ற வாத்தியங்களின் முழக்கமும் மனிதனைப் பைத்தியமாக்கும் முறையில் முழங்கின. நாங்கள் ஸ்டேஷனுக்குப் போகும் வழியில் இந்த மாதிரி பல வாத்திய முழக்கங்கள் வெகு மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. சப்தம் கொஞ்சம் அடங்கினதும் ராஜலக்ஷ்மி சட்டென்று "சரிதான், நீ நினைத்தபடி எல்லாம் நடைபெறுகிறது. என்றால் பிறகு கலியாணம் கார்த்திகை எதற்கு? வீடு வாசல் குடும்பம் என்பது எதற்கு? பிறகு வாழ்க்கையில் என்ன தான் இருக்கிறது?" என்றாள்.

அப்பொழுது அவள் தொனியிலும் தோற்றத்திலும் தென்பட்ட காம்பீரியத்தைக் கண்டு நான் சிரித்துவிட்டேன்.

"வாழ்க்கை எங்கே கெட்டுப் போய்விடுமோ என்றும், அதை எப்படிப் பாதுகாப்பது என்றும், நீ கவலைப்படவேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் என்னைப் போன்ற சுபாவம் கொண்டவர்கள், உலகத்தில் அதிகமாக இருக்கமாட்டார்கள். அதுவும் நம் தேசத்தில் இல்லவே இல்லை" என்றேன்.

"இல்லாமலிருப்பது நல்லது தான்! பெரிய மனிதர்கள் தானா மனிதர்கள்? ஏழைகள் என்பதற்காக அவரவர்கள் குடும்பத்தை விட்டுவிட்டா போய்விடுகிறார்கள்? குழந்தை குட்டிகளுடன் குடும்பத்தை நடத்தும் ஆனந்தத்தைப் பெறுவது சாத்தியமில்லையா?"

"உலகத்தில் நிறைய நாம் பெறக்கூடிய ஆனந்தம் இருக்கலாம். அதைப் பெறுவதற்கான பொருள் வசதி ஏன் இல்லை, கொஞ்சம் சொல் பார்ப்போம்!"

சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டு நான், "வெறும் ஏழைகளைப்பற்றி என் அபிப்பிராயம் அப்படியில்லை. ஏழைகளுக்கும் பெரிய மனிதர்களுக்குமிடையே ஏற்படும் சம்பந்தத்தைப்பற்றித்தான் எனக்கு இந்த அபிப்பிராயம். அதற்குக் காரணமென்னவென்று உனக்குத் தெரியுமென்றே நம்புகிறேன்" என்றேன்.

"உன் எண்ணம் தப்பு" என்று அவள் எதிர்க்கும் குரலில் சொன்னாள். எனக்கும் கோபம் வந்து விட்டது.

"அது எவ்வளவு பிசகாயிருந்தாலும், நீ சொல்லும் வார்த்தைகளிலிருந்து மட்டும் அதற்குப் பலம் ஏற்படாது. பங்குவினுடைய தகப்பனார் பணத்தாசையின் பேரில் உன்னுடைய இரண்டு சகோதரிகளையும் சேர்ந்தாற்போல் கலியாணம் செய்து கொண்டது இன்னும் நிரம்பப் பழைய விஷயமல்ல. உனக்கு நினைவிருக்காலாம், மேலும் நினைத்துப்பார். அவர்களை நீ சம்ரட்சிப்பதும் இரண்டு மூன்றுகுழந்தைகளை நீ வளர்ப்பதும் பணமில்லா விட்டால் உன்னால் எப்படி முடியும்?" என்று கேட்டேன்.

ராஜலக்ஷ்மியின் கண்களில் கலகத்தோற்றம் மூண்டு விட்டது.

"பகவான் தான் சிருஷ்டிக்கும் ஜீவன்களை தாமே பாதுகாப்பார். நீ நாஸ்திகன். ஆகையால் இதை நம்பமாட்டாய்." நானும் விட்டுக் கொடுக்காமல். "நான் நாஸ்திகனாக இருக்கலாம். ஆனால் ஆஸ்திகர்களுக்கு மட்டும் கடவுள் இதற்காகத்தான் இருக்கிறாரா? இவ்வளவு குழந்தைகளையும் பெரியமனிதர்களாக்க அப்படித்தானே" என்றேன்.

ராஜலக்ஷ்மி கோபக்குரலில் "அவா தான் சம்ரக்ஷிக்கிறார். ஆனால் நான் உன்னைப்போல பயங்கொள்ளி அல்ல. வீட்டுக்கு வீடு பிச்சை எடுத்தாவது நான் அவர்களை வளர்த்திருப்பேன்" என்றாள்.

நான் அதற்கு மேல் ஒன்றும் தர்க்கம் செய்யவில்லை.

விவாதம் மிகவும் முற்றி நேர்முகமாகப் போய்விட்டதால், ஜன்னல் வழியாகத் தெருவைப் பார்த்துக்கொண்டு, மௌனமாக இருந்தேன்.

எங்கள் வண்டி சர்க்கார் காரியாலயங்களையும் இதர ஆபீஸ்களையும் தாண்டிக்கொண்டு வெகுதூரம் போய் விட்டது. அன்று சனிக்கிழமை. இரண்டு மணிக்கு மேல் பல ஆபீஸ்

ஜஹ்ஞரா

"ஸஸாங்கமணி" எழுதியது

2-ம் காட்சி

முதல் அங்கம்

தாஜ் மஹால் : மாலை.

ஜஹ்ஞர் ஷாஜஹானை பிடித்துவர, ஷாஜஹான் தள்ளாடிக் கொண்டும் பெரு மூச்சு விட்டுக் கொண்டும் பிரவேசிக்கிறன்.

ஷாஜஹான்:—மும்தாஸ், என்னையும் உன்னுடைய குழந்தைகளையும விட்டுச் சென்ருய்! இம் மொகலாய சாம்ராஜ்யத்தின் கௌரவமும், மதிப்பும் உன் காலகளைப் பற்றின போலும்! மும்தாஸ்! நாம் குழந்தைகளை ஒருவருக்கொருவர் சண்டை செய்துக் கொண்டும், ஒருவர் மேல் ஒருவர் பொருமை கொண்டு போர் புரிவதையும் இந்தத் தள்ளாத வயதில் பார்த்து மனம் புண்படவா விட்டுச் சென்ருய்?

ஜஹ்ஞர்:—அப்பாஜான்! நடந்தது நடந்தேறிவிட்டது. இனி வருத்தப்பட்டு என்ன பயன்?

ஷாஜஹான்:-ஜஹ்ஞர்! நான் இம்மொகலாய சக்கிரவர்த்தியினால் சிறை பட்டு, கையில் விலங்குடன் என் அருமை மனைவிக்காக கட்டிய மஹாலை காண வந்தால் என் மனம் சகிக்க முடியுமா? அல்லது சாந்தி தான் அடைய முடியுமா? ஆம்—நான் என் தகப்பனுரை துன்புறுத்தினேன். அது தன் செயலைக் காட்டிவிட்டது. "தன் வினை தன்னைச் சுடும்" என்பது சரியாகிவிட்டதல்லவா? மும்தாஸ்! உன்னை எல்லோரும் போற்றுவார்கள். எந்த துக்கத்திலும், எந்த கஷ்டத்திலும், மனதை புண்ணுக்கிக் கொண்ட ஒருவன் உன் மஹாலைக் காண வருவாஞகில, அவனுக்கு உடனே மனச் சாந்தி உண்டாவது திண்ணம்! ஆனல—ஆனல் உன்னை இக் கௌரவத்திற்கு ஆளாக்கிய எனக்கு மனச்சாந்தி உண்டாகுமா?—ஆகா—உலகம் புகழும் மாளிகையில் அடைக்கலம் புகுந்த ஆவித் துணைவியே! உன மஹாலைக் கண்டாலும் என் கவலை ஆறவில்லையே! என்னை ஏன் உன்னுடன் அழைத்துச் செல்ல மறுத்து விட்டாய்? இப்பாவி தன் கண்களால் தன்னுடைய செல்வக் குமாரர்கள் சண்டையிட்டு ரத்தம் சிதறவும், அதில் ஒருவன் சிம்மாசனம் ஏறி என்னை இத் துன்பத்திற்கு ஆளாக்கியதைக் காண என் மனம் பதறுகிறதே.

ஜஹ்ஞர்:—அப்பாஜான்!.....!

ஷாஜஹான்:— ஜஹ்ஞர்! ஜஹ்ஞர்!! இனி உனக்கு தாயேது? தந்தையேது? இனி மேல் இவ்வுயிரை வைத்துக் கொண்டும் காப்பாற்றியும் ஆகும் பயனென்ன? யார்?—யாரங்கே?— மும்தாஸ்—மும்தாஸ்—வந்தனையா?—வா—என்னை அழைத்து செல்ல வந்தனையா?—ஏன் முகம் வாடியிருக்கிறது. உன்னுடைய குமாரர்கள் சண்டையிட்டு மாண்டதற்காகவா? (சிரிக்கிருர்) மும்தாஸ் ஒரு காலத்தில் இதோ இப்பாவி செய்ததை மறந்தனையா? நான் செய்த வினைக்கு இப்பொழுது அனுபவிக்கிறேன் மும்தாஸ்—என்ன? என்னை அழைத்துப் போக மாட்டாயா? ஆம்"ஆம் என் மேல் எப்படி உனக்கு வாஞ்சை இருக்கும். நான் ஷிராஸை அநியாயமாய் உன்னை விட்டு பிரித்ததுமன்றி, நாட்டை விட்டும் துரத்தி விட்டேன்—ஆம்—(சிரிக்கிருர்) ஸபாஷ்! ஷாஜஹான் உன்னை உலகம் போற்றினலும் உன்னுடைய சொந்தக் குமாரர்கள் உன்னை போற்றவில்லையே, இதோ...இதோ......

ஜஹ்ஞர்;—அப்பாஜான்! அப்பாஜான்!!

ஷாஜஹான்:—மும்தாஸ்! மும்தாஸ்!! நில், நில் இதோ வருகிறேன் அழைத்துச் செல். (இறக்கிருன்)

ஜஹ்ஞர்:—அப்பாஜான்! அப்பாஜான்!! தமையன் தாராவும், நீங்களும் தான் என்னை அன்புடன் ஆதரித்து வந்திர்கள். தாராவோ அவுரங்கஜீப்பினல் அநியாயமாய்ச் சிறையாக்கப்பட்டார். தாங்களாவது என்னை ஆதரித்துத் தேறுதல் கூறுவீர்கள் என்று நினைத்திருந்தேன—நீங்களும் இறந்த பிறகு இனி வாழ்ந்து ஆகும பயனென்ன? இதோ—இதோ நானும தங்களைப் பின் பற்றுகிறேன்.

[கத்தியினல் குத்திக் கொண்டு இறக்கப் போகும் சமயத்தில் ஓர் பக்கிரி வந்து அவள் கையைப் பிடிக்கிருன்]

பக்கிர்:—பேடி! என்ன காரியம் செய்யக் துணிந்தாய்? உன்னல் இவ்வுலகத்திற்கு என்ன ஆகவேண்டுமோ? நீ ஜீவித்திருப்பதால் உன பெருமை வளருமோ என்னவோ, யார் கண்டார்கள்? அல்லது உனக்கு விதித்திருக்கும் விதி என்ன? நீ செய்யும் காரியமென்ன?

ஜஹ்ஞர்:— பாபா! நீங்கள் யார்? என்னை ஏன் நீங்கள் தடுக்கிறீர்கள்? வேண்டாம், என்னை விட்டுச் செல்லுங்கள்.

பக்கிர்:—பேடி! என்னை யார் என்று தெரியவில்லையா? உற்றுப் பார்!

ஜஹ்ஞர்:—ஆ! நீங்கள் ஒரு காலத்தில் அம்மாவின் அன்புக்கே பாத்திரமாய் இருந்த ஷிராஸ் அல்லவா. நீர்?

ஷிராஸ்:— ஆம் பேடி, உன் தந்தை-இதோ இருக்கும் இவர்-உன்மாதாவை மணப்பதற்குமுன் என்மேல் வாத்சல்யமாகவே இருந்தாள், எங்களுடையது காதல் அல்ல. தெய்வீகமான சிநேகமே; இதை அறிந்த உன் தந்தை என்னை நாட்டைவிட்டு அகலச் செய்தார். ஆனல் உன் மாதா இறந்த செய்தியை கேட்டவுடன் அவள் மீதில் எனக்கு இருந்த பாசமும் அன்பும் என் கால்களை இங்கு இழுத்து வந்தன. எது இருந்தாலும் இத்துணிகர செயலுக்கு உன் மனதை ஆளாக்காதே; ஜனனவிற்கு சொல்.

[ஜஹ்ஞர் போக, பக்கீர் பாடிக்கோண்டே மற்றெரு புறம் செல்கிருன்.]

இரண்டாம் அங்கம்

பவானீ கோயில் : மாலை.

மகாராஷ்டிர வீரர்கள் ஒருவர் ஒருவராய் வருவதும் போவதுமாய் கோயிலை சுற்றுவதும், ஓர் மூலையில் நன்கு ஸ்தோத்திரம் செய்வதுமாய் இருக்கிருர்கள். தாஞஜி வருகிருர். எல்லோரும் வணங்குகிருர்கள். தாஞஜி பவானியை துதிக்க எல்லோரும் அதில் கலந்துகொள்ளுகிருர்கள். சிவாஜி பிரவேசிக்க எல்லோரும் "சத்ரபதி சிவாஜிக்கு ஜே" என ஆர்வம் இடுகிருர்கள். சிவாஜி நெருங்கி பவானியை துதித்துவிட்டு எல்லோரையும் பார்த்து,

சிவாஜி:—பிரஜைகளே, நாம் இவ்விடம் உங்களைக் காண மிகவும் ஆவல் கொண்டு இருந்தோம். இப்பொழுது அது நிறைவேறியதற்கு மிகவும் சந்தோஷம். ஒருக்கால் நாம் உங்களை எதற்காக காண விரும்பினேம் என்று நீர் நினைக்கக்கூடும். உங்களுக்கு எல்லாம் தாஞஜி எடுத்து உரைப்பார். நான் சிறிது ஜகதாம்பிகையைத் துதித்துவிட்டு வருகிறேன்.

(அச் சமயம் துக்காராம் பாடிக் கொண்டுவர, சிவாஜி அவரை புலித் தோலின் மேல் அமர்த்தி, பவானியை துதித்து பஜனை செய்யும்படி செய்கிருர். எல்லோரும் ஆனந்த பரவசம் அடைகிருர்கள். ஜனை நிற்கிறது. துக்காராம் போகிருர்.)

மோகலாய சக்ரவர்த்தி ஷாஜஹானின் அந்திம காலம்: படுத்த படுக்கையாக ஷாஜஹான் இருந்த சமயம் அவருக்கு சிச்ருஷை புரிந்தவள் அவரது ப்ரிய குமாரியான ஜஹ்ஞரா: தகப்பனின் மனங் கோணாத விதம் ஹிதமாக நடந்து வந்தாள் அவள்: சக்ரவர்த்தி சாதுந்த்ருவாயிலிருக்கையில் கவலை தரும் செய்திகள் அவரிடம் வந்தன: பிள்ளைகள் ஒவ்வொருவரும் படையெடுக்க வாரம்பித்தனர்: தகப்பனையும் மீற முற்பட்டனர்.

தாஞஜி:—சகோதரர்களே! நாம் நம்முடைய கடமைகளை ஆலோசித்து செய்வதுமன்றி நம் தேசத்தையும் நலத்தையும் ஒழுக்கத்தையும் ஒரு கேடும் வராமல் பார்ப்பது நம்முடைய கடமை. இதற்கு நாம் வேறு அத்தாட்சி கூற வேண்டியது இல்லை. பகவத்கீதையே ஒரு வழி காட்டியாகும். தர்மத்தைக் காப்பது உங்கள் முதல் கடமையாகும்: அதை எப்படி காக்க வேண்டுமென்று கேட்கலாம். நாம் அதைரியப்படக்கூடாது. யுத்தமே க்ஷத்ரியர்களுக்கு தர்மமாகும்! எப்படி என்றல் யுத்தம் புரிந்தால் ஜயம் உண்டாகும், ஜயம் அடைந்தால் ராஜ்யம் வரும்: ராஜ்யம் வந்தால் தனம் உண்டாகும்: தனத்தினல் தேசத்தில் தர்மங்கள் அபிவிருத்தியாகும்: யுத்தம் செய்தலே க்ஷத்ரியர்களுக்கு அழகு: யுத்தம் செய்து எந்த க்ஷத்திரியன் இதுவரை சுகப்படவில்லை. யுத்தத்தினல் ராஜ்யங்களை சம்பாதித்து தான தருமங்கள் செய்து ஸ்வர்க்க போகத்தை அடையலாம். இல்லையேல், வீர ஸ்வர்க்கம பெறலாம். யுத்தத்தைக் கண்டு எந்த க்ஷத்ரியனுவது பயந்து ஓடினல் கேவலம் ஸ்திரிகளைவிட அதமனுவான். அவனுக்கு இகபர சுகங்கள் யாவும் கிட்டா. யுத்தம் செய்தால் செய்யுங்கள். இல்லையேல் போங்கள். தோல்வியிலும் ஜயத்திலும் ஓரே மனதுடன் எதற்கும் அஞ்சாமல் போர் புரிய வேண்டும்; அப்படி செய்தால்தான் நமக்கு பாவம் கிட்டாது. நலத்தை காக்க தீமை செய்பவர்களை ஒழிக்கவேண்டும்; எப்பொழுது நல்லது அழிய தலை காட்டுகிறதோ அப்பொழுது கெட்டது தலை தூக்கி விரித்து ஆடும். எல்லா பொறுப்பையும் ஆண்டவன்மீது போட்டு உங்களுடைய எண்ணங்களை அவன்மீதே இருக்கச் செய்து, அகம்பாவம் சுயநலம் இரண்டையும் விட்டு போரில் இறங்குங்கள். உங்கள் கௌரவத்தை அதிகரிக்கச் செய்யுங்கள். சத்ருக்களை ஜயியுங்கள். ராஜ்யத்தைப் பெறுங்கள். நம் மனைவி மக்களை அஞ்சி நடுங்கி பயந்து சாகவிடுவதா? நாம் வீரமற்றவர்களா? எழுந்திருங்கள், ஒன்ருய் சேருங்கள்; விரோதிகளின் ஆதிக்கத்தை ஒழியுங்கள். ஜேய் பவானி! எல்லோரும்.

(ஒரு சேவகன் வருகிருன்)

சேவகன்:—மகராஜ்!

சிவாஜி:—என்ன விசேஷம்?

சேவகன்:—பீஜபூரில் அதில் ஷா தங்கள் மீது படையெடுக்க ஏற்பாடுகள் செய்துக் கொண்டு இருக்கிருர் என்று நம் வேவுகாரர்கள் வந்து கூறுகிருர்கள். அதுவும் அல்லாமல் அப்சல்கான் தங்கள்மீது மிகவும் வெறுப்புடையவனய் தன் பகமையை தீர்த்துக்கொள்ள சமயம் பார்த்துக் கொண்டு இருக்கிருன்.

சிவாஜி:—ஆ! இவ்வளவு முற்றிவிட்டதா! தாஞஜி நம் சேனையை ஒன்று கூட்டி எதற்கும் ஆயத்தமாய் இருக்கச் செய்.



இரண்டு பிரசித்த சகோதரர்கள்.

(இடது) அட்மிரல் ஸர். ஆண்ட்ரு கன்னிங்ஹாம், மத்தியதரக் கடலில் பிரிட்டிஷ் கடற்படைத் தலைவர். (வலது) லெப்டினன்ட் ஜனரல் ஸர் ஆலன் கன்னிங்ஹாம் பிரிட்டிஷ் தரைப் படை தளகர்த்தர்.

(வலது படம்)

ரர்வ்பஹதூர் ஸி. கருணுகரன் நாயர்; இந்திய ஸர்க்கார் போலீஸ் இலாகாவில் உயர் பதவிக்கு மாற்றப்பட்டிருக்கிருர். (பி. என். ஏ.)



சீன தளகர்த்தருக்கு வரவேற்பு

புது டில்லி வந்திருக்கும் சீன தளகர்த்தர் சியாங்கே ஷேக்குக்கும் அவரது மனைவிக்கும் ராஜப் பிரதிநிதி உபசாரம் நடத்தி வைத்தார். வைஸ்ராய் மாளிகையில் அதிதிகள் உலாவும் காட்சி.

ஸ்ரீகாந்தன்

சரத்சந்திரர் எழுதியது.

(ஸ்ரீ.கு.ப.ராஜகோபாலன் மொழிபெயர்த்தது)

முன் கதைச் சுருக்கம்

இந்திரநாதன் ஸ்ரீ காந்தனைவிட வயதில் பெரியவன். ஸ்ரீ காந்தனுக்கு அவனுடைய சிநேகத்தை சம்பாதிக்க அதிக ஆவல். இந்திரனுக்கும் ஸ்ரீகாந்தனுக்கும் தொடர்பு எற்பட்டது. இவ்விருவர்களும் தங்களது இளமைப் பருவத்தை மிகவும் துணிகரமாகவும் நிர்ப்பயமாகவும் கழித்ததுடன் சமூகத்தை விரோதிக்கும் விதமாகவும் நடந்து கொள்கின்றனர். இதற்கப்புறம் ஸ்ரீகாந்தனுக்கு அவனது பழைய நண்பனை ஜமீன்தாரிடமிருந்து அழைப்புவருகிறது. அங்கு அவன் நடனம் செய்யும் பியாரியைச் சந்திக்கிறான். பியாரிக்கு ஸ்ரீ காந்தனிடம் விசேஷ ப்ரீதி: பிறகு அவன் வேறு இடம் கிளம்புகிறான்: வழியில் ஒரு சந்யாஸியை அவன் அடைந்து சில காலம் தங்கி விட்டு அவரிடமிருந்து பிரிகிறான். ஸ்ரீகாந்தனுக்கு தேக அசௌக்யம் எற்படுகிறது. இந்தச் செய்தியை யறிந்து பியாரி அவனது உதவிக்கு வருகிறாள். பியாரி ஸ்ரீகாந்தனை தன் வீட்டிற்கு அழைத்துச் செல்ல, அங்கிருந்து சொஸ்தமான பின் அவன் கிளம்புகிறான். ஒரு நாள் விவாக சம்பந்தமாக ஒரு கடிதம் கிடைக்க, அதை எடுத்துக் கொண்டு அவன் கிளம்பி முடிவில் பியாரி வீட்டிற்குப் போய் அங்கு குதூஹலத்தைப் பார்க்கிறான். பிறகு அவன் பியாரிடம் தன் விவாகம், ரங்கூன் பிரயாணம் இவற்றைப் பற்றி சம்பாஷித்து விடைபெற்று கப்பலேறிக் கிளம்புகிறான். கப்பலில் அவனுக்குப் பலருடன் பழக்க மேற்படுகிறது. ரங்கூன் போய்ச் சேர்ந்ததும் அவனுக்கு எற்படும் அனுபவம் விநோதமாக இருக்கிறது. அங்கு அவன் உத்யோகத்திற்காக அலைந்த பின் அதை சம்பாதிக்கிறான். இதனுடன் தான் கப்பலில் சந்தித்த அபயாவின் புருஷனைக் கண்டு பிடித்து, அவன் அபயாவை எற்கும்படி வழி தேடுகிறான். பிறகு அபயாவை ஸ்ரீகாந்தன் சந்தித்தபோது அவள் அவனிடம் பல சீரிய கருத்துகளை வெளியிடுகிறாள். ராஜலக்ஷ்மியிடமிருந்து ஒரு கடிதம் வர ஸ்ரீகாந்தன் ரங்கூனைவிட்டு புறப்பட்டு அவளிடமே வந்து சேருகிறான். அவர்கள் இருவருக்குமிடையே ரசமான சம்பாஷணை நடக்கிறது. சில தினங்களுக்கப்புறம் இருவரும் யாத்திரை கிளம்புகின்றனர். ஸ்ரீகாந்தன் மனோநிலை வேறுபடுகிறது. ஸ்ரீகாந்தன் தனியே புறப்பட்டுப் போய், ஊரில் தேக அசௌக்கியமடைகிறான். அந்நிலையில் அவன் ராஜலக்ஷ்மிக்குக் கடிதம் எழுத அவள் அவனுக்கு சகாயம் புரிய உடனே அங்கு வந்து சேருகிறாள். ராஜலக்ஷ்மி அவனிடம் காட்டும் ப்ரீதி மிகவும் அபாரமானது.

3 வது பாகம்

1

நான் சொன்னதைக் கேட்டு டாகுர் தாதா கொஞ்சம் சிரித்தார். ராஜலக்ஷ்மி நமஸ்காரம் செய்ததும் திடுக்கிட்டுப் போய் கால்களைப் பின்னால் நகர்த்திக்கொண்டு "அப்படியா? ஆஹா! பேஷ்! பேஷ்! ரொம்ப நாள் சௌக்கியமாக இருங்கள்" என்று சொல்லி விட்டு ஆச்சரியத்துடன் டாக்டரைக் கூட்டிக் கொண்டு வெளியே போய் விட்டார். அப்பொழுது நான் ராஜலக்ஷ்மியின் முகத்தில் பார்த்த சித்திரத்தை இன்றும் மறக்கவில்லை. மறக்கவும் முடியாது. அது தனியாக என்னிடமே இருக்க வேண்டியதுதான் என்று நினைத்தேன். வெளியுலகம் அதை ஒரு நாளும் அறியாது என்று எண்ணியிருந்தேன். ஆனால் இப்பொழுது, இவ்வளவு நாள் என்னுள் அடைபட்டுக் கிடந்ததை நானே திறந்து விடுகிறது நல்லது என்று தோன்றுகிறது. அந்த ரகசியத்தை வெளியில் இருப்பவர்கள் பல வேறு விதமாக தப்பாகத் திரித்து அடைவதைக் காட்டிலும நான் என் கையாலேயே அதை வெளியிடுவது நல்லது என்று கருதுகிறேன்.

டாகுர் தாதா வெளியே போனதும் ராஜலக்ஷ்மி கணநேரம் ஸ்தம்பித்துப்போய் அவரைப் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு முகத்தைத் தூக்கி சிரிக்க முயன்று விட்டு "பாத தூளியை ஏற்றுக்கொள்வதற்குக்கூட அவர் எனக்குச் சாவகாசம் அளிக்கவில்லையே? ஆனால் நீ அவரிடம் எதற்காக அப்படிச் சொன்னாய்? அதற்கு அவசியமே இல்லையே? இதனால்...இதனால்... நீயே தான் நம்மை அவமதித்துக் கொண்டாய்? இதற்கொன்றும் அவசியமிருக்கவில்லை. தெருவில் திரியும் பாயிஜீயைக் காட்டிலும் விதவையாக இருந்து மறுபடியும் கலியாணம் செய்து கொண்டவளை இவர்கள் அதிகமாக மதிக்கப்போவதில்லை. நான் இன்னும் மதிப்பற்றவளாகத்தான் போனேன். யாருடைய மதிப்பிலும் நான் உயரப்போவதில்லை—" என்பதற்குமேல் அவளால் சொல்ல முடியவில்லை

எல்லாம் எனக்கு விளங்கிவிட்டது. அவமானம் அடைந்து போன அவள் முன்னால் மேலும் பெரிய வார்த்தைகளைப் போட்டுப் பேச எனக்கு விருப்பமில்லை. ஆகையால் நான் மௌனமாக முன்போலவே படுத்திருந்தேன்.

ராஜலக்ஷ்மியும் வெகு நேரம் ஒன்றும் பேசவில்லை. அவளும் ஏதோ ஆழ்ந்த யோசனையில் ஈடுபட்டுப் போயிருந்தாள். அருகில் யாரோ கூப்பிடுவதைக் கேட்டு தூக்கி வாரிப் போட்டது போல விழித்துக்கொண்டாள். ரதனை உள்ளே கூப்பிட்டு "வண்டியைச் சீக்கிரம் தயார் செய்யச் சொல், ரதன்! இல்லாவிட்டால் இரவு பனிரண்டு மணி வண்டிக்குத்தான் போகமுடியும். அது மிகவும் கஷ்டம். குளிரும் பனியும் ஜாஸ்தியாக இருக்கும்" என்றாள்.

பத்து நிமிஷத்திற்கெல்லாம் ரதன் என் பெட்டியைக் கொண்டு போய் வண்டியில் வைத்தான். பிறகு என் படுக்கையைக் கட்டிக்கொண்டு போய் வைப்பதற்கு ஜாடையாகப் பக்கத்தில் வந்து நின்றான். நான் ஒரு கேள்வியும் கேட்கவில்லை. எங்கே போக வேண்டும், என்ன செய்யவேண்டும்.-ஒன்றும் கேட்காமல் வாயை மூடிக்கொண்டு மெள்ள மெள்ள போய் வண்டியில் ஏறிக்கொண்டேன்.

சில நாட்களுக்குமுன் ஒரு நாள் பிற்பகல் தான் என் வீட்டிற்குள் வந்தேன். அதே சாயங்கால வேளையில் வீட்டை விட்டு இப்பொழுது வெளியேறினேன். அன்றும் யாரும் என்னை ஆதரவுடன் வரவேற்கவில்லை—இன்றும் யாரும் அன்புடன் வழியனுப்பவும் வரவில்லை. அன்று நான் கிராமத்திற்கு வந்த பொழுது ஒவ்வொரு வீட்டிலும் சங்கு முழங்க ஆரம்பித்த சமயம். அதேபோல இன்றும வஸுமல்லிக்குகளுடைய கோபால மந்திரத்திலிருந்து தீபாராதனை மணிச் சப்தம் காற்றில் லேசாக மிதந்து வந்தது. ஆனால் இரண்டு நாட்களுக்குள் எவ்வளவு வித்தியாசம், என்பது தேவதைகளுக்குத்தான் தெரியும்!

ஏதோ ஒரு சின்ன வங்காளக் கிராமத்தில் ஜீர்ணமான வீடு ஒன்று இருக்கிறது என்று நான் ஒருக்காலும்கர்வமடைந்ததில்லை. அதை அனுபவிக்காமல் போனேனமே என்றும் ஒரு நாளும் எனக்கு விசனம் எற்பட்டதில்லை. ஆனால் அவ்வளவு அனாதரவுடன் அந்தக் கிராமத்தை விட்டு வெளியேறினவுடன், இனிமேல் எந்தக் காரணத்தைக் கொண்டும் அந்த இடத்திற்குத் திரும்பி வரப்போகிறதில்லை என்று தோன்றினதும் வெகு சாமான்யமான அந்தக் கிராமங்கூட என் மனதிற்கு அசாதாரணமாகக் காணப்பட்டது. எனவே அந்த வீட்டை விட்டு நான் கடைசி தடவையாக வெளியேறினபொழுது என்னுடைய முன்னோர்கள் கட்டி வைத்த அந்த ஜீர்ணமான வீட்டின் மேல் எனக்கேற்பட்ட பிரியத்திற்கு அளவே இல்லை

ராஜலக்ஷ்மி மௌனமாக வண்டியில் ஏறி எனக்கெதிரே இருந்த இடத்தில் உட்கார்ந்தாள, ஏதோ ஒரு வழிபபோக்கனுடைய கெட்ட ஆவலில் இருந்த தன்னை முற்றிலும் விடுவித்துக்கொள்ள முயலுபவள் போல வண்டியில் ஒரு மூலையில் தலையைச் சாய்த்துக் கொண்டு கண்களை மூடிக் கொண்டாள்.

நாங்கள் ரயில் ஸ்டேஷனுக்குப்போகும் பொழுது சூரியாஸ்தமனமாகி விட்டது. வழியெல்லாம் பாதையின் இரண்டு பக்கங்களிலும் சிறு சிறு செடிகளும் புதர்களும் அடர்ந்து வளர்ந்திருந்தன. தலைக்கு மேல் மாமரங்கள் கிளைகளைப பரப்பிச் சிற்சில இடங்களில் மாலை இருட்டை அதிகப்படுத்திக் கொண்டு இருந்தன இவற்றை யெல்லாம் தாண்டி மெதுவாக வண்டி போய்க்கொண்டிருந்த பொழுது நான் கண் திறந்து 'பார்த்த' சமயம், அந்த இருளில் என்னவென்னதான் கண்டேன் என்று சொல்ல முடியாது. அதே வழியாகத்தான் என்னுடைய பாட்டனார் ஒரு நாள் எனது பாட்டியை விவாகம் செய்து அழைத்துக்கொண்டு வந்தார். அந்த வழியாக அந்தப் புதுமாப்பிள்ளையும் பெண்ணும் வந்தபொழுது எற்பட்ட கோலாஹலம் என் மனக் கண்ணின் முன் தோன்றிற்று. அந்த வழியாகத்தான் என்தாயார் புது நாட்டுப்பெண்கோலத்துடன் கிரஹப்பிரவேசம்' செய்ய வந்தாள். பிறகு ஒரு நாள் அவள் காலமானதும் அதே வழியாகச் சென்றுதான் அவளைக் கங்கையில் விட்டு விட்டுத் திரும்பினேன். அப்பொழுது இந்தப் பாதை இவ்வளவு நடமாட்டம் குறைந்தும் காடு மண்டியும் இருக்கவில்லை. அப்பொழுது ஒவ்வொரு குளம் குட்டையிலும் இவ்வளவு சேரும் விஷக்காற்றும் உற்பத்தியாகி இருக்கவில்லை. அப்பொழுது தேசத்தில் அன்னமிருந்தது, வஸ்திரமிருந்தது: தருமமிருந்தது; துன்பமும் நோயும் இவ்வளவு பயங்கரமாகத் தலை யெடுத்திருக்கவில்லை. என்னுடைய இரு கண்களிலும் கண்ணீர் பெருகியது. வண்டிச் சக்கரங்களிலிருந்து தூசிகிளம்பி என் தலையிலும் நெற்றியிலும் நிறைந்தது. நான் மனத்திற்குள்ளேயே சொல்லிக்கொண்டேன்: 'என் தகப்பன் பாட்டனார்களுடைய, சுக-துக்கத்தையும், ஆபத்து ஸம்பத்தையும், சிரிப்பு—அழுகையும் அனுபவித்த வழியே, உன்னைப் பல தடவை நமஸ்கரிக்கிறேன் அம்மா ஜன்மபூமி! உன்னுடைய பல நன்றியற்ற குழந்தைகளைப்போல நானும் ஒரு நாளும் உன்னிடம் பற்றுக் கொண்டதில்லை. என்றாவது ஒரு நாள் உனக்குச்சேவைசெய்ய உன் காரியமாக உன்னிடம் திரும்பி வருவேனோ என்னமோ அதுவும் தெரியாது. ஆனால் இன்றுநான் வெளியேறிப் போகும் இந்தப்பாதையின் இருட்டில் துக்கம் நிறைந்த உன் உள்ளம் என் கண் முன் தோன்றுவதை நான் ஒருக்காலும் மறக்க மாட்டேன்!'

திருமபிப்பார்த்தேன். ராஜலக்ஷ்மி அதே மாதிரியாக உட்கார்ந்திருந்தாள். இருட்டில் அவள் முகம் எனக்குத் தெரியவில்லை. ஆனால்அவள் கண் மூடிக்கொண்டு ஏதோ ஆழ்ந்த யோசனையில் இருந்தாள் என்பது தெரிந்தது, அப்படித்தான் இருக்கும் என்று தீர்மானித்தேன். நான் இன்று முதல் என்னுடைய வாழ்க்கைப் படகை அவள் கையில் ஒப்படைத்து விட்டேன். இனி மேல் அறிமுகமாகாத ஆற்றில் எங்கே சுழல், எங்கே பாறை என்று அவள் தான் ஜாககிரதையாகப் பார்த்து முன்னேற வேண்டும்.

என் வாழ்க்கையில் மனதைப் பல திக்குகளில் பல அவஸ்தைகளில் விட்டுப் பார்த்திருக்கிறேன். அந்த அனுபவங்களின் பலனாக நான் தெரிந்து கொண்டது, மிகையாக எதையும் சகிக்க முடியாது என்பது தான். மிகவும் அதிகமான சுகம், தேகாரோக்கியம, நல்ல ஸ்திதி இவைகள் இருந்தால் இதற்கு நீடித்த துன்பம்தான். யாராவது மிகவும் அதிகமாகக் காதலிக்கிறார்கள் என்றால் இந்த மனம் என்ன பாடு படும்? அதில் இன்று இவ்வளவு துக்கம் இருக்கிறது என்பதை அதனுடைய சிருஷ்டி கர்த்தா தான் அறிவார்.

வெளியே தெரிந்த கருத்த ஆகாயத்தை ஒரு தரம் பார்த்தேன், உள்ளே இருட்டில் கண்ணுக்குப் புலப்படாமல் அசையாமல் பிரதிமை போல் உட்கார்ந்திருந்த அவள் பக்கத்திலும் பார்த்தேன். அதற்குப் பிறகு கைகூப்பி யாரை வணங்கினேனோ தெரியாது. ஆனால் இவளுடைய கவாச்சியின் சகிக்க



ஒரு ருஷ்ய வீர ஸ்திரீ

ஸோர் தாவாலாவில் நடந்த யுத்தத்தில் பல ருஷ்யர்கள் பின்னிஷ்காரர்களால் கைது செய்யப்பட்டனர் அவர்களுள் ராணுவ உடைதரித்த பல வீர ஸ்திரீகளும் கைதியாயினர். அவ்வாறு கைது செய்யப்பட்டவர் ஒருவரைப் படத்தில் காணலாம். (இ என். பி.)

உங்களுக்கு
மலச்சிக்கலோ அல்லது
ரத்தக்கொதிப்போ அல்லது
மண்டை கனமோ அல்லது
தலைவலியோ அல்லது
மயக்கமோ அல்லது
வாய்துர்நாற்றமோஅல்லது
சருமப்படுவனோ இருந்தாலும்
உடனே 'பரீக்ஷியுங்கள்

காஸ்டபீன்

ருசி மிகுந்த சாக்லட் மலவிரோசனி. மலச்சிக்கலை ஒழிக்க பத்திரமும் நிச்சயமுமான வழி.

குழந்தைகள், நடுவயதினருக்கும், ஆரோக்யம், பலத்தை அளித்திருக்கின்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் 2 சாக்லட் உள்ள பாகெட் ஒரு அணா. ஒவ்வொன்றும் 25, 50, 100 கொண்ட பாட்டில்களிலும் கிடைக்கும்.

CASTOPHENE

CASTOR OIL CHOCOLATES

ஏஜண்டுகள் :—

மெஸர்ஸ்:
சிவராம் & ஸ்வாமி லிமிடெட்.
154, நைனியப்ப நாயக்கன் தெரு,
பி. டி., மதராஸ்.

ஹிந்தி ஆசான்

உபாத்தியாயர் உதவியில்லாமல் தமிழ் உச்சரிப்பைக்கொண்டே நாலே வாரத்தில் நல்ல ஹிந்தி பாஷையை சுலபமாகக் கற்றுக்கொள்ளலாம். விலை 12 அணா. ஒரு காபி அனுப்ப அணா 14 மணியார்டர் செய்யவும்.

எம். எஸ் ராமுலு கம்பெனி,
286, எஸ்பிளனேட், மதராஸ்.

ஆனந்த பற்பொடி

இந்த லேபிலைப்பார்த்து வாங்குங்கள்.
இதுதான் மார்க்கட்டில் சிறந்தது
எங்கும் கிடைக்கும்.

Certified by Rt. Hon. V. S. Srinivasa Sastri, P.C.
Hon. Sir R. K. Shanmukham Chetty, K.C.I.E.
Hon. Sir Md. Habibulla Sahib Bahadur, K.C.S.I.
Hon. Sir K. V. Reddi, Kt. Sir B. N. Sarma, K.C.S.I.
Hon. Sir P. S. Sivaswami Aiyar, K.C.S.I., C.I.E.
Hon. Sir C. P. Ramaswamy Aiyar, K.C.I.E.
Hon. Sir M. Krishnan Nair, Kt. Sir A. P. Patro, Kt.
Hon. A. T. Pannirselvam, Dr. P. Subbaroyan.
Hon. Justice K. Sundaram Chetti, Hon. P. T. Rajan

ANANDA TOOTH POWDER
TRADE MARK
REGISTERED

Hon. Justice Sir C. V. Kumaraswami Sastri, Kt.
Hon. Justice Sir V. Ramesam, Kt.
Hon. Justice Sir C. V. Ananthakrishna Aiyar, Kt.
„ C. Madhavan Nair, Sir M. D. Devadoss, Kt.
„ M. Venkatasubba Rao, Raja of Sivaganga.
Rajas of Kollengode, Bobbili, Ramnad, Mandasa.
Gold medals from Mysore, Pudukkottai Etc. States

MANUFACTURED BY—VAIDYARATNA
PANDIT U. RAMANATHA SASTRI, MADRAS, 3.



வைத்திய ஸித்தாசிரமம்,
39, பஜார் ரோட்,
மயிலாப்பூர் — மதராஸ்.

முடியாத வேகம் என் மூச்சைத் திணரவடிக்கிறது என்று எனக்குள் சொல்லிக் கொண்டேன். பல தடவை பல வழிகளில இவளிடமிருந்து தப்பி ஓடினேன். ஆனால் ஏதோ ஒரு வியூகத்தைப்போல பல வழிகளாலும் திரும்பி மறுபடியும் நான் இவள் கைகளுக்கு வந்து விட்டேன். நான் அதற்காக விசனப்படவில்லை. இந்தத்தடவை நான் பரிபூர்ணமாக என்னை ஆத்மசமர்ப்பணம் செய்துகொள்ளுகிறேன். இவ்வளவு காலம் வாழ்க்கை என் கையில் இருந்ததா? அல்லது நான் அதை அனுபவிக்கத் தான் செய்தேனு?

என் கழுத்து மட்டம் சேற்றிலிருந்து என்னை விடுவித்தவள் கையிலேயே இன்று வந்துசேர்ந்துவிட்டேன். அவள் இனி மேல் என் வாழ்க்கையைச் சேற்றில் மூழ்க வடிக்கமாட்டாள்!

ஆனால் இதெல்லாம் நடைபெறறது என் உள்ளத்தில் தான், அவள் வழிபூராவும் ஒரு வார்த்தையும் பேசவில்லை. ஸ்டேஷன் வந்த பிறகும் அவள் என்னை எல்விதமான கேள்வியும கேட்கவேண்டியது அவசியமென்று நினைக்கவில்லை. சிறிது நேரத்திற்குள் கல்கத்தா போக வேண்டிய வண்டிக்கு மணிஅடித்தது. ஆனால் ரதன் டிக்கட் வாங்குவதற்குப்பதிலாக வெய்டிங் ரூமில் எனக்குப்படுக்கையைத் தயார் செய்வதில் முனைந்திருந்தான். ஆகையால் நாங்கள் கல்கத்தா போகவில்லை; மேற்கே தான் போக வேண்டியது என்று தீர்மானித்தேன். ஆனால் பாட்னுவுக்கோ அல்லது காசிக்கோ அல்லது வேறு எங்கோ— அந்த விஷயத்தில் என் அபிப்பிராயத்தை அவள் கேட்கவே இல்லை.

ராஜலக்ஷ்மி வேறெங்கேயோ பார்த்து நின்றுகொண்டு ஏதோ ஆலோசனை செய்து கொண்டிருந்தாள். ரதன் கைக்காரியத்தை நிறுத்திவிட்டு அவளிடம் சென்று "அம்மா, கொஞ்சம் முன்னல் சொன்னல் வேண்டியபடி ஆகாரம் கிடைக்குமென்று தெரிகிறது" என்றான்.

ராஜலக்ஷ்மி முந்தானையிலிருந்த முடிச்சை அவிழ்த்துக் கொஞ்சம் ரூபாய் எடுத்து அவன் கையில் கொடுத்து "நல்லது, இங்கேயே கொண்டுவா. ஆனால் பாலைக்கொஞ்சம் கவனித்துக் கொண்டு வரவேண்டும். பழய பாலைக்கொண்டுவந்து விடாதே!" என்றாள்.

"அம்மா, உங்களுக்கு ஏதாவது—" என்று ரதன ஆரம்பித்தான்,

"எனக்கொன்றும் வேண்டாம்!" என்றாள் ராஜலக்ஷ்மி.

ஏன் வேண்டாமென்றாள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். எல்லோரைக் காட்டிலும் ரதனுக்கு நன்றாகத் தெரியும். அப்படியிருந்தும் அவன் இரண்டடி பின் வாங்கின வண்ணம் பக்கியுடன் "காலை முதல் நீங்கள் ஒன்றும்..." என்று இழுத்தான்,

"நான் சொல்லுவதை நீ கேட்க மாட்டாயா, ரதன்! நேரமாகவில்லையா?" என்றாள்.

மறு பேச்சின்றி ரதன் போய் விட்டான். ஏனென்றால் அதற்கு மேல் தர்க்கம் செய்ய இடமில்லை. செய்தும் பிரயோஜனமில்லை. ராஜலக்ஷ்மி ஒப்புக்கொள்ளா விட்டாலும் அவள் ரயில் பிரயாணத்தின் பொழுது, பிரயாணம் செய்யும் யார் கையாலும எதுவும் சாப்பிடுவதில்லை என்று அவனுக்குத் தெரியும். வீணுக் கடும் பட்டினி கிடப்பதில் அவளுக்கு இணையாக யாரும் இல்லை என்று சொன்னால் அது மிகையாகாது, இல நாட்களில் சமைத்த பண்டங்களை புண்ணியார்கள் சாப்பிடுகிறார்கள். ஏழை மக்கள் சாப்பிடுகிறார்கள். மிஞ்சினது தூர எறியப்படுகிறது. ஆனால் யாருக்காக தயாரிக்கப்படுகின்றனவோ அவள் அதைத் தொடுவது கூடக் கிடையாது. நான் பார்த்திருக்கிறேன்! கேட்டால் சிரித்துக் கொண்டே, 'நான் மடி' எனக்கெதற்கு இனிமேல் சாப்பாட்டு விசாரம்? நான் தான் எல்லாம் சாப்பிட்டுக்கொண்டிருக்கிறேன்?' என்பாள்.

'அப்படியானால் என் கண் முன்பு பரீட்சை காட்டு, என்றால் 'பரிட்சையா? இப்பொழுதா? அடேயப்பா! செலவாகிப் போய விடாதோ' என்று சொல்லி அந்தச் சிக்கனத்திற்கு ஒரு காரணமும் சொல்வாள். வேறு வேகமாக வீட்டு வேலை செய்யப் போய் விடுவாள். அவள், மீன், மாமிசம், பால், நெய், உபயோகிப்பதில்லை என்று எனக்குக் கொஞ்சம் கொஞ்சமாகத் தெரிந்தது. ஆனால் அந்த உபவாசம் என்பது எவ்வளவு கெட்டது என்று அவளிடம் சொல்ல நான் ஆரம்பிக்கும் பொழுதே அவள் வெட்கத்துடன் மறைந்து விடுவாள்.

ரதன் முகம் சுண்டிப் போனவனுக மௌனமாகப் போய் விட்டான். அப்பொழுது நான் பேசவில்லை. பிறகு சிறிது நேரத்திற்கெல்லாம் பாலும அன்னமும் வந்தது. ராஜலக்ஷ்மி எனக்கு வேண்டியதை மட்டும் எடுத்துக்கொண்டு பாக்கியை அவன் மூலமாகவே திருப்பி அனுப்பினாள். அப்பொழுதும் நான் ஒன்றும் பேசவில்லை. ரதனும் மௌனமாக இருந்தான்.

இப்பொழுது தான் காரணமின்றியோ அல்லது ஏதாவதொரு காரணத்திற்காகவோ அவள் சாப்பாடுமனிதருக்கு எங்களுக்குச் சகஜமாகப் போய்விட்டது ஆனால் முன்பெல்லாம் இப்படியில்லை! அப்பொழுது வேடிக்கை பரிகாசம் எல்லாம் செய்து முகத்தைக் கடினமாக வைத்துக் கொண்டும் பார்த்திருக்கிறேன். ஆனால் எவ்வளவு நாட்கள் இப்படி நடைபெறும் என்று அறிய எனக்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது ரதன் போனதும்— அதுதான் என் நினைவிற்கு வந்தது!

எதற்காக எப்பொழுது— அவள் இந்தக் கடினமான விரதத்தைக் கைகொண்டாள் என்பது எனக்குத் தெரியாது! அப்பொழுது நான் அவளுடைய வாழ்க்கையின் போக்கை கவனிக்கவில்லை. ஆனால் முதலில் இருந்தே ஏதோ கஷ்டமான வஸ்துக்களின் நடுவில் இருக்குகொண்டு, வேண்டுமென்றே தொடர்ந்து அவற்றை அனுபவிக்காமல் அவள் மௌனமாகத் தன்னை வஞ்சித்துக்கொண்டிருந்தது மிகவும் கடினமான விஷயம்— அது எவ்வளவு அசாத்தியமான காரியம்! களங்கமற்ற இன்னும் அநேக விதமான சுகபோகசியங்களின் மேன்மையிலிருந்து விட்டு இந்தக் கடினமான தவப் பாதையில் ஈடுபடுவதற்கு அவள் மௌனமாக எவ்வளவு கஷ்டப் பட்டிருக்க வேண்டும்! இன்று அது அவளுக்கு எவ்வளவு சகஜமாகவும் இயற்கை சுபாவமாகவும் போய்விட்டது என்பது, நமது கண்ணுக்கு பொதுவாகவோ விசேஷமாகவோ இல்லை! அதனுடைய மதிப்பு என்ன என்பதும் எனக்குத் தெரியாது. ஆனால் அப்பொழுதும் அந்தக் கடினமான சாதனையெல்லாம் வீணு

FREE!

மாதம் ரூ. 575 சம்பாதிக்க வேண்டுமென்ற அபிப்பிராயமிருந்தால் எமது உண்மையான அமெரிக்கன் நியூ கோல்ட் சம்பந்தமான பூரா விவரங்களுக்கு எழுதவும். உரைகல்லில் உண்மை தங்கத்தைப் போலிருப்பதுடன்மட்டுமின்றி அப்பிகளாகவுமிருக்கலாம். பிளேட்டுகளாகவும் அடிக்கலாம். நிறம் மாறுவதில்லை. எமது தங்கத்தால் செய்யப்பட்ட எல்லாவித நகைகளும் எம்மிடம் கிடைக்கும். 6 தோல அமெரிக்கன் நியூ கோல்ட் 2 ஜதை அழகிய கைவளையல்கள், 2 ஜதை கடுக்கன். 2 மோதிரம் முதலியன சாம்பிளாக அனுப்பப்படும்.

இலவசம்;—நகைகளின் பூரா காட்லாக். விவரங்கள் இலவசமாக அனுப்பப்படும் இன்றே எழுதுங்கள்.

American New Gold Co.
F B 61 (S M M.) Lahore India)
EAB

BLACK LOCK & MACARTHUR LTD., GLASGOW



வெள்ளை வர்ணத்தில் 541 வெள்ளைதான் உயர்ந்தது. வெண்மை மாருது வெடிக்கவும் செய்யாது: அதிக ஸன்னமாதலால் ஆண்டு வரும். 541 ஈய வெள்ளையை வாங்கி உபயோகித்தால் கூலி மிச்சமாகும். அடிக்கடி வர்ணம் கொடுக்க வேண்டிய அவசியமுமிராது. 541 கெக்கின்பேரில் மான் மார்க்கும் இரண்டு ஈய ஸீல்களும் இருக்கிற கெக்காகப் பார்த்து வாங்குகள். போலிகளை வாங்கி ஏமாருதீர்கள். செந்தூரத்தில் "மான் மார்க்" செந்தூரம்தான் உயர்ந்தது. இவைகள் எல்லா வர்ண வியாபாரிகளிடத்திலும் கிடைக்கும்.

Sole Agents:- M.R.V. AIYER & CO., 49, பந்தர் தெரு, மதராஸ்.

3 உயர்தர டானிக்குகள்

யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தா தெரு, மதராஸ்.
(உதவி வைத்தியர் Dr. P. S. C. மணி)

ஆரோக்யத்தை அளிக்கும்.

குழந்தையின் குடல் மிருதுவானது. பா-பா வாடர் மிருதுவாகவும், பூராவும் வேலை செய்கின்றது. குழந்தைகளுக்கு இதைக் கொடுத்து ஆரோக்யத்துடனிருக்கச் செய்யுங்கள்.

எங்கும் விற்கப்படுவது.

Ba-Ba-Water

குழந்தைகளுக்கு அமிர்தம்.

பா - பா வாடர் மான்யுபாக்சரிங் கம்பெனி,
ஹைதராபாத், :: :: (தக்காணம்)   B W 4.

னதா, வெறும் தேகக் கிலேசம் தானு என்று மனதில் அடிக்கடித் தோன்றிவிடும். அவளையே சுக சௌக்கியங்களிலிருந்து நீக்கும் சிட்சையையும் அப்பியாசத்தையும் தியாக சக்தியையும் அவள் நாளடைவிலேயே யாருக்கும் தெரியாமல் சேகரித்து வைத்துக்கொண்டிராவிட்டால், இன்று இவ்வளவு சாதாரணமாகவும் சிரமம இல்லாமலும் அவள் தன்னை எல்லாவிதமான போகங்களிலிருந்தும் விலக்கிக் கொள்ள முடியுமா? ஒருக்காலும ஒரு தடையும் தடுத்து நிற்க முடியாது. அவள் காதலையும் கண்டிருக்கிறாள்! அந்த மாதிரி எவ்வளவு பேர் காதலித்திருக்கிறார்கள்? ஆனால் எல்லாவற்றையும தியாகம செய்து அதை இவ்வளவு களங்கமற்றதாகவும் தனிமை கொண்டதாகவும் செய்வது என்பது வாழ்க்கையில் சாதாரண விஷயமா?

வெய்டிங் ரூமில் வேறு யாருமில்லை. ரதனும் ஏதோ ஒரு மூலையைத் தேடிக் கொண்டு போய் படுத்துக் கொண்டான். பார்த்தேன், மினுக் மினுக்கென்றிருந்த ஒரு விளக்கின் கீழ் ராஜலக்ஷ்மி உட்கார்ந்து கொண்டிருந்தாள், அருகில்சென்று அவளுடைய தலையில மெதுவாகக் கையை வைத்ததும் அவள் திடுக்கிட்டுத் தலை தூக்கி "நீ தூங்கவில்லையா?" என்று கேட்டாள்.

"இல்லை, இந்தப் புழுதி படிந்த இடத்தில் தனியாக உட்கார்ந்திருக்காவிட்டால் என்னுடைய படுக்கையில் வந்து உட்காரேன், வா!" என்று சொல்லி அவள் ஆட்சேபிப்பதற்குக் கூட இடம் கொடுக்காமல் கையைப் பிடித்துத் தூக்கினேன். ஆனல் அவளை என்னருகில் கொண்டு வந்து வேறு பேச்சு பேச என்னல் முடியவில்லை அவளுடன் அவளுடைய கையை என்னுடைய கையில் எடுத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தேன். சிறிது நேரம் இப்படிக் கழிந்தது. என் சந்தேகத்திற்கு ஆதார மில்லாமலில்லை என்று அவளுடைய கடைக் கண்ணைத் தொட்டுப் பார்த்தறிந்து கொண்டேன் மெதுவாகக் கண்களைத் துடைத்து அவளை அருகில் இழுக்க முயன்றபோது ராஜலக்ஷ்மி நீட்டியிருந்த என் கால்களின் மேல் விழுந்து கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள். அவளை ஒருவிதத்திலும் அருகில் கொண்டு வர முடியவில்லை.

மறுபடியும் அதே மாதிரி மௌனத்துடன் காலம் கழியலாயிற்று. திடீரென்று ஒரு தடவை "இங்கேயே நான் ஒரு விஷயம் தெரிவிக்க வேண்டியிருக்கிறது, ராஜலக்ஷ்மி!" என்றேன்.

அவள் மெதுவாக "என்ன விஷயம்?" என்று கேட்டாள்.

அதைச் சொல்லுவதில், வாடிக்கையின் காரணமாக முதலில் எனக்கு சங்கோசமாகஇருந்தது. ஆனல் சொல்லாமலிருகக முடியவில்லை

"இன்று முதல் என்னை உன் கையில் பரிபூர்ணமாக ஒப்படைத்துவிட்டேன். இனிமேல் நல்லது கெட்டதுகளின் பொறுப்புப் பூராவும் உன்னுடையதுதான்" என்று சொல்லி அவள் முகத்தைப் பார்த்தேன். அந்த மெல்லிய விளக்கின் ஒளியில் அவளும என் முகத்தைப்பார்ப்பதைக் கண்டேன். பிறகு லேசாகச் சிரித்துக்கொண்டு "உன்னை வைத்துக்கொண்டு நானென்ன செய்வது? உனக்குத் தபலா வாசிக்கவும் வராது சாரங்கியும் வராது—இன்னும்—" என்றாள்.

"இன்னுமென்ன? பானம் ஹூக்கா தயார் செய்வதா? இல்லை. அந்த வேலை என்னுலாகாது."

"ஆனல் முன்னிரண்டு வேலை!"

"முடிந்தால் ஒரு வேளை முடிந்தாலும் முடியலாம்" என்று சொல்லி நானும் கொஞ்சம் சிரித்தேன்.

திடீரென்று ராஜலக்ஷ்மி உத்சாகமாக எழுந்து உட்கார்ந்து "வேடிக்கையில்லை. நிச்சயமாக முடியுமா?" என்று கேட்டாள்.

"முயன்று பார்ப்பதில் என்ன பிசகு?" என்றேன்.

"இல்லை" என்று சொல்லிவிட்டு ராஜலக்ஷ்மி மௌனமாக ஆச்சரியத்துடன் கண் கொட்டாமல் என்னைப் பார்த்துக்கொண்டிருந்துத் திரும்பவும் "இதோ பார், நடு நடுவே நான் அந்த மாதிரி நினைத்ததுணடு பிறகு யோசித்தேன். இந்த மனுஷன் கடுஞ் சித்தன் போலத் துப்பாக்கியை வைத்துக்கொண்டு வேட்டையாடுவதிலேயே ஆசை கொண்டிருக்கிறான் அவனுக்கு இதெல்லாம் எப்படிப் பிடிக்கப்போகிறது? இவ்வளவு கஷ்டத்தை அனுபவிக்க அவனல் முடியுமா? வேட்டையாடிக் கொலை செய்வதுதான் அவனுடைய வேலை— ஆனந்தம்! உனக்கு வேலை கொடுப்பதில் அநேக சங்கடங்கள் இருக்கினறன என்று தான் சும்மா இருந்து விட்டேன்!" என்றாள்.

இந்தத் தடவை மௌனமாக இருப்பது என்னுடைய முறையாகப் போய் விட்டது.

அவளுடைய குற்றச்சாட்டுக்குச் சமாதானமாக நான் ஏதாவது சொல்ல முடியும், அதைச் செய்ய ஆதாரமுமில்லாமல் போகவில்லை. ஆனல் அதெல்லாம் வீண் என்று என் மனதில் பட்டது. இவளுடைய நேர்மையான உணர்ச்சிக்கு முன் நான் உள்ளுக்குள்ளே தோல்வி அடைந்து விட்டேன். பேச்சைக் கூடச் சரியாகப் பேச முடியவில்லை அவளால்; ஆனல் சங்கீதத்தினுடைய உள்சக்தி வேதனையை மீறிக்கொண்டும வெளி வந்து பிரகாசிப்பது போல் அவள் கருணையால் நிரம்பிப் போன உள்ளம் சதா விழித்துக் கொண்டிருந்து அவள் சொன்ன இரண்டு வார்த்தைகள் மூலமாக இங்கித உருவம் கொண்டு வெளி வந்தன. அதனல் அவளுடைய அடக்கமும், தியாகமும், ஹிருதயத்தின் தூய்மையும் மறுபடியும ஒரே அடியாக எனககுத் தென்பட்டு அவளுடைய அந்த ரங்கத்தை நினைப்பூட்டின.

அப்படியிருந்தும் அவளுடன் ஒரு வார்த்தை பேசக்கூட என்னல் முடியவில்லை. பரஸ்பரம் முற்றிலும் விரோதமான போக்குகள் எப்படி ஒன்ருக அருகருகே இருக்கின்றன என்பது விளக்க முடியாத மறைபொருள் என்றுதான் நான் சொல்லக்கூடும்! இல்லாவிட்டால் நான் என்னையே, கொலை செய்து கொள்ளக்கூடும் என்ற ஆச்சரியகரமான எண்ணம் ஏன் என்னிடம் இருக்கிறது? வெறும் கட்டை எறும்பு கூட சாவதை விரும்புவதில்லை. ஆகாரம் நித்திரையில்லாமலும் ஆதரவற்ற நாய் பூனை போலவும், இளமையில் எவ்வளவு நாள் மௌனமாக உபவாசம் இருந்திருக்கிறேன்! நான் மட்டும தானு இந்த மாதிரி? ராஜலக்ஷ்மி எப்படி இவ்வளவு நாள் வருஷக்கணக்காகப் பிரயாசைப்பட்டு பியாரி என்ற வேசை வாழ்க்கையை கடத்தி வந்தாள் என்பது எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

இந்த விஷயம் நினைவிற்கு வந்ததும் தலை நிமிரமுடியவில்லை. அவளுக்கு வேதனை கொடுக்கக் கூடாது என்பதால் அல்ல, சொல்வதால் என்ன உபயோகம் என்றுதான் நினைத்தேன். தேவர்களும் அசுரர்களும் ஒவ்வொரு கணமும் இடைவிடாமல் மனிதர்களைத் தோளில் தூக்கிக்கொண்டு எங்கே செல்லுகிறார்கள் என்பது எனக்குத் தெரியுமா? சகல போகங்களிலும ஈடுபட்டிருப்பவன் ஒரு நாள் எப்படி. எல்லாவற்றையும் துறந்து வெளியேறுகிறான்? அகங்காரமும் கோபமும் ஒரு நிமிஷம் எப்படிக் கருணையில் மறைந்து போய்விடுகின்றன என்ற ரகசியத்தைக கொஞ்சமாவது அறியமுடியுமா? ஆழ்ந்த குகை ஒன்றில் தனிமையாக சாதனை செய்யும் மனித ஆத்மா திடீரென்று ஒரு நாள எப்படி ஸித்தி பெற்றுவிடுகிறது என்பதற்கு ஏதாவது தகவல் உண்டா? அந்த மங்கிய ஒளியில் ராஜலக்ஷ்மியினுடைய முகத்தைப் பார்த்தவண்ணம் அவளை உத்தேசம் செய்து மனதிற்குள்ளேயே 'எனக்குச் சிரமம் கொடுக்க வேண்டுமென்ற ஒன்றைமட்டும் நினைத்து, அந்தச் சிரமத்தைத் தாங்கமுடியாத எனக்கு இவ்வளவு நாள் மன்னிப்பளித்து வந்தபொழுது, வெட்கமடைவதற்கு என்னிடம் என்ன இருக்கிறது?' எனறு நினைத்துக் கொண்டேன்.

"ஏன் மௌனமாக இருக்கிறாய்?" என்றாள் ராஜலக்ஷ்மி.

"அப்படியானல் அந்தக் கோபத்தில் தான் நீ எல்லாவற்றையும் துறந்துவிட்டாயோ?"

"எல்லாவற்றையும் எப்படித் துறப்பது? ஒன்றுமில்லாத எனக்கு உன்னையே அர்ப்பணம் செய்துவிட்டாய. விரும்பினலும் நான் அதை எப்படித் தியாகம் செய்வது?" என்றாள்.

"ஆமாம். நான் என்னையே தான் உனக்களித்திருக்கிறேன். ஆனல் உன்னையே நீ அறிந்து கொள்ள முடியவில்லை. நான் ஏன் விளக்கிச் சொல்ல வேண்டும்!"

(தொடரும்)

வைரங்கள் வாங்கும் ஆபீஸ்:
ஆண்ட்வர்ப் & ஆம்ஸ்டர்டாம்

டெலி போன்: 2696.
கிராம்: 'NECKLACE

பாபாலால்

நம்பிக்கைக்கான பெயர்போன ஸ்தாபனம்

தங்கம், வேள்ளி, சாமான்கள் கையாலேயே தயாரிக்கப்படுகின்றன.

ஆகவே நீடித்திருக்கின்றன. தவிர இந்த உத்திரவாதமும் உண்டு.

"எங்களிடம் வாங்கிய எல்லா தங்க, வெள்ளி சாமான்களையும் பிற்காலத்தில் மாற்றவேண்டுமாயினும் அல்லது அவற்றிற்குப் பணம் வேண்டுமாயினும், அவவப்பொழுதுள்ள சவரன் நாணய (Coin) விலைப்படியும் — சுத்த வெள்ளிக்கிரயப்படியும் கொடுக்கிறோம். —

பத்திரமான மூலதன முதலீடு - எவ்வித குறைவும் கிடையாது.

பாபாலால் & கம்பெனி,
(ஸ்தாபிதம்: 1910)
வைரம், தங்கம், வேள்ளி நகை வியாபாரிகள்.
ராம்கோடி பில்டிங் - ராட்டன் பஜார், பார்க் டவுன், மதராஸ்.
ஞாயிற்றுக்கிழமை பகல் 1-மணிவரைதான் கடை உண்டு

டோங்ரேயின்

பாலாமிருதம்

பிரசித்தி பெற்ற

குழந்தைகளின் டானிக்

புதிய பதிப்பு!   மலிந்த விலை!!

பாரதி நூல்கள்

(நேர்த்தியான காலிகோ பைண்டு)

1	கவிதைகள்	Vol I	ரூ.	3	0	0
2.	வசனங்கள்	Vol II	,,	3	0	0
3.	கட்டுரைகள்	Vol III	,,	3	0	0
4.	பகவத்கீதை (காலிகோ)		,,	0	8	0
5.	Agni & other Poems & Translations		,,	1	0	0
6.	Essays & other Prose Fragments		,,	1	0	0
7.	சரித்திரம்		,,	0	4	0

பாரதி பிரசுராலயம்,
567, ஹைரோடு, திருவல்லிக்கேணி, மதராஸ்.

தராசு

ஸ்ரீமான் ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன்

★

ஜி. ஏ. நடேசன் தஞ்சாவூர் ஜில்லாவில் பிறந்தவர். பூர்வீகம் கணபதி அக்ரகாரம்; அவ்விடத்தில் இன்றைக்கும் சிறிது பூஸ்திதி உண்டு. ஆனால் சென்னையில் வேர் ஊன்றி 50 வருஷங்களுக்கதிகமாகி விட்டது. ஆதியில் மேல் படிப்புக்காக சென்னைக்கு வந்தார். பிழைப்பும் இங்கே ஏற்பட்டு விட்டது. மாணவராயிருந்தபோதே வாழ்வின் லக்ஷணங்கள் அமைந்து விட்டன. நாலு பேருடன் நெருங்கிப் பழகுவதில் நிபுணர்: யாராயிருக்கட்டும், என்ன பதவி வகிக்கட்டும், அணுக அஞ்சமாட்டார். அணுகவேண்டியது தான் தாமதம்! அந்தரங்கம் பாராட்டுவார்.. அன்யோன்யம் பிறந்து விடும். அவருடைய ஜாதக விசேஷம் அது. அந்தஸ்தோ செல்வாக்கோ உள்ளவர் அவரை அறியாமலிருக்க முடியாது. விடமாட்டார் அவர்! காரியவாதி என்று நினைப்பதும் தவறு. காரியத்தில் கருத்துண்டு. காரியமே கருத்தல்ல. பழகுவதில் ப்ரியம். பழக்கம் பயன்பட்டால் தவறென்ன? பயன்படக்கூடியவர்களிடம் பழகினால்தான் தவறென்ன? பழகிய பலர் அவருக்கு உதவியிருக்கலாம். பழகிய பலருக்கும் அவர் உதவியிருக்கிறார். பட்டணத்திலே பலரை பெரிய மனிதராக்கிய பெருமை அவருக்கு உரித்தாகும். கலாஞானத்தை விட கால ஞானம் மிகுந்தவர். சென்னையில் அவர் கொடியேற்றிய போது பொது வாழ்வு உருப்பெறவில்லை. கக்ஷியொன்றுக்கும் வலுவில்லை. கிளர்ச்சி எதற்கும் கூர் காணவில்லை. மேதாவிகள் இருந்தனர். சேவையில் சிரத்தையும் கொண்டனர். சேவை சோபிக்க சேர்த்து வைக்கும் சக்தி தோன்றவில்லை. பலருடைய நன்மைக்கு உழைப்பது சொந்த நன்மைக்கும் உதவலாம். இந்த உண்மையைத்தான் கடைந்தெடுத்தார். நடேசன் கலாசாலையில் பிரமாதமாய் படித்துவிடவில்லை; பிரசஸ்தமாய் பாஸும் பண்ணிவிடவில்லை. அவர் கற்றது ஏட்டில் அடங்காதது. அனுபவத்தைத் தழுவியது. மாணவர் பக்குவத்தில் இந்த அநுபவம் நேர்ந்தது அதிர்ஷ்டம்.

பி. ஏ. பரீக்ஷை 'பாஸ்' பண்ணினார். சட்ட கலாசாலைமீது நாட்டம் முதல் சென்றது. வக்கீல் படிப்பில் அந்த காலத்தில் "மவுஸ்" ஜாஸ்தி. நெரிசல் காணத் தொடங்கவில்லை. சுவாதீன விருத்தி; நல்ல வருவாய்; இருந்தாலும் நடேசனுக்கு சிரத்தை கொள்ளவில்லை. உத்யோகத்திற்கு ஆசைப்பட்டிருந்தால் சுலபமாய் கிடைத்திருக்கும். அதையும் பிரதீக்ஷிக்கவில்லை. புது வழியில் புகுந்தார்: யோசித்தே இறங்கினார் என்பது என் துணிவு. பலதரப்பினருடன் அவருக்கு உறவு உண்டு. சிலருடன் பற்றும் பரிவும் அதிகமிருக்கலாம். யாருடனும் வேற்றுமையோ விரஸமோ பாராட்டும் சுபாவமல்ல. இப்படிப் பழகியதில் குணமிருந்தது. வேற்றுமைகளிடையே ஒற்றுமையைக் கண்டார். இந்தியாவின் மறு மலர்ச்சியின் சோடு அவர் கண்ணுக்குப் புலப்பட்டது. அதற்கு ஊட்டமளிப்பதில் நாட்டம் சென்றது. விருத்தியிலுள்ள விசேஷம் குறிப்பிடத்தக்கது. சேவையில் பெயரும் உண்டு, பொருளும் உண்டு. புத்தகப் பிரசுராலயம் ஒன்றையும், அதற்கு அனுசரணையாக மாத சஞ்சிகையொன்றையும் ஆரம்பித்தார். இரண்டையும் நடத்த தேர்ச்சியோ அநுபவமோ கிடையாது. பரிக்ஷை பார்க்க பணத்தென்புமில்லை: இருந்தாலும் தைர்யமாக இறங்கினார். அகலக்கால் வைக்கவில்லை. 'அல்பாரம்பம் க்ஷேம பரம்' என்று சம்ஸ்கிருதத்தில் வாக்கியமுண்டு. சிறுகக் கட்டி பெருக வாழ் என்று தமிழ்ப் பழமொழியும் உண்டு. நடேசனே இவைகளுக்கு பிரத்யக்ஷ பிரமாணம். கூடி வரும் காலம், குருட்டு அதிர்ஷ்டம் என்று சிலர் சொல்வர்; நான் ஒப்புக்கொள்ளமாட்டேன்; காரணத்திற்கும் காரியத்திற்கும் தொடர்பு துலங்காவிட்டால் அதிருஷ்டம் என்கிறார்கள். தொடர்பு தெரியாவிட்டால் தொடர்பு இல்லை யென்று சொல்லிவிட முடியாது. காலப் போக்கையறிந்து காரியத்தில் இறங்கினார் நடேசன் தைர்ய லக்ஷ்மி துணை புரிந்தாள். தொட்டது துலுத்தது; சிரமப்பட்டார்; சம்பாதித்தார்; சோடு காணாது சம்பாதித்தார். யார் கண்ணையும் உருத்தவில்லை. அண்டை அயல் காய்ச்சவில்லை. மயிலாப்பூரில் பங்களா வாங்கும் வரையில் பணக்காரர் என்று கூட பலருக்குத் தெரியாது.

பிறர் சம்பந்தப்பட்டவரையில் அவர் பொருள் சம்பாதித்தது பெரிதல்ல செய்த சேவையே பெரிது. தேசீய ஞானம் பரப்பிய பெருமை அவருக்குரித்தாகும். யார் எந்தத்துறையில் சிறப்பாக சேவை செய்தாலும் அவர் கவனத்தைப் பெறுவது நிச்சயம் சிறு புத்தகம் ஒன்று சொற்ப விலையில் வெளி வந்துவிடும்: தேச பக்தர்களின் ஜீவிய சரித்திரங்களை வெளியிட்டு தேசாபிமானத்தை வளர்த்தார். அவருக்குத் தெரியாதவர் கிடையாது; எல்லாரும் வேண்டியவர். கோகலேயும் சரி, திலகரும் சரி, காந்தியும் சரி, எல்லாருக்கும் அவரிடத்தில் அலாதி விசுவாசம். பாரத நாடு பரந்த நாடு; நாடு முழுவதும் நடேசனை அறியும். வெளி நாட்டினரும் இந்தியாவைப்பற்றி அறிய வேண்டுமானால் நடேசனைத்தான் அண்டுவர். இந்த வியாபகத்திலிருந்து இன்னொரு விசேஷம்! எந்த பொது காரியத்திற்கும் நடேசனின் ஆதரவும் ஒத்துழைப்பும் இன்றியமையாததாகி விட்டது. கூட்டம் கூட்டவோ, விருந்து நடத்தவோ, நிதி திரட்டவோ, ஒரு காலத்தில் நடேசன் இல்லாமல் காரியம் நடக்காது. எடுத்த காரியத்தை தலைப் பொறுப்பாய் முடித்து வைப்பார். நல்ல 'நிகா'; யாரிடத்தில் எது சாயும் என்று நன்றாய் அறிவார். ஆகாத காரியத்தில் மெனக்கடமாட்டார்; ஆகும் காரியத்தில் ஆலஸ்யமிராது. காரியம் கூட கிருஷி பலமாயிருக்கும். தட்டமுடியாத தாக்ஷிண்யம் தேடுவார். காரியம் கூடும்வரையில் விடமாட்டார். பேச்சிலேயே பிடிவாதத்தைக் காணலாம். சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்வார். பேச்சை மாற்ற இடங்கொடார்; எடுத்த காரியத்தை முடித்தே மறு காரியம் பார்ப்பார்: தன் வரையரைகளை நன்றாய் அறிந்தவர். பல புத்தகங்களை வெளியிட்டிருக்கிறார். சுயமாக ஒன்றும் எழுதவில்லை. பல வருஷங்களாக பத்திரிகை நடத்தி வருகிறார். பிறர் எழுதியதே பத்திரிகையில் பிரதானம். பல மேடைகளில் பேசியிருக்கிறார். ஆதாரங்களைக்

(பின் பக்கம் பார்க்க)

ராவ் பஹதூர் ஜி. ஏ. நடேசன்.

திருவிடந்தை

★

நித்ய கல்யாண ஸ்வாமி வைபவம்

★

எஸ். கோவிந்தராஜுலு

எழுதியது

★

திருவிடந்தை என்ற புண்ய க்ஷேத்திரம் சென்னைக்கு வெகு சமீபத்தில் தான் இருக்கிறது. வெகு சுலபமாய் போய்விட்டு வரலாம்: இங்கிருக்கும் கோவில் மஹிமை பொருந்தியது. இவ்விடத்தில் எழுந்தருளியிருக்கும் நித்யகல்யாண ஸ்வாமியைப்பற்றி ஸ்தல புராணம் கூறும் விருத்தாந்தம் மிகவும் ரஸமானது: மூர்த்திக்கு நித்ய கல்யாண ஸ்வாமி என்ற திருநாமம் ஏற்பட்ட வரலாறு படிக்கத்தக்கதாகும், இந்த க்ஷேத்திரத்தைப்பற்றி இந்த வியாசத்தில் படித்தறியலாம்.

ஸ்ரீ நித்யகல்யாணமூர்த்தியும் ஸ்ரீ அகிலவல்லித் தாயாரும்.

திருவிடந்தை! சென்னையிலிருந்து 23 மைல்களுக்கப்பால் தான் இருக்கிறது. கோட்டையிலிருந்து எட்டு மைல் தூரத்தில் இருக்கும் பல்கைவாராவதிக்குப் போய் படகேற வேண்டும். திருவிடந்தை ஒரு பிரசித்த ஸ்ரீ வைஷ்ணவ க்ஷேத்திரம். இங்கு ஸ்ரீ நித்ய கல்யாண ஸ்வாமி கோவில் இருக்கிறது.

ஸ்தல புராணம்

இதன் ஸ்தல புராணம் மஹிமை பொருந்தியது: அதை இங்கு எடுத்துக் கூறுவது அவசியமாகும்: முன்னொரு காலத்தில் குணி என்ற மஹர்ஷி இருந்தார். அவர் ஜம்புத்வீபத்தில் ஒரு ஆச்ரமம் நிர்மாணித்துக் கொண்டு அங்கு தமது காலத்தை பகவத்தியானத்தில் போக்கி வந்தார்: ஸரஸ்வதி நதி தீரத்தில் மிகவும் அழகான ஆச்ரமம் அமைத்துக் கொண்டிருந்தார் அந்த மஹான். அவருக்கு ஒரு சிஷ்யை இருந்தாள். அவள் ஒரு யுவதி: குரு தேக வியோகமானதும் இந்த சிஷ்யையும் தபஸ்ஸில் ஈடுபட்டாள். அந்த சமயம் நாரத மகர்ஷி அவள் முன்பு ப்ரத்யக்ஷமாகி, அவளுக்கு இஷ்ட சித்தி கிடைக்காதென்றும், அதற்கு காரணம் அவள் விவாகமாகாமலிருப்பது தான் என்றும் தெரிவித்து விட்டு மறைந்தார்.

காலவ ரிஷியின் சம்மதம்

பாவம் அவள் என்ன செய்வாள்; இந்த மஹர்ஷி வாக்கு அவளைக் கவலையுறச் செய்துவிட்டது. அருகே தபம் பண்ணிக்கொண்டிருந்த ஒவ்வொரு யோகியையும் அண்டி, ஒவ்வொருவரையும் தன்னை மணக்கும்படி அவள் மிகவும் வேண்டினாள். ஒரு யுவதியின் பிரார்த்தனையை எல்லோரும் அங்கீகரிக்க மறுத்துவிட்டனர். கடைசியில் காலவ முனிவருக்கு மட்டும் அவளிடம் பச்சாத்தாபம் ஏற்பட்டது: அவளது நிலைமையைக் கண்டு பரிதாபப் பட்டார்: ஆகவே அவளைத் துணைவியாக ஏற்க அம்மாமுனிவர் சம்மதித்தார். தெய்வ சங்கல்பத்தினால். ஒரு வருஷத்திற்குள் அவருக்கு 360 பெண்கள் பிறந்தனர்: இதற்கப்புறம் அவளும் இவ்வுலக வாழ்வை நீத்து நித்ய சுகத்தை நாடினாள்.

பெரிய சங்கடம்

இவ்வளவு பெண்களை சம்ரக்ஷித்து பாதுகாப்பது காலவ முனிவருக்கு பெரிய சங்கடமாகி விட்டது: மிகுந்த கஷ்டப்பட்டார். ஸரஸ்வதி நதிக்குத் தீர்த்தமாட வரும் ஒவ்

தராசு

(முன் பக்கத் தொடர்ச்சி)

காட்டியே பேசுவார்: நாவன்மை கிடையாது வியாபார வழியில் புத்தி படிந்துவிட்டது. பேச்சிலும் பழக்கத்திலும் அவரை அறிந்தவர் அதையே காண்பர்.

பழகப் பாத்திரமானவர். ஸ்நேகத்திற்குக் கட்டுப்பட்டவர். நயம் மிகுந்தவர்; தப்புத் தண்டாவுக்குபோகமாட்டார். சரளமான சுபாவம். குளிமையாகப்பேசுவார். வீடு தேடி வருவோருக்கு உபசாரம் பலமாயிருக்கும்; உபசரிப்பதில் ஒரு திருப்தி. விருந்து வைப்பதில் ஒரு பெருமை. வாழ்விலே வெற்றி கண்டவர். கண்ட வெற்றியில் திருப்தி கொண்டவர். பெரிதாய் எதுவும் எதிர்பார்க்க வில்லை. ஏமாற்றமும் இல்லை. நகரசபையில் பல வருஷங்கள் உழைத்தார். தலைவர் ஸ்தானம் கிடைத்திருக்கவேண்டும். முட்டில் தட்டி விட்டது. சர்வகலாசாலையில் அங்கம் வகித்தார். எல்லைக்கு மேல் ஏறவில்லை, ராஜாங்க சபைக்கு நியமனம் பெற்றார். சபைக்கே நாட்டில் மதிப்பில்லை. 'கனம்' பட்டம் தான் மிஞ்சிற்று, காப்பு விசாரணை சபையில் ஸ்தானம் பெற்றார். பொறுப்புடன் நடந்து கொண்டார்; நியாயத்தை விட்டுக் கொடுக்கவில்லை. 'ராவ் பஹதூர்' பட்டம் வழங்கினர். பட்டம் கிடைத்ததில் பெருமை கொள்ளவில்லை. ஷெரிப் உத்தியோகம் வகித்தார். மரியாதை ஸ்தானம் அது. காங்கிரஸ் கவர்ன்மெண்டார் அளித்த மரியாதை. அதனால் திருப்திபட ஹேது உண்டு. நடேசனுக்கு இன்று வயது 68 ஆகிறது. மொத்தத்தில் யோகசாலி யென்றே சொல்லவேண்டும். யோகமும் சகட யோகமல்ல. இன்று மேலே யேற்றி நாளைக்குக் கீழே தள்ளும் தன்மையிதல்ல. படிப்படியாக் ஏறுமுகம் கொண்டது. திடகாத்திரமுள்ளவர்; பூர்ணாயுசு ஜாதகம். நடேசன் வாழ்க: நாட்டுக்கு துணை புரிக!

வொருவரிடமும் தமது துன்பத்தை எடுத்துரைத்து வருவாரானுர் அவர். இவ்வாறு தமது கதையைப் பிரலாபிப்பதிலேயே அவருக்குப் பல நாட்கள் கடந்து சென்றன. ஒரு நாள் தீர்த்த ஸ்தானக்திற்காக சில பிராம்மணர்கள் வந்திருந்தனர்: அவர்களிடமும் காலவ ரிஷி இந்தக் கதையை விஸ்தரித்துக் கூறினுர். அப்போது அப்பிராம்மணுேத்தமர்கள், தாங்கள் வாமகவீபுரியிலிருந்து யாத்ரையாகப் புறப்பட்டிருப்பதாகவும், வாமகவீபுரத்திற்குப் போனுல் கஷ்டம் தீரும் என்றும், அங்கு அதிக சௌகரியங்கள் அமைந்திருப்பதாகவும் தெரிவித்தனர்: அவ்விடத்திற்குப் புறப்பட்டுப் போகும்படியும் அவர்க்ள் யோசனை கூறினர். இதைக் கேட்டு ஜம்பூத்வீபத்திலிருந்து வாமகவீபுரத்திற்கு காலவ மஹர்ஷி புறப்பட்டுப் போனுர்.

திருவிடந்தை கோயிலும் குளமும்:

பதி தேடுவதில் கவலை

வாமகவீபுரம் வந்து சேர்ந்த பிறகு அம்முனிபுங்கவர் சில காலம் மிகவும் சுகமாகவே இருந்தார். தினமும் ஸ்ரீ யக்ஞ வராஹமூர்த்தி சந்நிதிக்குப் போய் அங்கு குடிகொண்டிருக்கும் பரந்தாமனை அவர் பஜிப்பது வழக்கமாகியது: காலக்ரமத்தில் புத்ரிகளும் யுக்த வயதடைந்தனர். பருவமடையும் பெண்களுக்கு பதி தேடுவதில் அவர் கவலை காட்டலானுர்: தமக்கு இந்த விஷயத்தில் கருணை புரியும்படி அவர் ஒவ்வொரு நாளும் கடவுளைத் தொழுவார். ஒரு நாள் ஸ்ரீமந் நாராயணமூர்த்தி பிராம்மண பிரும்மசாரி ரூபத்தில் அவர் முன்பு தோன்றினுர்: அப்போது காலவர் அந்தப் பிரும்மசாரியைப் பார்த்து அவரது பூர்வோத்தரங்களையும் குல விசேஷத்தையும் பற்றி விசாரித்தார். இதற்கு அந்த பிராம்மண பிரும்மசாரி தாம் அந்த க்ஷேத்ரத்திற்கு யாத்திரா மார்க்கமாகவே வந்து சேர்ந்திருப்பதாகப் பதில் தந்தார். தமது பெண்களின் விவாகத்திலேயே சதா கவலைகொண்டிருந்த காலவர் அப்போது பிரும்மசாரியைப் பார்த்து தமது புத்ரிகளை மணக்கும்படிப் பிரார்த்தித்துக் கேட்டார்: கேட்டதுதான் தாமதம் பிரும்மசாரி தயக்கம் சிறிதுமின்றி இதற்கு இணங்கினுர்.

விவாதம் நடத்தியது

பின்பு விவாகத்தை எப்படி நடத்துவது? ஒவ்வொரு தினமும் ஒரு குளம் வெட்டுவது: மஹரிஷியின் புத்ரிகளை, ஒவ்வொருவராக அந்த பிரும்மசாரி தினமும் மணப்பது: காலையில் முதன் முதல் புதிதாக தோண்டப்பட்ட குளத்தில் ஸ்நானம் பண்ணுவது: பிறகு விவாகத்தை நடத்துவது: இவ்வாறு 360 நாட்கள் கடந்தன: 360 பெண்களையும் அந்தப் பிரும்மசாரி விதிப்படி மணந்துகொண்டார்.

மாமனுர் பிரச்னை

விவாகம் யாவும் பூர்த்தியாகிவிட்டது? தமது மாப்பிள்ளையிடம் காலவரிஷி வந்தார்: மனைவிமார்களுக்கு எப்படி வசதிகளும் சௌகர்யமும் கிடைக்கப் போகின்றன என்பதைப்பற்றி வினவினுர்: இந்தக் கேள்வியினுல் பிரும்மசாரி பின் வாங்கவில்லை: ஒவ்வொருத்தியையும் தனித் தனியாக வெவ்வேறு வீட்டில் வைக்கப் போவதாக பிரும்மசாரி பதில் பகர்ந்தார்.

மாப்பிள்ளை உறுதி

அப்போது மகர்ஷி தமக்கு விருத்தாப்பிய தசை மேலிட்டுவிட்டதாகவும், தமது புத்திரிகள் அனைவரையும் ஏக காலத்தில் பார்க்க விரும்பினுல். இந்த ஏற்பாடு குறுக்காக நிற்கும் என்றும், தாம் 360 வீடுகளுக்கும் போய் வருவதென்றுல் அது மிகவும் சிரம சாத்தியமானது என்றும் கூறினுர். பிரும்மசாரி வேஷம் பூண்ட அப்பரந்தாமன், இதற்கும் தாப். ஒரு வழியை சுலபமாகக் கண்டு பிடிக்க முடியும் என்றும் மஹர்ஷி அனைவரையும் ஒரே சமயத்தில் பார்ப்பதற்கு ஏற்பாடு செய்வதாகவும் தெரிவித்து விட்டார்.

நீராட்டம்

மறு நாள் மஹர்ஷியிடம் போய், அவர் தமது புத்திரிகள் அனைவரையும், இதுவரை வெட்டப் பட்ட குளங்களுள் எது மிகப் பெரிதோ அதில் போய் ஸ்நானம் பண்ணும்படி ஆக்ஞாபிக்குமாறு சொன்னுர். அவர்கள் நீராடும் போது பிரும்மசாரியும் அவர்களுடன் சேர்ந்துகொண்டது அவர்களுக்கு அதிக சந்தோஷத்தைக் கொடுத்தது.

வராஹரூபம் எடுத்தார்

திடீரென்று பிரும்மசாரி ரூபத்தில் வந்த விஷ்ணு பகவான் வராஹாவதாரம் எடுத்துக் கொண்டார். அந்த பெரிய பன்றி ரூபத்தைப் பார்த்ததும், அவர்கள் யாவரும் மிகுந்த பயத்தை அடைந்தனர்: பீதியின் மிகுதியால் ஒருவரையொருவர் ஆலிங்கனம் செய்து கொண்டனர். உடனே வராஹமூர்த்தி அவர்களையெல்லாம் துரத்தி அவர்கள் அனைவரையும் ஒரே தழுவாகத் தழுவிக் கொண்டார். இது காரணமாக அவர்கள் யாவரும் ஒரே தேவியாக மாறினர்: இவ்வாறு உற்பவித்த தேவியை அவர் தமது இடது மார்பில் வைத்துக் கொண்டார்.

பெயர் ஏற்பட்ட விதம்

கோவிலில் இருக்கும் மூல விக்ரஹம் இந்த சம்பவத்தைத்தான் சூசிப்பிக்கிறது: வராஹமூர்த்தியின் இடதுமார்பில் தேவி அமர்ந்திருப்பதை இன்றும் அங்குகாணலாம். க்ஷேத்திரத்தின் பெயரும் இதற்கப்புறம் மாறி விட்டது. வாமகவிபுரம் திருவிடவெந்தை என்கிறது; காலப் போக்கில் இதுவும் திருவிடந்தை என்று சுருங்கி விட்டது! சமுத்திரக் கரையோரமாகப் போனுல் மஹாபலிபுரம் இங்கிருந்து 9மைல்களுக்கப்பால் தான் இருக்கிறது.

நித்ய கல்யாண மூர்த்தி

இந்த க்ஷேத்திரத்தில் குடிகொண்டிருக்கும் பகவானுக்கு நித்யகல்யாணமூர்த்தி என்று நாமதேயம் வழங்கப்படுகிறது: 360 தினங்கள் பிரதி தினமும் கல்யாணம் பண்ணிக் கொண்டதைத் தான் இது எடுத்துக்காட்டுகிறது; தேவியின் திருநாமம் ஸ்ரீ அகிலவல்லித் தாயார்.

(அடுத்த பக்கம் பார்க்க)



கோவில் மண்டபத்தில் சந்த்ரப்ரபாருடராய் சேவை அளிக்கும் காட்சி.

சென்றவார நிகழ்ச்சிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் அவர் தெரிவித்திருக்கிருர்.

* * * *

காங்கிரஸ் வகுத்த திட்டம்

வங்க மாகாண காங்கிரஸ் கமிட்டியினுதரவில் சென்ற மாதம் 20-ம் தேதி மாலை கல்கத்தா சிரத்தானந்தர் பார்க்கில் நடந்த மாபெருங் கூட்டத்தில் பண்டித ஜவஹர்லால் நேரு பேசினுர்.

'நாம் தைர்யமாக இருந்து எத்தகைய தாக்குதலையும் எதிர்த்து நிற்க வேண்டும்; அன்னிய ஆக்கிரமிப்பு எதற்கும் தலை வணங்கக் கூடாது; ஒரு ஆதிக்கத்தை ஒழிப்பதற்காக இன்னெரு வெளி நாட்டினரின் துணையை நாடக் கூடாது; அப்படிச் செய்தால் அது கோழைத்தனமாகும், சதா யாரோ அன்னியர் இந்தியாவை ஆளுவதைப் பற்றிய சிந்தனைக்கு நாம இடம் கொடுப்பதே தவறு; பொது மக்கள் உறுதியாக இருந்து காங்கிரஸ் வகுத்துள்ள திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்'' என்று அவர் கூறினுர்.

* * * *

சியாங்-மஹாத்மாஜி பேச்சு

மகாத்மா காந்தியும் சீனத் தலைவரான சியாங்கேய் ஷேக்கும் சென்றமாதம் 17-ம் தேதியும் 18-ம் தேதியும் கல்கத்தாவில் பிர்லா மாளிகையில் நீண்ட காலம் சம்பாஷித்தனர். இந்தப் பேச்சுகள் யாவும் முடிந்த பின்பு காந்திஜீ வார்தாவுக்குப் பிரயாணமாகிவிட்டார்.

★

ஐரோப்பியச் செய்திகள்

ஜெனரல் டோஜோ பிரசங்கம்

ஜப்பானிய பிரதம மந்திரியான ஜெனரல் டோஜோ ஜப்பானிய பார்லிமெண்டில் சமீபத்தில் பின்வருமாறு பேசினுர்:—சிங்கப்பூர் பிடிபட்டதால். கிழக்கு ஆசியாவில் ஆங்கிலேயருக்கும் அமெரிக்கருக்குமுள்ள எல்லா முக்கியமான மூலஸ்தானங்களும், தற்போது ஜப்பானியர் வசமாகிவிட்டன என்ற அர்த்தமேற்படும்.

ஜப்பானியஏகாதிபத்தியத்தை மூலாதாரமாகக் கொண்டு, தர்ம சம்பந்தமான தத்துவங்களுக்கிணங்க, பரஸ்பரம் சேர்ந்து ஒத்துழைத்து யாவரும் செழிப்பான நிலைமையில் இருக்குமாறு செய்யும் புதிய, (கிழக்காசிய) ஏற்பாட்டை நிரந்தரமாக ஸ்தாபித்து அமுலுக்குக் கொண்டு வருவதே ஜப்பானின் நோக்கமாகும். இந்த ஏற்பாட்டின்படி கிழக்கு ஆசியாவிலுள்ள ஒவ்வொரு தேசத்திற்கும், அதன் மக்களுக்கும் அவரவர்களுக்குரிய அந்தஸ்து இருந்துவரும்.

ஜப்பானின் உண்மையான உத்தேசத்தை தென்னமெரிக்க நாடுகளும் இதர நடு நிலைமை நாடுகளும் உணருமென்றும், அவை பிரிட்டனுக்காகவும் யுனைடெட் ஸ்டேட்ஸுக்காகவும் தங்களைத் துன்பத்திற்குள்ளாக்கிக் கொள்ளும் தவறை இழைக்க மாட்டாவென்றும் நான் நம்புகிறேன்.

சிங்கப்பூர் பிடிபட்டதால் யுத்தத்தின் முதல் கட்டமே பூர்த்தியாகிறது. ஜப்பானிய மக்கள் தங்களது முயற்சிகளைத் தளரவிடக் கூடாதென்றும், சிங்கப்பூர் வெற்றி பற்றி அளவு கடந்த குதூகலங்கொள்ளக் கூடாதென்றும் நான் எச்சரிக்கிறேன்.

* * * *

டார்வின் மீது குண்டு வீச்சு

டார்வின் மீது ஜப்பானிய விமானங்கள் குண்டுகளை வீசியது. இது ஆஸ்திரேலியப் பிரதம மந்திரி மிஸ்டர் கர்டின் சென்ற மாதம் 19-ம்தேதி அறிவித்தார்.

ஆஸ்திரேலியாவில் முதன் முதலாக எதிரி குண்டு வீச்சுக்குள்ளான நகரம் டார்வின் தான்.

* * * *

மாண்டலேயை ஜப்பானியர் தாக்கினர்

பிரஜா பாதுகாப்புக் கமிஷனர் இலாகா அறிக்கை பின்வருமாறு கூறுகிறது:—

ஜப்பானியப்படைகள் வேண்டுமென்றே மாண்டலேயைத் தாக்கின. பர்மாவின் புராதன மன்னர்களுடைய அரண்மனைகளுக்குச் சேதமேற்பட்டது. பொது ஜனங்களின் சொத்துக்களுக்கும் சேதம். மேலும் பர்மா கிளப்பும் சேதமாயிற்று.

* * * *

ஜப்பான் தாக்குதல்

எதிரிப்படைகள் பாலி தீவில் இறக்கப்பட்டு வருகின்றன. அவற்றை டச்சுத் துருப்புகள் தீவிரமாக எதிர்த்து வருவதாக டச்சு அதிகாரிகள் அறிவிக்கிருர்கள்.

பாலீ தீவு ஸுரபாயாவிலிருந்து 150 மைல் தூரத்திலிருக்கிறது.

பாலியிலிருந்து கிழக்கு ஜாவா மீது படையெடுப்பதே ஜப்பானியரின் நோக்கமெனச் சொல்லப்படுகிறது. இப்படையெடுப்புக்காக, அவர்கள் ஏற்கனவே சிங்கப்பூர் தாக்குதலில் உபயோகித்த பல இரும்புப் படகுகளை இங்கு கொண்டுவந்திருக்கிருர்கள்.

ஆஸ்திரேலியாவுடனுள்ள சப்ளை மார்க்கத்தைக் குலைப்பதும், ஜப்பானியரின் கருத்தெனத் தெரிகிறது.

மேற்கே ஸுமத்ரா, வடக்கே போர்னியோ, ஸெலிபஸ், கிழக்கே பாலி இந்நான்கு இடங்களிலிருந்தும், ஜப்பானியர் ஜாவாவைத்தாக்க முன் வந்திருக்கின்றனர்.

* * * *

பலம் பாங்கிற்குள் ஜப்பானியர்

சென்ற மாதம் 16-ந்தேதி ஜப்பானியப் படைகள் பலம் பாங்கில் (சுமத்ராவிலுள்ள முக்கியமான எண்ணெய் உற்பத்திக்கூடம்) இறங்கின. அவை அவ்விடத்தைக் கைப்பற்றிவிட்டன.

* * * *

சிங்கப்பூர் கவர்னர் தம்பதிகள்

மலேயா கவர்னரான ஸர் ஷெண்டன் தாமஸும் அவரது மனைவியான லேடி தாமஸும், சிங்கப்பூர் நகரில் பந்தோபஸ்தில் வைக்கப்பட்டிருப்பதாகவும், இருவரும் பத்திரமாகவும் க்ஷேமமாகவுமிருப்பதாகவும், லண்டனில் உள்ள அவர்களது உறவினருக்குத் தகவல் அனுப்பப்பட்டிருக்கிறது.

* * * *

புதிய பிரிட்டிஷ் மந்திரிகள்

ஸர் ஸ்டாபோர்ட் க்ரிப்ஸ்

திருத்தியமைக்கப்பட்ட பிரிட்டிஷ் மந்திரி சபையில் லார்ட் ப்ரிவி ஸீலாகவும் காமன்ஸ் சபை லீடராகவும் பதவி யேற்ருர்.

காப்டன் ஆலிவர் லிட்டில்டன்

பிரிட்டிஷ் யுத்த மந்திரி சபையில் புதிதாக ஸ்தானம் அளிக்கப்பட்டிருக்கிருர்.

ஸ்ரீ நித்ய கல்யாணஸ்வாமியின் ரதோத்சவம் நடக்கும் காட்சி. சிறுவர் சிறுமிகள் உத்சாகமாக தேர் வடம் பிடித்திழுக்கின்றனர்.

திருவிடந்தை

(முன் பக்கத் தொடர்ச்சி)

இங்கு வருஷா வருஷம் 10 தினங்களுக்கு உத்ஸவம் மிகவும் சம்ப்ரமமாக நடக்கிறது: சுற்றுப்புறத்திலிருந்து அநேகர் இதற்காக வந்து மனம்குளிர்கின்றனர் இன்றும்.

சிலா சாஸன பரிசீலனை

கோவிலுக்குள்ளிருக்கும் சில சாஸனங்களைப் பரிசீலித்துப் பார்த்தால். இந்தக் கோவில் நிர்மாணமாகி ஆயிரம் வருஷங்களுக்கு அதிகமாக இருக்கும் எனத் தெரிவதாகக் கூறுகின்றனர். கி.மு: 1001 1003-ம் வருஷங்களில் பிறப்பிக்கப்பட்ட சில உத்திரவுகளை நாம் இந்த சாஸனங்களில் காணலாம்: சோழ மன்னன் ராஜ ராஜ தேவன், கோவில் கட்டளைகள் சிலவற்றைப்பற்றிப் பிறப்பித்தவை. இவை. கி. பி. 1052-ம் வருஷத்தில் சோழ மண்டலத்தின் அதிபதியாக இருந்த விஜய ராஜேந்திர தேவன் இக்கோவிலுக்காக ஒரு கிராமத்தை மான்யமாக விட்டிருந்தது ஒரு சிலா சாஸனம் மூலம் தெரிய வருகிறது. இந்தக் கோவில் தற்சமயம் ஹிந்து மத தர்ம பரிபாலன போர்டார் நிர்வாகத்தின் கீழ் இருக்கிறது: இந்த கோவிலுக்கு மூன்று டிரஸ்டிகள் இருக்கின்றனர்.

அட்டைப் படம்

ஆன் ஷேர்லி: ஆர். கே. ஓ. ரேடியோ கம்பெனியாரின் ''டேவிள் அண்ட் டானியல் வெப்ஸ்டர்'' என்ற படத்தில் சிறப்புடன் நடித்து கீர்த்தி சம்பாதித்தார்.

ஜப்பானுடன் ஆஸ்திரேலியாவும் யுத்தம் தொடுத்தது. கவர்னர் ஜனரல் கௌரி பிரபு தலைமையில் ஆஸ்திரேலியா யுத்த மந்திரி சபை கூடி, இம்மாதிரி பிரகடனம பண்ணினர். (இதிலிருந்து, ராணுவ மந்திரி மிஸ்டர் போர்ட், பிரதம மந்திரி மிஸ்டர் கார்ட்டின், கௌரி பிரபு, பொக்கிஷதார் மிஸ்டர் சிப்லி, அட்டர்னி ஜனரல், வெளிநாட்டு மந்திரி, ஆகாயப்படை மந்திரி, கடற்படை மந்திரி, சட்ட மந்திரி. (வி. கே. பி.)

களிலிருந்து குமாஸ்தாக்கள், வீட்டுக்குப் புறப்பட்டு ஆபீஸர் டிரெயினைப் பிடிப்பதற்காக, வேகமாக வந்துகொண்டிருந்தார்கள். அநேகமாக எல்லோருடைய கையிலும் ஏதாவதொரு சாமான். சிலர் கையில் ஓரிரண்டு மீன்கள், சிலர் கையில் துணியில் சுற்றிய மாமிசம். மற்றும் சிலர் கையில் பாடாகாவில் கிடைக்காத சிற்சில காய்கறி வகையரா, பழங்கள்—இந்த மாதிரியாக எல்லோரும் பெண்பிள்ளைகளுக்கு ஆனந்தமூட்டும்படியாக ஏதாவது வாங்கிக்கொண்டு போனார்கள். ஒவ்வொருவர் முகத்திலும், ஆனந்தமும் ரயிலைப் பிடிக்க வேண்டும் என்ற ஆவலும் கலந்து தென்பட்டன. ராஜலக்ஷ்மி என் கையைப் பிடித்து வெகு உற்சாகமாக "ஆமாம், இவர்களெல்லாம் எதற்காக ரயிலைப் பிடிப்பதற்காக ஓடுகிறார்கள்? இன்று என்ன?" என்று கேட்டாள்.

நான் அவள் பக்கம் திரும்பிச் சிரித்துக்கொண்டே "இன்று சனிக்கிழமை, இன்று வேலைக்காரர்களெல்லாம் ஞாயிற்றுகிழமை விடுமுறையைக் கழிக்க வீட்டுக்குப் போகிறார்கள்!" என்றேன்.

ராஜலக்ஷ்மி தலையை அசைத்து "ஆமாம், அப்படித்தான் இருக்க வேண்டும். ஒவ்வொருவர் கையிலும் ஏதாவது தின்பண்டமிருக்கிறது பார். பாடாகாவில் இதெல்லாம் கிடைக்காது. பெண்டு பிள்ளைகள் கையில் கொடுப்பதற்காகக் கொண்டு போகிறார்கள், அல்லவா?" என்றாள்.

நான் "ஆமாம்!" என்றேன்.

அவள் கற்பனை வெகு வேகமாக ஓடிற்று. உடனே அவள் "ஆ! பெண்டு பிள்ளைகளுக்கு இன்று என்ன ஆனந்தம்! சிலர் ஆனந்தத்தால் கூத்தாடுவார்கள். சின்னக் குழந்தைகள் தகப்பன் மடியில் உட்கார முயலும். சில குழந்தைகள் தாயாரிடம் சொல்லச் சமையலறைக்கு ஓடும்—வீட்டுக்கு வீடு இன்று என்ன அமர்க்களமாக இருக்கும்!" என்று சொன்ன போது அவள் முகம் புள பளவென்று ஜ்வலிக்க ஆரம்பித்தது.

"ரொம்ப அமர்க்களமாய்த்தான் இருக்கும்" என்றேன் நான்.

ராஜலக்ஷ்மி வண்டியின் ஜன்னலின் வழியாக இன்னும் சிறிது நேரம் அவர்களைப் பார்த்துக்கொண்டிருந்து திடீரென்று ஒரு பெரு மூச்சுவிட்டு "ஆமாம், இவர்களுக்கு என்ன சம்பளமிருக்கும்?" என்று கேட்டாள.

'குமாஸ்தாக்களுக்கு என்ன சம்பளமிருக்கப்போகிறது. இருபத்தைந்து முப்பது இருக்கும்.'

'ஆனால் இவர்கள் வீட்டில் தாயார் இருப்பாள், சகோதர சகோதரிகளிருப்பார்கள், மனைவி மக்கள்—"

நானும் சேர்ந்து "ஓரிரண்டு விதவை சகோதரிகள், கலியாணம் கார்த்திகை, விருந்தாளி வகையராக்கள், கல்கத்தா நகரத்துப் போஜனச் செலவு. வைத்திய, செலவு—வங்காளி குமாஸ்தாவின் முப்பது ரூபாயில் இவ்வளவும் ஆகவேண்டும்!" என்றேன்.

ராஜலக்ஷ்மி மிகவும் வியாகுலமடைந்து "உனக்குத் தெரியாது, இவர்களுக்கு பூமி காணியும் இருக்கும், நிச்சயம்!" என்றாள்.

அவளுடைய முகத்தைப் பார்த்தபொழுது அவளுடைய ஆசையைக் கெடுக்க எனக்கு இஷ்டமில்லை. இருந்தாலும் இவர்களுடைய சொத்து விவரங்களைப்பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். இவர்களில் ஒருவனுக்காவது தம்பிடி கூடக் கிடையாது என்று எனக்கு நிச்சயமாகத் தெரியும். வேலை போனால் பிச்சை, இல்லாவிட்டால் குடும்பத்துடன் பட்டினி. இவர்களுடைய பெண்டுபிள்ளைகளின் விஷயம் என்ன தெரியுமா?" என்றேன்.

ராஜலக்ஷ்மி திடீரென்று இரு கைகளையும் தூக்கி "வேண்டாம் வேண்டாம், சொல்லாதே நான் கேட்க வேண்டாம்!" என்றாள்.

அவள் சிரமப்பட்டுத் தன் கண்ணீரை அடக்கிக்கொண்டிருந்தாள் என்பது அவள் முகத்திலிருந்தே தெரிந்தது, ஆகையால் மேலும் ஒன்றும் சொல்லாமல் மறுபடியும் பாதையைப் பார்க்க ஆரம்பித்தேன். வெகுநேரம் வரை அவள் பேசவே இல்லை. அதுவரையில் தனக்குள் ஏதோ யோசித்துக் கொண்டிருந்தவள், கடைசியில் ஆவலின் மேலீட்டால், தன் தோல்வியையும் மறந்து என் கோட்டின் முனையைப் பிடித்து இழுத்தாள். நான் திரும்பிப் பார்த்ததும் அவள் இளகிய குரலில் "நல்லது, அவர்களுடைய குழந்தைகளின் விஷயத்தைச் சொல், ஆனால் உன் காலில் விழுந்து கேட்டுக் கொள்ளுகிறேன். பொய் சொல்லாதே, உனக்கு புண்ணியமுண்டு" என்றாள்.

அவள் இன்னும் சந்தேகப் படுவதைக் கண்டு எனக்கு சிரிப்பு வந்தது. ஆனால் நான் சிரிக்கவில்லை. அதற்குப் பதிலாகக் கொஞ்சம் அதிகமான கம்பீரத் தொனியிலேயே "நான் மிகைபடுத்திக் கூறுவது ஒருபுறமிருக்கட்டும. நீ இந்தக் கேள்வி கேட்பதற்குக் கொஞ்ச நேரத்திற்கு முந்திதான் பிச்சை எடுத்தாவது குழந்தைகளை வளர்த்து விடுவதாகச் சொன்னாய். தான் சிருஷ்டித்த ஜீவன்களைக் காப்பாற்றுவது பகவானின் பொறுப்பு என்பது இருக்கலாம். நான் அதை நம்பாவிட்டால் நீ என்னை நாஸ்திகன் என்றுசொல்லுவாய் ஆனால் பிள்ளைகளை வளர்ப்பதில் பெற்றோர் பொறுப்பு எவ்வளவு, கடவுள் பொறுப்பு எவ்வளவு என்பதை நீயே தீர்த்துக் கொள். நான் அறிந்ததை மட்டும் சொல்லுகிறேன். என்ன" என்றேன்.

நான் சொல்லப்போவதைக் கேட்க விரும்பியவளாய் அவள் மௌனமாக என்னைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"குழந்தை பிறந்து சிறிது காலம் அதற்குப் பால் கொடுத்துக் காப்பாற்றும் பொறுப்பு தாயின் மேல் தான் சுமருகிறது. என்று நினைக்கிறேன். எனக்குக் கடவுளிடத்தில் அசைவுருத பக்திதான். அவருடைய தயையில் எனக்குக் கண்தெரியாத நம்பிக்கைதான். ஆனால் அப்படியிருந்தும் தாயின் சுமையையேற்க அவருக்கு ஏதாவது வழியிருக்கிறதா, இல்லையா—" என்றேன். சொல்லி முடிப்பதற்குள் கோபத்துடன் சிரித்துக்கொண்டு "இந்தா என்னை ஏமாற்றுதே. அதெல்லாம் எனக்கும் தெரியும்" என்றாள்.

"தெரியுமா? கிடக்கட்டும் அப்படியானால் ஒரு சிக்கலான பிரச்னை தீர்ந்தது. ஆனால் முப்பது ரூபாய் வீட்டில் தாய்ப்பால் சுஷ்கமாவதற்கு வெகு தாமதமாவதில்லை. என்பது தெரிய வேண்டுமானால் ஏதாவது முப்பது ரூபாய் சம்பள வீட்டில் சாப்பாடு நடக்கும்போது போய்ப் பார்க்க வேண்டும். ஆனால் அது முடியாது போனால் என் வார்த்தையைத்தான் நம்பவேண்டும்."

ராஜலக்ஷ்மி மலினமான முகத்துடன் மௌனமாக என் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"பாடாக்கிராமம் ஊரில் பசும்பால் கிடைப்பது எவ்வளவு கடினம் என்பதையும் நீ ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்"

ராஜலக்ஷ்மி உடனே 'அது எனக்கே தெரியம். வீட்டில் பசு இருந்தால் போச்சு. இல்லா விட்டால் இப்பொழுதெல்லாம் மண்டையை உடைத்துக் கொண்டாலும் சங்கு பால் கூட கிடைக்காது. பசு இல்லாவிட்டால் பால் ஏது?" என்றாள்.

"சரி. மற்றொரு பிரச்னையும் தீர்ந்தது, அப்பொழுது குழந்தைக்கு ஏற்படும் பாக்கியம் சுதேசிக் கஞ்சி அல்லது விதேசிப் பார்லிக் கஞ்சி. அதிலும் சில துர்பாக்கியக் குழந்தைகளுக்கு அறை வயிற்றுக் கஞ்சிதான். சில குழந்தைகளுக்குக் கொஞ்சம் தாய்ப்பாலும் கூட சேருகிறது. அநேக சமயங்களில் இந்த அதிர்ஷ்டமும் நீடிக்கிறதில்லை. நாலைந்து மாதங்களுக்கெல்லாம் மற்றொரு விருந்தாளி தான் பிறக்கப் போவதாக நோட்டீஸ் கொடுத்துத் தாய்ப்பாலை நிறுத்தி விடுகிறான். இவ்வளவும் தெரிந்தால் நீ"...

ராஜலக்ஷ்மி வெட்கம்மேலிட்டு முகம்சிவக்க "தெரியும், தெரியும்.

ஹிந்தி ஆசான்

உபாத்தியாயர் உதவியில்லாமல் தமிழ் உச்சரிப்பைக்கொண்டே நாலே வாரத்தில் நல்ல ஹிந்தி பாஷையை சுலபமாகக் கற்றுக்கொள்ளலாம். விலை 12 அணா. ஒரு காபி அனுப்ப அணா 14 மணியார்டர் செய்யவும்.

எம். எஸ் ராமுலு கம்பெனி, 286, எஸ்பிளனேட், மதராஸ்.

வைரங்கள் வாங்கும் ஆபீஸ்: ஆண்ட்வர்ப் & ஆம்ஸ்டர்டாம்

டெலிபோன்: 2696. டெலிகிராம்: 'NECKLACE

பாபாலால்

நம்பிக்கைக்கான பெயர்போன ஸ்தாபனம்

தங்கம், வெள்ளி, சாமான்கள் கையாலேயே தயாரிக்கப்படுகின்றன. ஆகவே நீடித்திருக்கின்றன. தவிர இந்த உத்திரவாதமும் உண்டு.

"எங்களிடம் வாங்கிய எல்லா தங்க, வெள்ளி சாமான்களையும் பிற்காலத்தில் மாற்றவேண்டுமாயினும் அல்லது அவற்றிற்குப் பணம் வேண்டுமாயினும், அவ்வப்பொழுதுள்ள சவரன் நாணய (Coin) விலைப்படியும் — சுத்த வெள்ளிக்கிரயப்படியும் கொடுக்கிறோம். —

பத்திரமான மூலதன முதலீடு - எவ்வித குறைவும் கிடையாது.

பாபாலால் & கம்பெனி,

(ஸ்தாபிதம்: 1910)

வைரம், தங்கம், வெள்ளி நகை வியாபாரிகள்.

ராம்கோடி பில்டிங் - ராட்டன் பஜார், பார்க் டவுன், மதராஸ்.

ஞாயிற்றுக்கிழமை பகல் 1-மணிவரை தான் கடை உண்டு.

சிங்கத்துக்குரியதை நரி நாடலாமா?

ருக்மிணீ ஹரணம்

மஹாமஹோபாத்யாய ★ ஆர். வி. கிருஷ்ணமாச்சாரியார் ★

நான்காம் அங்கம்

ரதத்திலேறிக்கொண்டு ஸாத்யகியும் ஸாரதியும் வருகிறார்கள்.

வத்ஸராஜன் எழுதிய இந்த "ருக்மிணீ ஹரணம்" ஈஹாம்ருகம் என்ற ரூபக வகுப்பில் சேர்ந்தது. இது நான்கு அங்கம் கொண்டது. இங்கு மொழிபெயர்த்திருப்பது நான்காம் அங்கம். கதை மிகப் பிரஸித்தி பெற்றது. கதையிலும் கற்பனைகளிலும் சமத்காரம் விசேஷமாகத் ததும்பும்படி எழுதும் சக்தி இக் கவிக்கு இயற்கையாகவே அமைந்துளது; இந்த ரூபகம் முழுதிலுமே இதனை நாம் காணலாம். இதில் கவிதை நடை மிகவும் கம்பீரமானது.

ஸாத்யகி:— (ஆச்சரியத்துடனும் சந்தோஷத்துடனும்) ஆஹா ஹா! என்னே! ருக்மிணியின் அக்காலத்திய நிலைமை? வெகுகாலமாய் விரும்பிய கிருஷ்ணனைக் கண்டதும் மகத்தான மகிழ்ச்சியும். திடீரெனத் தோன்றி கிருஷ்ணன் பலாத்காரமாக அபஹரிக்க வந்ததை நினைத்து அதிகமான அச்சமும் பிறக்க திசைகள் தோறும் மிரள மிரள விழித்துப் பார்வையைச் செலுத்திக் கொண்டே, ருக்மிணி, ஸுபுத்தியும் ஸுவத்ஸலையும் கூட நின்று ஆறுதல் கூறியதால் மனக்கலக்கம் நீங்கி ஸந்தோஷமாக கிருஷ்ணனுடைய ரதத்தை வந்தடைந்தாள். நானும் ஒரு நல்ல காரியம் செய்தேன்—போர் புரியப் பெரிதும் ஊக்கம்கொண்ட கிருஷ்ணனின் காலில் விழுந்து நமஸ்கரித்து, யுத்தத்தில் இறங்காமல் ருக்மிணியுடன் முன்னதாகவே புறப்பட்டுப் போகும்படி அவரைப் பிரார்த்தித்தேன். கிருஷ்ணனும் அவ்வாறே செய்தார். இல்லாவிடில். ருக்மிணியின் பந்துக்களை அமர்க்களத்தில் கிருஷ்ணன் கடுமையாகத் தாக்கும்பொழுது, அதனைக்கண்டு பூவைப் போல் மெல்லிய அவளுடைய உள்ளம் உடைந்து எவ்வாறுகுமோ? யார் அறிவார்? கன்னிகையின் அந்தப்புரத்தில் விநோதத்துக்காக அரசனால் வைக்கப்பட்டிருக்கும் குள்ளர் கூனர் முதலியவர்களும், ருக்மிணியின் இந்திராணி பூஜை நிமித்தம் அழைக்கப்பட்ட அந்தணர்களும் குறுக்கே வந்து தடுக்கவே; அவர்களை நான் சிரித்துக்கொண்டே அகற்றினேன். வேறு சில படர்கள் ஓடி வந்து வீணில் வீரம் காட்டவே அவர்களைக் கத்திக்கு இரையாக்கினேன். எனது வாளுக்கோ இப்படிக் கொஞ்சம் கொஞ்சமாக வீரர்களை வெட்டித் தள்ளுவதில் திருப்தி இல்லை. நம்மவர்களை எதிர்க்க ருக்மீ சிசுபாலன் முதலிய எதிரி வீரர்கள் கூட்டம் கூட்டமாக மிககோபத்துடன் ஓடியிருக்கிறார்களெனத் தெரிய வருகிறது. ஆகையால் பலராமன் முதலிய நம் சூரர்கள் இருக்குமிடம் செல்கினறேன். ஸாரதீ! ரதத்தை வெகுவிரைவாக நடத்து. (ஸுபுத்தி—ஒரு துறவி ஸ்தரீ, ருக்மிணிக்குக் கௌரீ மந்திரம் உபதேசித்தவள், ருக்மிணிக்கு விவாஹ விஷயத்தில் உதவிபுரிபவள்: ஸுவத்ஸலை—ருக்மிணியின் தோழி.)

ஸாரதி:—(அவ்வாறு செய்து விட்டு, முன்புறம் நோக்கி) ஆயுஷ்மானே! அதோ பார்-பலராமன் படைகளுடன் திரும்பி இந்தப் பக்கமாக வருகின்றாரே!

ஸாத்யகி:—(பார்த்து, திடுக்கத்துடன்) ஆ! இஃது என்ன? ருக்மி சிசுபாலன் முதலியவர்களைக் கொன்று விட்டுப் பட்டணத்தையே பழுதுபடுத்த வருகிறதாகத் தோன்றுகிறதே! நான் ஓடிச் சென்று அணுகித் தடுத்து விடுகிறேன்.

இரண்டாம் காக்ஷி.

பலராமனும் ஸாத்யகியும் வருகிறார்கள்.

ஸாத்யகி:—(நமஸ்கரித்து) மஹாவீரா! பலதேவா! இப்பொழுது என்ன செய்யப் புறப்பட்டிருக்கின்றீர்? பீஷ்மகனுடைய நகரத்தை நாசம் செய்யவா? சிசுபாலாதிகளைக் கொன்றதே போதும். பீஷ்மகன் நிரபராதி. அவருடைய பட்டணத்தை அழிக்க வேண்டாம்.

பலராமன்:—ஸாத்யகி! அவர்களை யார் வதைத்தார்? யாருடைய கண்ணில் பட்டார்கள் அவர்கள்?

ஸாத்யகி:— (ஊஹத்துடன்) பல தேவா! அவர்கள், 'தாங்கள் வீரர்கள்' என்ற அஹந்தை பிடித்தவர்கள், ஓடி ஒளியமாட்டார்கள். அவர்களுக்குக் கிருஷ்ணன் மீதுதான் கடுங்கோபம். ஆகையால் கிருஷ்ணனைத் தாக்கச் சென்றிருப்பார்கள். நாம் தாமஸிக்கக் கூடாது. கிருஷ்ணன் போயிருக்கும் திக்கை நோக்கி நாமும் போவோம். (செல்கின்றனர்.)

பலராமன்:—(முன் பக்கம் பார்த்து மகிழ்ச்சியுடன்) ஸாத்யகி! உனது ஊஹம் உண்மையாயிற்று. அந்தத் துஷ்டர்கள் என் கண்ணில் படுகின்றார்கள்.

ஸாத்யகி:— (பரபரப்புடன்) பல தேவருடைய கண்ணிற் பட்டவர்கள் யமனுடைய கண்ணிற்பட்டவர்கள்தான்.

பலராமன்:—(வருத்தத்துடன்) ஐயோ! சமீபத்தில் தான் காணப்படுகிறார்கள். ஆயினும், இவர்கள் நம்மை எதிர்க்காமல் பராமுகமாகவல்லவோ செல்கின்றார்கள். இவர்கள்மீது அம்புவிடுவது அடாத காரியமன்றோ.

ஸாத்யகி:—நில்லும், நில்லும், நான் இவர்களை, நம்மை எதிர்த்து வருமாறு செய்கின்றேன். (இகழ்ச்சியாக உறக்க) அடே! அடே ருக்மீ! ரதமேறிச் செல்வதால் யமனைக் கடக்க முடியுமா? யுத்தத்துக்கு வராமல் விலகிவிட்டால் உனது ஆயுள் நீளுமென்று உனக்கு எவனாவது உறுதி கூறியிருக்கிறானா? நீ வீர வம்சத்தில் பிறந்ததை மறந்தனையா? உனது குலம் பேடி பிறக்கும் குலமா? நீ கையிலேந்தியிருக்கும் கத்தி, க்ஷத்திரியருடைய பூசனைக் குறியதன்றோ! அதனை நீ, கண்ணெடுத்துப் பாரேன்.

பலராமன்:—(கோபத்துடன், அவமதிப்பாக) அடே அடே சிசுபாலா! மூர்க்கப் பயலே! பயத்தால் கலங்கி ஓட்டமெடுக்கின்றாயே. சிறந்த க்ஷத்ரிய மரபு முறையை இவ்வாறு மீறுகின்றாயே! சௌரியத்தில் காலை உறுதியாக ஊன்றி நில். சீ சீ! என்னே பயங்கொள்ளித்தனம்! சத்துருக்களை வென்று இம்மை நலத்தை நீ நாடுக. அல்லது வீர ஸ்வர்க்கம் போக சூரிய மண்டலத்தை ஊடுருவிச் செல்லப் பிளக்குக. மஹா வம்சத்தில் (வம்சம்=குலம், மூங்கில்) உதித்த உனது வில் தலை வணங்கி உன்னைப் போர் புரிய வேண்டுகிறது பார். ஏ, ருக்மியின் பந்துக்களான அரசர்களே! சிறந்த ஒரு கிரமம் சொல்லுகிறேன்—நாங்கள் உங்களுக்கு சம்பந்திகளாக வந்திருக்கின்றோம். நீங்கள் எங்களோடு ஒன்று கூடி இந்த யுத்த மஹோத்ஸவத்தில் பங்கெடுத்துக்கொண்டு உங்களுடைய கை வலிமைச் செருக்கைக் காட்ட வேண்டும். இதுதான் முறை.

ஸாத்யகி:—(முன் புறம் நோக்கி. பெரு மகிழ்ச்சியுடன்) பல தேவரே! உமது பாக்கிய காலம் ஓங்குகிறது. உமது வார்த்தை ருக்மியையும் சிசுபாலனையும் நம் எதிர் புறமாக வரத் திருப்பி இழுத்துவிட்டது.

(ருக்மியும் சிசுபாலனும் வருகிறார்கள்)

சிசுபாலன்:—(கர்வத்துடன் எள்ளி நகைத்து) அடே! பலராமா! உங்களுடைய ஸஹோதர வாஞ்சையை நான் என்னென்று புகழ்வேன்—கிருஷ்ணனைப் பிடிக்க ஓடிய அகால மிருத்யுவை வருந்தி அழைத்து உன் மீது ஏற்றிக்கொண்டாயன்றோ?

ருக்மி:—(அஹந்தையுடன்) சேதி நாட்டதிபதியே! அவ்வாறன்று. நாம் முதலில் தலைமையன் பலராமனைக் கொன்றுவிட்டுப் பிறகு தானே தம்பி கிருஷ்ணனை கொல்ல வேண்டும். இதுதானே நல்ல அரசுமுறை. இம்முறையை நாம் காப்பாற்றுவதற்காகவே இங்ஙனம் நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

பலராமன்:- (கோபத்துடன்) அடே சிசுபாலா! எனக்கு ஏதடா ஸஹோதர ஸ்நேஹம்? இப்பொழுது எங்குமே யுத்தம் கிடையாது. அவரவர் தம் தம் பிரதாபத்தைக் காட்ட வழி ஏது? இவ்வாறிருக்கையில், தெய்வச் செயலாய் நீ ஒருவன் போர் புரிய வந்தாய். உன்னை என் தம்பி கிருஷ்ணன், தனது வாளுக்கு இரையாக்க எண்ணியிருக்கையில், நான் அதனைத் தவிர்த்துவிட்டு என் அம்புகளுக்கு இலக்காக்கத் தொடங்கியிருக்கிறேனே. எங்களுக்குள் சகோதர வாஞ்சையில்லாமையைக் காட்ட இது ஒன்றே போதாதா?

ருக்மி:—(பலராமனைக் கவனித்துப் பார்த்து. மனத்துள்) ஆமாம். இவனுக்குக் கலப்பையன்றோ பெரிய ஆயுதம். இருக்கட்டும். இம்மாதிரி பேசுகிறேன். (வெளிப்படையாக, இகழ்வாக நகைத்து) அடே! பலபத்திரா! என்னடா! மூர்க்கனாயிருக்கின்றாயே. என்னடா இறங்காத் துறையில் இறங்கி விட்டாய்! போரென்பது வீரர்கள் நடக்கும் பாதையன்றோ. அடே! மெதுவான யமுனையாற்றை இழுக்க உன்னால் முடியும். பிரலம்பாஸுரன் என்னும் புல்லைப் பிடுங்கியெறிய வல்லமை வாய்ந்தவன் நீ. ஆயினும் என்ன? இதுவோ யுத்த பூமி; இது இரும்பு போல அழுத்தமுள்ளது. மிக்க விஷமமானது. அடே கலப்பைக்கரா! இதில் நீ உனது ஊக்கத்தை உபயோகிக்க வேண்டாம். இன்றேல், உன் கலப்பை நுனி முறிந்து வீணாய் விடும். மேலும் ஏ பலராமா! நீயோ கலப்பையை அசைத்துக்கொண்டு நடக்கும் வெறும் எருது. உன் கலப்பையைப் பிளந்து உன்னை வீழ்த்துவதால் எங்களுக்கு என்ன கீர்த்தி ஏற்படப்போகிறது?

சிசுபாலன்:—ருக்மீ! நல்ல காலம் நமக்கு வந்தது. பெரும் பறை முழக்கம் காதில் விழுகிறதா? நம் போர் முரசு முழங்கவே, கிருஷ்ணன் திரும்பி வருகிறான்.

ருக்மி:—(ஊன்றிக்கவனித்து. கிருஷ்ணனுடைய துந்துபி சப்தம் என்று அறிந்து, சந்தோஷத்துடன்) ப்ரியம், ப்ரியம்.

யுத்தம் நிகழ்த்த நமக்குள்ள பேராசை சிறிதாவது பூர்த்தி பெறட்டும்.

பலராமன்:—ஸாத்யகி! என்னடா கிருஷ்ணன் இப்படிச் செய்கிறான்!

ஸாத்யகி:—போர் முரசு முழக்கத்தைக் கேட்டு விட்ட பிறகு கிருஷ்ணனால் சும்மா இருக்க முடியுமா? குஞ்ஜரத்தின் குமுறலைக் கேட்ட பின் சிங்கம் பாயத்தயங்குமா?

மூன்றும் காக்ஷி

கிருஷ்ணன், ருக்மிணி, ஸுபுத்தி, ஸுவத்ஸலை இவர்கள் ரதத்தில் வருகிறார்கள்.

கிருஷ்ணன்:—(கடிந்து கொண்டு) அடே! தாருகா! என்னடா உனக்கு இவ்வளவு கடுக்கம்? நீ இதம்புரிவது இவ்வாறுதானா? குதிரைக் கடிவாளக் கயிற்றை வலுவாக இழுத்துப் பிடித்துக்கொண்டு லோபியைவிட அதிகமாகவே கையை அழுத்தமாய் மூடிக்கொண்டு விட்டாயே! எதிரிகளின் அம்புகள், நம் அண்ணன் மீது விழலாகாது. அவர் வாட்டம் அடையக் கூடாது. குதிரைகளை வேகமாகச் செலுத்தூண்டு. இயற்கையாகவே கரு நிறம்கொண்ட எனக்குப் புதிதாக ஓர் அபகீர்த்திக்கருமை உண்டாக்கவேண்டாம்.

ஸாரதி:—(பயந்து, விநயத்துடன்) இதோ கயிற்றை தளர்த்தி விடுகிறேன். பிரபுவே! ஜயலக்ஷ்மியிடம் பொருமை கொண்டாற்போல யுத்தபூமி, ஒரு நொடிப்பொழுதில் தேவரீரை அணுகி முன்நிற்கப் போகிறது.

ருக்மிணி:—(விஸனத்துடன், ரஹஸ்யமாக) பகவதி! உனது மந்திரசக்தியை முன்பு அநுக்கிரஹ விஷயத்தில் நான் கண்டு கொண்டேன். இப்பொழுது நீ நிக்ரஹ விஷயத்தில் அதனைக் காட்டவேண்டும், நான், எனது பந்து வர்க்கம் இறந்து படக்காரமாய்விட்டேன். இத்தகைய என்னை நிக்கிரஹிப்பது (மரிக்கச் செய்வது) உரியகாரியமே.

ஸுபுத்தி:-வத்ஸே! ருக்மிணீ ஆறுதலடையுக. நிம்மதியாயிரு. நிக்கரகிக்குமாறு எனக்கு மந்திர சக்தி கிடையாது. நீ வீணில் வருந்தவேண்டாம். உனது ரூபமும் பாக்கியமும் வளர்ந்தோங்கி விளங்குகின்றன. எல்லாம் மங்களமாகவே முடிவுபெறும்.

ஸாரதி:—பிரபுவே! நம் ரதம் சத்ருரதங்களை அணுகிவிட்டது. சார்ங்கத்தை (வில்) தயார் படுத்துங்கள்.

கிருஷ்ணன்;—(வில்லைக் கையிலெடுத்துக்கொண்டு, ருக்மிணியைப் பார்த்து) இனியாளே! ஏன் இங்ஙனம் கலங்கி நிற்கின்றாய்? நீ பந்துக்களுடன் பற்பல மங்களங்களைப் பெற்று வாழப் போகின்றாய். இதோ உனக்கு நேரும் அனிஷ்டத்தை அகற்றப் போகின்றேன்.

(ருக்மிணி மனத்தேறுதலடைந்து, நாணித் தலை குனிந்து இருக்கிறாள்.)

கிருஷ்ணன்:—(முன்புறம் பார்த்து, ஓஹோ! சிசுபாலன் பலராமனுடைய ரதத்தை நோக்கி ஓடுகிறான்! (அவமதிப்புடன்) அடே! நில்லு, நில்லு, அடே சிசுபாலா! வடவைத் தீ வாயில் குதிக்காதே, பலராமனைக் கோபமுறச்செய்யாதே. அவருக்குச் சீற்றம் சிறிது பிறந்தாலும், உனக்கு இருப்பிடம் யமலோகம் தான்.

சிசுபாலன்:-(ரதத்தைத் திருப்பிக்கொண்டு வந்து, ரோஷத்துடன்)அடே, அடே கிருஷ்ணா! தூர விலகு. தூர விலகு. நீ நம்போன்ற சிறந்த வீரர்களோடு போர் புரியத் தகாதவன். கன்னிகை ருக்மிணியை கவலையற்று அமைதியாக இந்திராணியை அடிபணிந்துவழிபாடு செய்து குலகன்னிகைக்கு ஒத்தவாறு பவனி வருகையில், அடே கிருஷ்ணா! நீ பலாத்காரமாக அபஹரித்துச் சென்றாயே! நீ இவ்வண்ணம் செய்தது அறமா, மறமா? இது க்ஷத்ரியர் செய்யும் நற்காரியமா? இது உற்றார்க்குரிய உள்ளன்பா? இது உலக நடபடிக்கு ஒத்துள்ளதா?

கிருஷ்ணன்:—(அவமதிப்புச் சிரிப்புடன்) நியாயம். நியாயம். அப்பா சிசுபாலா! அந்தக் கட்டழகி ருக்மிணி, அறிவு தொடங்கிய நாள் முதல் என்னிடம் எல்லையில்லாக் காதல் கொண்டவள். நான் அவளைக் கைப்பற்றாவிடில், அவள் தனது உயிரை விடுவதாக உறுதி பூண்டவள். அவளோ கன்னிப் பெண். இவ்விதமுள்ள ருக்மிணியை நான் கத்தி பலம் மூலம் கைக்கொண்டேன். இந்தக் காரியத்தில் நான் நிந்தனைக்குரியவன்! அல்லவா! நீயோ வெட்கம் விடுத்து வசை மொழி பொழிகின்றாய். உன்னை எல்லாரும் சிலாகிக்க வேண்டும்! அல்லவா! என்னே! விபரீதம்.

சிசுபாலன்:—(எள்ளி நகைத்துப் பரிஹாஸமாக) வீர கிருஷ்ணா! ஆமாம். அப்படித்தான், நான் வெறும் வசவு வார்த்தையோடுமட்டும் நின்று விடுபவன் தான்; அசக்தன், நீயோ சூரர்களின்முன்னணியில் நிற்பவன்! நீ எவ்வளவு வீரச் செயல்களை வெளிக்காட்டியிருக்கின்றாய்! மலைப்பாம்பைமாய்த்தாய்! கழுதையை ஒழித்தாய்! காளையைக் கொன்றாய்! குதிரையைக் குலைத்தாய்! ஆனையை அழித்தாய்! ஆஹா! என்ன சௌரியம்! என்ன புகழ்! என்ன பாக்கியம்! இவை நிற்க அரசனும் மாமனுமான கம்ஸனையும், பெண் பிள்ளையான பூதனையையும் கொன்றாயே! இவ்விரு அத்புதச் செயல்களைப் போற்றிப் புகழ உலகில் ஒருவராலும் முடியாது. (பாம்பு—அகாஸுரன், கழுதை—தேனுகன், காளை—அரிஷ்டன்,குதிரை—கேசி,ஆனை—குவலாயாபீடம்.)

ஸாத்யகி:—கிருஷ்ணா! கிருஷ்ணா! சிசுபாலன் திட்டட்டும், திட்டட்டும். இவனுடைய நூறு குற்றங்களை நீ பொறுக்க வேண்டுமல்லவா?

சிசுபாலன்:—(குரோதத்துடன்) அடே டே! எப்படி எப்படி? நூறு குற்றங்களை எல்லையாக வைத்து என்னைக் காப்பாற்றுகிறீர்களா! அப்படியா? இதோ பாருங்கள்-நான் ஏன் நூறு வசை மொழிக் குற்றங்களைவிட மேலான ஒரே குற்றம் செய்து விடுகிறேன்—வேறொருவனுடைய பெண்ணைக் கபடமாகக் கைப்பற்றிக் கடத்திப்போன மஹாவீரனை கிருஷ்ணனைப் போர்க் களத்தில் பிளந்து நரிகளுக்கு நல்விருந்தளிக்கின்றேன்.

பலராமன்:--(கோபத்துடன்) அடே! யுத்த நடை முடவா! கண்ணிருக்கக் குருடா!உன் அவயவங்களுள் வாயொன்றுதான் வசைமொழிப் பிரயோகத்தில் வீரத்தனம் வாய்ந்தது. அடே சிசுபாலா! நீ நான்கு கைகளோடும் மூன்று கண்களோடும் பிறந்தாய். கிருஷ்ணனுடைய கிருபையால் இரு கைகளும் ஒரு கண்ணும் மறைந்தன. அவை மிகவும் புண்ணியம் செய்தவை. அவைகளுக்கு யாதொரு அபகீர்த்தியும் ஏற்பட இடமில்லாது போயிற்று. இப்பொழுது இருக்கும் இரு கைகளும் இரு கண்களும்தான் மஹா பாபிகள். இவைகளுக்கு நீ யுத்தத்தில் வெற்றி பெற்று மகிழும் நிலைமையைக் கண்டு களிக்கப் பாக்கியமில்லாமல் உனது தோல்வியைக் காணும் துர்த்தசை ஏற்படுகிறதே! அடே! இங்கிருக்கும் அரசரனை வரும் பீஷ்மகனுடைய அழைப்புக்கு இசைந்து வந்தவர்கள் நிரபாரதிகள். இங்கு யுத்தம் தொடங்கினால் அவர்களுக்கும் உபத்திரவம் நேரிடும். ஆகையால், அடே சிசுபாலா! அடே ருக்மீ! புறப்படுங்கள் யுத்தம் நடத்தத்தகுந்த இடத்துக்குப் போவோம்.

ருக்மி:—(ரஹஸ்யமாக) சிசுபாலா! இந்தப் பலராமனும் கிருஷ்ணனும் பெரும்போர் புரியும் முறையை நன்கு கற்றுக் கைதேர்ந்தவர்கள். ஆகையால் நாம் இவ்வாறு செய்வோம். (காதில் சொல்லுகிறான்: பிறகு வெளிப்படையாக, கோபத்துடன்) பலராமா! நீ மட்டும் வரவேண்டாம். கிருஷ்ணனையும் அழைத்து வா. நாங்கள் அமர்க்களம் போகின்றோம்.

(சென்றனர்.)

(திரைக்குள்:—ஆ! என்னே! ஆச்சரியம்! எய்பவனின்றியே அம்பரத்திலிருந்து அம்புமழை சொரிகிறதே! ஆ! மத்தியான்ன காலத்திலேயே யமனெருமைக் கிடாவைப்போலக் கருத்த கூரிருட்டு கிளம்புகிறதே!)

(மறுபடியும் திரைக்குள்:—பார்த்தீர்களா! இரு ரதங்களும் சூன்னியங்களாயிருக்கின்றன. அந்த இரு வாயாடிகளும் ஓடிவிட்டனர். நாயகனில்லாமலேயே படைகள் நன்கு பொருதுகின்றனவே. என்னே! அத்புதம்!)

கிருஷ்ணன்:—(செவி சாய்த்து, மனத்துள்) ருக்மியும் சிசுபாலனும் ஆகாயத்தில் ஒளிந்து கொண்டு மாயப்போர் செய்வதில் தங்களுக்குள்ள ஆற்றலைக் காட்டுகிறார்கள்: திண்ணம். ஆகையால் நானும் கருடன் மீதேறிக்கொண்டு வானம் சென்று அவர்களை அங்கிருந்து தள்ளிவிடுகிறேன். (வெளிப்படையாக) பகவதி ஸுபுத்தி! அம்மா ஸுவத்ஸலே! நீங்களிருவரும் ருக்மிணிக்கு ஆறுதல் கூறி அவளை விநோதிப் பித்துப் பார்த்துக்கொள்ளுங்கள். நான் இந்த அனர்த்தத்தை அகற்றுகிறேன்.

(ருக்மிணி நாணத்துடனும் துயரத்துடனும் முகம் வணங்கி நிற்கின்றாள்.)

ஸுபுத்தி—ஸுவத்ஸலை:—வீரருக்கு விஜயம் உண்டாவதாக.

(கிருஷ்ணன் தியானிக்கின்றார்.)

அக்ரூரன்;—(உயரப் பார்த்து, ஆச்சரியத்துடன்) என்ன இது? தங்க மலை (மேரு) சிறகு முளைத்துப் பறந்து வருகிறதா? அல்லது? அக்கினியே தனது சுவாலைகளை எங்கும் உக்கிரமாக பரவ விட்டுக்கொண்டு வருகின்றானா? அல்லது, தேஜோநிதியான ஸாக்ஷாத் சூர்யபகவானே, இக் கூரிருட்டை நீக்கவருகின்றாரா?

பலராமன்:- (பரபரப்புடன்) நிச்சயம், ஒழுக்கம் கெட்ட நம் எதிரிகளின் மாயைச் செயல் இது. இவர்களைக் கூரிய பாணங்களால் ஆகாசத்திலேயே அடித்து விடுகிறேன். (வில்லில் நாணேற்றுகிறார்.)

கிருஷ்ணன்:- (பரபரப்புடன்) அண்ணா! நிற்க, நிற்க. நான் கருடனை வருமாறு நினைத்தேன். அவன் வருகிறான். இவன் மீது ஏறிக்கொண்டு ஆகாசத்திலிருக்கும் சத்துருக்களை அடக்கி விடுகிறேன்.

(கருடன் வருகிறான்)

கருடன்;— (தண்டனிட்டு) என்னைக் கட்டளையிட்டு அநுக்கிரஹிக்க வேணும் கண்ணன். தேவரீருக்குப் பாதாளம் போக விருப்பமா? அவ்வாறாயின், எனது இறகு காற்றினால் கடல் நீரை இரு கூறுகப் பிரித்து, நடந்து செல்ல வழி ஏற்படுத்தி விடுகிறேன். அல்லது நான் முகன், முக்கண்ணன். வானோர் கோன், முதலிவர்களைப் பார்க்க வேண்டுமென்று விருப்பமா? அப்படியானால், அவர்களை இதோ இங்கு கொண்டு வந்து சேர்க்கின்றேன்.

கிருஷ்ணன்:—(ஸந்தோஷத்துடன் புன் சிரிகொண்டு) வா, அப்பா! வா. இரு எதிரிகள் ஆகாசத்தில் மறைந்துகொண்டு யுத்தம் செய்யத் தொடங்கியிருக்கிறார்கள். உன் மீது அமர்ந்து வானம் சென்று அவர்களைத் தேடிப் பிடிக்க வேணும்.

கருடன்:—திருவுள்ளப்படி. செய்யலாம், (கிருஷ்ணனைத் தோளில் எடுத்துக்கொண்டு ஆகாசம் நோக்கிச் செல்கின்றான் கருடன்.)

அக்ரூரன்:—அந்தோ! பாருங்கள், பாருங்கள்—கருடன், பகைவர் விடும் பாணங்களை விரித்த தன் சிறகுகளில் ஏற்றுக்கொள்கிறான். இவன்மீது கார்மேக வண்ணன் கண்ணன் வீற்றிருப்பதைப் பார்த்தால், விரித்த தங்கக் கொடை யுச்சியில் இந்திர நீல கும்பம் கவிழ்த்தாற்போலத் தோன்றுகின்றது. (கும்பம்=கொடைக்குமிழ்)

பலராமன்:— (கண்ணுற்று. மனம் பதைத்து) ஐயோ! கருடன் திரும்பி வருகிறானே. எதிரிகளின் பாண வர்ஷத்தால் ஆகாசம் போக முடியாமற் போயிற்றா? (போரார்ப்பு புரிந்து கோபச் சிரிப்புடன்) ஆ! எனது ஆயுதமான உலக்கைக்கு வானேற வல்லமை இல்லையா? (தனது முஸலத்தைத் தட்டிக்கொடுக்கிறார்:)

ஸாத்யகி:—பலராமா! கேளும், கேளும்—ஏதோ சப்தம் காதில் விழுகிறது. (எல்லாரும் செவி சாய்க்கின்றனர்.) (திரைக்குள்:—அப்பா! கருடா! இவ்விருவரையும் குழந்தையையொப்ப கட்டியணைத்

ராஜப்பிரதிநிதியும் ஸ்ரீமதி சியாங்கே ஷேக்கும் சம்பாஷிக்கின்றனர். வைஸ்ராய் மாளிகைத் தோட்டத்தில் எடுத்த படம்.

கஷ்டம் குறைவு ! சுகம் நிறைவு !!



ஆகாரங்களில் உள்ள வைடமின் முதலிய ஜீவ சத்துக்கள் போகாமல் தேக சௌக்கியம் அடையவேண்டுமானால்

ருக்மணி குக்கர்

ஒன்றை இன்றே வாங்கிக். கொள்ளுங்கள். ஒருவித பிரயாசையுமின்றி ஒரே அடுப்பில் சாதமும், 5 வித பதார்த்தங்களும் செய்து முடித்து விடலாம்.

விபர புத்தகம் இனம். —:—:— இன்றே எழுதுக.

1, 2, 4, 6, 8, 12, 16 பேர்களுக்குத் தகுந்த குக்கர்களின் விலை ரூ. 11, 15, 20, 27, 33, 40, 46.

ருக்மணி குக்கர் கம்பெனி, ராயபுரம் (12) சென்னை.

ஏஜண்டுகள்:

கல்கத்தா:—தி சௌத் இந்தியன் கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ், P. 255, ராஷ்பிஹாரி அவென்யூ, காளி கட்டம்.
மடடுங்கா (பம்பாய்):—தி சௌத் இந்தியன் கன்ஸர்ன்ஸ் லிமிடெட், டிலாங் ரோட், மட்டுங்கா.
மதுரை:-மதுரை கோவாபரேடிவ ஸ்டோர்ஸ், நாய்க்கர் புதுத்தெரு.
திருநெல்வேலி டவுன்:—P. K. சாமி கம்பெனி, தெற்கு ரதவீதி.
தூத்துக்குடி:—V. S. S. காளியப்ப நாடார்.

41 வருடம் அனுபவம் உள்ளது; ஞாபகம் இருக்கட்டும்.
சூதக வயிற்றுவலி இருக்கும்வரை கெற்பம் தரிக்காது.
ஷை வயிற்று வலியை எடுத்து 6 வித மலட்டையும் நீக்கி புத்திரசந்தானம் உண்டாகவேண்டுமானால் R.M.K. கெற்ப சஞ்சீவி எண்ணெயை சாப்பிடுங்கள்.

ஸ்திரீகளுக்கு மாதாந்திரத்தில் வரும் பொறுக்கமுடியாத வயிற்று வலியை அந்தக்ஷணமே நிறுத்தும். எந்த மருந்திலும் தீராத எவ்வளவு நாட்பட்ட சூதக வயிற்று வலியும் இதில் அவசியம் தீரும். சூதகம் கண்டும் காணாமலும், துப்பரவாகாமலும் டயப்படி ஆகாமலுமுள்ள சூதகபந்தீமானாலுஞ்சரி, இதில் சுகமாகிவிடும். காலா காலத்தில் கிரமப்படி பஹிஷ்டை ஆகும். இன்னும் கெற்பநோய் சம்மந்தமான சகல வியாதிகளும் தீர்ந்து கெற்பம் தரித்துவிடும்! குணம் இல்லையேல் பணம் வாபீஸ்.

1 புட்டி ரு. 2. சேலவு வேறு. ஒரு நபருக்கு 3 புட்டி வேண்டும். ஒரே தடவையில் 3 புட்டி ரு. 5.

வைத்திய ஆசிரியர் ஆர். எம். கே. வேலுசாமி, சித்த வைத்திய சாலை, பழனி. PALNI. (S. I. R.)

பிராஞ்சுகள் :— 16, திருவல்லிக்கேணி ஹைரோடு, மதராஸ், ,, :— 68, செட்டியார் தெரு, கொழும்பு.

RINGWORM OINTMENT AMRUTANJAN Ltd. BOMBAY, MADRAS, CALCUTTA

குறைந்தவற்றை உபயோகித்து சர்மத்தைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள்.
புண், படை, சிறங்கு, கொப்பளம் முதலிய சர்ம வியாதிகளுக்கு
சூர்யோதயம்
படை மருந்தை உங்கள் படைமீது தடவினால் சர்மத்தில் எவ்வித மச்சமும் ஏற்படாமல் சீக்கிரத்தில் குணமளிக்கும்.
அமிர்தாஞ்சனம் லிமிடெட், பம்பாய், சென்னை.

ரூ. 60,000 பெருமானமுள்ள ஆபரணங்கள் வழங்கப்பட்டன

உலகின் எட்டாவது அதிசயம். அமெரிக்கன் நியூ கோல்டு எங்கள் சிருஷ்டி. அது இந்தியா பூராவும் பிரபல்யம் அடைந்துவிட்டது. அதற்கு அறிமுகமே தேவையில்லை. பத்திரிகைகளும், பொது மக்களும் அதை எங்கும் புகழ்கிறார்கள். அதன் கெமிகல் நிறம் எப்பொழுதும் தங்க நிறமாகவே இருக்கிறது. இந்தத் தங்கத்தைக்கொண்டு நீங்கள் சிறந்த ஆபரணங்களை செய்து கொள்ளலாம்.

இந்த அமெரிக்கன் நியூ கோல்டை பிரபலப்படுத்தும் நோக்கத்துடன் ஒரு சாம்பிள் செட் விநியோகம் செய்ய நாங்கள் நிச்சயித்துள்ளோம்.

இந்த செட்டில் உண்மையான அமெரிக்கன் நியூகோல்டு 6 தோலாவும். ஒரு ஜதை புது மோஸ்தர் வளையல்களும் ஒரு ஜதை மூக்குத்திகளும் 2 பம்பாய் மோஸ்தர் மோதிரங்களும், ஒரு ஜதை தோடுகளும் இருக்கும்.

AMERICAN NEW GOLD WORKS, P.O.Box.54,(S.M.M.)Amritsar.
(B. P. S.)

வீதிகளிலும் நம்பிக்கையற்ற கடைகளிலும் வாங்காதீர்கள்.

நஞ்சன்கூட பல்பொடி

பல வியாதிகளைத்தடுக்கவும் குணப்படுத்தவும்

ஊக்கம், உற்சாகம் ஊட்ட — ஜீர்சப் — அஜீர்ண, பித்த சமனி
உஷ்ண சமனி — கூலாயில் — ஸ்நான தைலம்

கவனிக்கவும் போலிகளால் பற்களுக்கே அபாயம்

சோல் ஏஜண்ட்ஸ்: யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, மதருஸ் (உதவி வைத்தியர் Dr. P. S. C. மணி) (தபால் மூலம் சிகிச்சை பெறுக)

துத் தூக்கி எடுத்துக் கொள். விடாதே. வருத்தாதே: இவர்களுடைய உடலுக்கு உடைவு வராதவாறு எடுத்துப்போய் இவர்களுடைய படை வீரர்களின் மத்தியில் இவர்களை இறக்கி விட்டு நீ போகலாம்.)

பலராமன்:—இஃது என்ன? கண்ணன் இந்தக் கயவர்களை விட்டு விட்டானே!

அக்ரூரன்:—பலராமா! இது போர் வெறியைவிடப் பெரிய வெற்றியன்றோ?

ஸாத்யகி:—கேட்போம்! மேலும் வார்த்தை கேட்கிறது.

(திரைக்குள்:—அடே ருக்மீ! நீ ருக்மிணியின் தமையன். அடே சிசுபாலா! நீ என் பந்து. நீங்களிருவரும் நெறி தப்பியும் ஒழுக்கமில்லாமலும் நடந்தாலும், நான் உங்களைப்பாராட்ட வேண்டியவளுயிருக்கின்றேன்.)

ஸுபுத்தி:—(கேட்டு, ஸந்தோஷமாக) வத்ஸே! ருக்மிணீ! உனக்கு இப்பொழுது இருவகையில் பாக்கியம் நேர்ந்திருக்கிறது. உன் மனத்துக்கு இனிய கண்ணனை அடைந்தாய். உனது தமையன் ருக்மியைக் கண்ணன் கனிவு கொண்டு தனது கோபத்தீயில் எரிக்காமல் விட்டு விட்டார்.

(ருக்மிணி இவ்வார்த்தையைக் கேட்டு மகிழ்ந்து நிற்கின்ருள்.)

பலராமன்:—(முன்புறம் பார்த்து, ஸந்தோஷமாக) ஓ! கிருஷ்ணன், எதிரிகளை எடுத்துப் போகும்படி கருடனை அனுப்பி விட்டுக் கால்நடையாகவே திரும்பி வருகிருன். எனது கண்ணன், தேவர் கூட்டங்கள் சொரியும் புஷ்ப விருஷ்டியுடன் கூடவரும் வண்டுகள் ஸ்துதிபாட, ஜயலக்ஷ்மியைக் கைப்பற்றி மேன்மையுடன் வருகின்ருன். என்னே! இவனது வீரம்! என்னே! இவனது கருணை! இரு சத்துருக்களையும் சிதைக்காமல் உயிருடன் விட்டுவிட்டான்.

நான்காம் காக்ஷி.

கிருஷ்ணன் வருகிருர்

கிருஷ்ணன்:—(சிரித்துக் கொண்டு. வேடிக்கையாக) அண்ணு! யுத்தத்தில் எதிரிகளின் தாக்குதலைத் தாங்க மாட்டாமல், அவர்களுடன் ஸந்திசெய்துகொண்டு, அவர்களை நான் அனுப்பிவிட்டேன்!

பலராமன்:—(சிரித்துக் கொண்டு, தமாஷாக) ஆமாம்! வலுவுள்ள எதிரியுடன் இப்படிச் சந்தி செய்து கொள்வது தான் ஏற்றது! நமது எண்ணங்கள் ஈடேறிவிட்டன. இனி துவாரகைக்குப் போ. ரதத்தில் ஏறிக்கொள்.

(கிருஷ்ணன் ரதத்தில் ஏறிக் கொள்ளுகிருன்.)

தாருகன்:—(நமஸ்கரித்து) பிரபு மேன்மை பெறுக.

ஸுபுத்தி:—அப்பா! வீரா! கிருஷ்ணு! நீ செய்து முடித்த காரியம், எவருடைய ஆசீர்வாதத்துக்கும் எட்டாத விஷயம்! ஆகவே! உன்னைப்போற்றி வணங்குவது தான் இங்கு இணங்கும்.

கிருஷ்ணன்:—பகவதி! உமது அநுக்கிரஹம் தான் இப்படி மேன்மேலும் ஒளிர்ந்து வளருகின்றது.

ஸுவத்ஸலை:—பிரபுவே! மேன்மைபெற்று விளங்குக.

(ருக்மிணி லஜ்ஜையால் முகம் வணங்கி நிற்கின்ருள்.)

கிருஷ்ணன்:—(ஆசையுடனும் அங்கலாய்ப்புடனும்) மதிமுகி! ருக்மிணீ! இன்னமும் ஏன் நீ மனத்தாங்கலுடன் ஏங்கி நிற்கின்ருய்? எனக்கு யுத்தத்தில் வீர ரஸ நுகர்ச்சி பெரிதும் இருந்தும், உனது நிலைமையைக் கண்டே நான் இரக்கம் கொண்டு சத்துரு வேந்தர்களை உயிருடன் விட்டு விட்டேனே!

(ருக்மிணி களிப்பும் போராவலும் கொண்டு, வெட்கத்தால் தலை குனிந்து நிற்கின்ருள்.)

ஸுபுத்தி:—(வியப்புடன்) கிருஷ்ணதேவா! பார் பார்—வானத்தில். அத்புத ஜோதியொன்று துலங்குகிறதே! இது கதிரவனன்று. குரூரங்களல்லவா ஸௌரியனுடைய ஒளிகள். இது மின்னலும் அன்று. மின்னலொளி அதிக நேரம் நிற்காதன்றே. இந்த ஜோதியோ சாந்தமாயும் நிலை பெற்றதாயுமிருக்கின்றதே!

கிருஷ்ணன்:—(பார்த்து வியந்து, ஊஹத்துடன்) இது ஏதாவதொரு மாயையாயிருக்கலாமென்று எனக்குத் தோன்றுகிறது.

(திரைக்குள்:— வத்ஸே! ஸுபுத்தி! நான் "சிக்ரை" என்ற தேவி. உனது சிஷ்யையான ருக்மிணி, நீ உபதேசித்த மந்திரத்தை ஜபித்து என்னை வணங்கி வழிபட்டுவந்தமையால் நான் வெகு சீக்கிரத்திலேயே அவளுடைய ஆராதனைக்குப் பலம் நல்கினேன். கிருஷ்ணு! நீரும் எனது நாதன் நீலகண்டனுக்கு அன்புக்குரிய நண்பர். இன்னமும் நான் உமக்குச் செய்ய வேண்டிய ப்ரியமான காரியம் என்ன?)

(எல்லோரும் ஆச்சரியத்துடன் நமஸ்கரிக்கின்ருர்கள்)

கிருஷ்ணன்:— கோடிக்கணக்காகப் புண்ணிய கருமங்களைப் புரிந்து தேவியின் அநுக்கிரஹத்தைப் பெற வேண்டும். இதனைப் பெற்றுவிட்டேன். இதற்கு மேலும் வேண்டப்படும் பொருள் வேறென்றுண்டோ? ஆயினும் இது நிகழுக (பரத வாக்கியம்: மேகங்கள், நம்மிஷ்டம் பூர்த்தி பெறுமாறு மழை பொழிவனவாக. கவீந்திரர்கள். அமுதத்தினுமினிய ஸூக்திகளை வர்ஷிப்பாராக. அந்தணர்கள் அக்கினியில் முறைப்படி ஹவிஸ்ஸினைச் சொரிவாராக. மன்னவர்கள் இரப்போர்களுக்கு எண்ணிறந்த பொருள்களைப் பெய்வாராக.

(எல்லோரும் சென்றனர்.)

காந்தி ஜோஸியர்

ஒரு வருஷப் பலன் மாதவாரி ரூ. 3.
ஆருடம் 5 கேள்விகளுக்குப் பதில் ரூ. 1
வி. பி. செலவு அணு 5.
ஜனனகால விவரம் or எழுதும் நேரம், சுமார் வயது தேவை.
ஹனுமான் ஆச்ரமம், திருத்தணி S.I.

FREE! FREE! FREE!



லைசென்ஸ் தேவையில்லை
ஆடோமாடிக ரிபீடர்

திருடர்களையும், விலங்குகளையும் பயமுறுத்த ஆடோமாட்டிக் ரிபீடர். எவ்வித தொந்திரவுமின்றி 6 முறை சுடலாம். உண்மை ரிவால்வரைப்போல் சப்தம் கேட்கும். சுடும்பொழுது நெருப்புத் தெரியும். தீங்கான விலங்குகள், பறவைகளை விரட்ட உபயோகமானது. அவசரத்துக்கு ஒவ்வொரு வீட்டிலும் இருக்கவேண்டும். லைஸென்ஸ் தேவையில்லை. நெ. 7777 விலை ரூ. 4/8/- 35 ரவைகள் இலவசம். நெ. 8888. ரூ. 5/13/- 45 ரவை இலவசம். நெ. 9999. ரூ. 6/12/- 550 ரவை இலவசம். அதிகப்படி 1000 ரவை ரூ. 3/- பெல்டுடன் கேஸ் ரூ. 5/12/- ஆயில் ரூ. 1/12/- தபால் சார்ஜ் பிரத்யேகம்.

இலவசம்:—ஒரு தோலா லண்டன் நியூ கோல்ட் ஒரு அழகிய மியூட் கைக் கடியாரம், ஒவ்வொரு துப்பாக்கியுடன் இலவசமாகக் கொடுக்கப்படும். சேர்ந்தாற்போல் இரண்டு வாங்கினல் 3 அழகிய மியூட் கடியாரங்கள், 3 தோலா லண்டன் நியூ கோல்ட், தபால் சார்ஜ்.

LONDON COMMERCIAL COMPANY.
(EAB) Post Box No. 165, (S.M.M) LAHORE (India)

அபார சக்தி வாய்ந்த டானிக்!
Dr. N. V. ஸ்ரீராமாச்சார்லுவின்
S.K.M.
ஸித்தகல்ப
மகரத்வஜம்
60 மாத்திரை ரூ. 10.
30 மாத்திரை ரூ. 5.
விவரத்திற்கு எழுதவும்:
மதராஸ் ஆயுர்வேதிக் பார்மஸி லிமிடெட்.,
த, பெ. நெ. 151. (ஸ்தாபனம் 1915ஸு) 289, எஸ்பிளநேட், மதராஸ்

த்யாகராஜ கீர்த்தனம்

[காபிரைட்]

(ஸங்கீத வித்வான் துறையூர் எம். ராஜகோபால சர்மா)

I

பல்லவி

ஈமேனு கல்கினந்துகு ஸீதா ராம
நாமமே பல்கவலெனு

அனுபல்லவி

காமாதி துர்குணஸ்தோம பூரிதமைன
பாமரத்வ மேகானி நேமமு லேனட்டி

சரணம்

1. ஸம்ஸாரமுன ப்ரோவ தாரினி பர-
ஹிம்ஸ ஜெந்து கிராதுடு
ஹம்ஸ ரூபுல கதினடுக ராம நாம ப்ர-
சம்ஸ ஜேஸி யுபதேசிம்ச தன்யுடு காதா

2. தாபஸி சாபமிடகா ஜலோரக-
ரூபமு கொனி யுண்டகா
தாபமு ஸைரிஞ்சக தல்லடில்லக சர-
சாப தருனி நாம ச்ரவணமு ப்ரோவலேதா

3. கரி ராஜு தெலியலேக பலுடைன ம-
கரி சேத காஸி ஜெந்தகா
அரலேக நிஜமுன ஆதிமூல மனக
வரதுடு வேகமே வச்சி ப்ரோவகலேதா

4. ஆகம வேதமுலனு தானவுடு கொம்போ-
வகா சதுரானனுடு
த்யாக ராஜநுத! தாரக நாம! யனி
பாகுக நுதிம்ப பயமு தீர்ப்பக லேதா

II

ஸீதாராம! —ஸீதாதேவியுடன் விளங்கும் ஸ்ரீராமா!
ஈமேனு கல்கினந்துகு —இம்மானிட சரீரம் கிடைத்ததற்கு
நாமமே பல்கவலெனு —உன் நாமஸ்மரணம் செய்து ஜன்மத்தைப் புனிதமாக்கிக் கொள்ள வேண்டும்,
காமாதி துர்குணஸ்தோம —காம க்ரோதம் முதலான தீய குணங்களால்
பூரித மைன —நிரம்பப் பெற்ற
பாமரத்வமே கானி —ஒன்று மறியாத தன்மை கொண்டதே யல்லாது
நேமமு லேனட்டி —ஒருவித ஒழுங்கும் இல்லாத
ஈமேனு கல்கினந்துகு —இந்த மானிட சரீரம் கிடைத்ததற்கு
ஸீதாராம நாமமே பல்கவலெனு —ஸீதாராமனின் நாமஸ்மரணம் செய்ய வேண்டும்
ஸம்ஸாரமுன —தன் குடும்பத்தை
ப்ரோவ —ஸம்ரக்ஷிப்பதின் பொருட்டு
தாரினி —காட்டின் வழியில்
பர ஹிம்ஸ ஜெந்து —பிறரை ஹிம்ஸை செய்து வந்த
கிராதுடு —வேடன்
ஹம்ஸரூபுலன் —ஜீவன் முக்தர்களான மஹான்களை வணங்கி
கதின் அடுக —தான் கடைத்தேறும் வழியைக் கேட்க
ராம நாம ப்ரசம்ஸ ஜேஸி —அவர்கள் தாரக மந்திரமான ராம நாமத்தின் விசேஷத்தை எடுத்துரைத்து
உபதேசிம்ச —அவனுக்கு அதை உபதேசம் செய்ய
தன்யுடு காதா —அவ்வேடன் புனிதனுக வில்லையா
தாபஸி சாபமிடகா —தவசிரேஷ்டரான முனிவர் சாபமிட
ஜலரோக ரூபமு கொனியுண்டக —அதனல் நீரில் வஸிக்கும் முதலை ரூபம் கொண்டிருந்த ஓர் கந்தர்வன்
தாபமு ஸைரிஞ்சக —கஷ்டம் பொறுக்க மாட்டாது
தல்லடில்லக —தத்தளித்துக் கொண்டிருக்க
சரசாப தருனி —வில் அம்பு கொண்ட ராமனுன ஸ்ரீமந் நாராயணனின்
நாமச்ரவணமு —நாமாவளி அம்முதலையின் செவிகளில் கேட்கப் பட்டு
ப்ரோவலேதா —அப்பகவந் நாமாம்ருதம் முதலையின் கஷ்டங்களைத் தீர்த்து சாபத்தைத் தீர்த்து வைக்க வில்லையா
கரிராஜு —கஜேந்திரன்
தெலியலேக —அறியாமல்
பலுடைன —மிகுந்த பலம் கொண்ட
மகரி சேத —முதலையினிடம்

தாய்மார்களே!
பயஸ்யா
குழந்தைகளுக்கு தாய்ப்பால் தவிர மற்ற எந்த உணவும் ஏற்றதல்ல.
உங்கள் பாலை விருத்தி செய்து கொண்டு குழந்தைகளை நீங்களே ஆரோக்கியமாய் வளருங்கள்.
தாய்ப்பாலினுல் வளர்ப்பது ஆரோக்கியம் மட்டுமல்ல. மிகச் சிக்கனம்கூட.
பயஸ்யா (Regd)
தாய்ப்பாலை மிகுதியாய் உண்டு பண்ணும் உத்தம ரஸாயனம்.
விலை ரூ. 2—8—0
(Packing & Postage Extra.)
எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.
அல்லது நேரில்:—
ஆத்ரேய ஆயுர்வேதிக் ஒர்க்ஸ்,
தென்னூர்ரோடு, திருச்சினுப்பள்ளி.
Prop. V. B. Nataraja Sastri,
Ayurvedacharya.
(தாய்மாருக்கு உபயோகமுள்ள பயஸ்யா புஸ்தகம் இனும்.)

நினைவிருக்கட்டும்

தேகாரோக்கியம் கெடாமலிருப்பதற்கு எப்படி கலப்பற்ற சுத்தமான உணவு உட்கொள்ளுகிருேமோ அதுபோலவே, கண்களுக்கும், மூளைக்கும் கெடுதல் நேரிடாது. ஞாபக சக்தியும் சுறு சுறுப்பும் அடைவதற்கு கலப்பற்ற பொடியே அவசியமென்பதை பொடி உபயோகிக்கும் சகோதரர்கள் அறிதல் வேண்டும். இவ்வித கலப்பற்ற பொடிக்கு மதராஸ் ஸ்ரீ அம்பாள் அண்டு கம்பெனி, யார் 35 ஆண்டுகளாக புகழ் பெற்றவர்களென்பது யாவரும் அறிந்ததே. பொடி வாங்கும் போது ஸ்ரீ அம்பாள் பட்டணம் பொடியையே கவனித்து வாங்க நினைவிருக்கும்படி கேட்டுக் கொள்ளுகிருேம்.

காஸி ஜெந்தக	—அகப்பட்டுக் கொண்டு கஷ்டம் அடைய.
அரலேக	—ச்ரமம் தாங்காது
நிஜமுன	—உண்மையாக பகவானை நம்பி
ஆதிமூல மனக	—ஆதிமூலமே என்று கூவி முறையிட
வரதுடு	—வரதனை ஸ்ரீமந் நாராயணன்
வேகமே வச்சி	—அதிவேகமாக வந்து
ப்ரோவக லேதா	—அந்த கஜேந்திரனை ரக்ஷித்தருளவில்லையா
ஆகம வேதமுலனு	—வேதாகமங்கள் எல்லாவற்றையும்
தானவுடு கொம்போவகா	—மது, கைடபன் என்ற அஸுரர்கள் கொண்டு ஓடியதும்
சதுரானனுடு	—ப்ரஹ்மதேவன்
த்யாக ராஜநுத!	—த்யாகராஜனுல் துதிக்கப்பட்ட ஸ்ரீராமா!
தாரக நாம!	—தாதகப்ரஹ்மஸ்வரூபியே!
யனி பாகுக நுதிம்ப	—என்று பகவானை நன்கு துதித்து வேண்ட
பயமு தீர்ப்பகலேதா	—பகவான் மத்ஸ்யாவதாரமெடுத்து, அவ்வஸுரர்களை ஸம்ஹரித்து வேதங்களை மீட்டு வந்து ப்ரஹ்மனின் பயத்தைப் போக்கடிக்க வில்லையா (ஆகையால்)
ஈமேனு கல்கினந்துகு	—இம்மானிட சரீரம் கிடைத்ததற்கு
ஸீதாராம நாமமே பல்கவனு	—ஸீதா ராமனின் நாம ஸங்கீர்த்தனம் செய்ய வேண்டும்

III

இது திவ்ய நாம ஸங்கீர்த்தனப் பகுதியைச் சேர்ந்த கீர்த்தனங்களிலொன்ருகும். இந்தக் கீர்த்தனத்தால் ஸ்வாமிகள் மானிட ஜன்மமடைந்த அனைவரும் ஸ்ரீ ராம நாம பஜனம் செய்யவேண்டிய கடமையை சில பக்தர்களின் சரித்திரங்களை உதாரணங்களாக சுட்டிக்காட்டி உபதேசிக்கிருர்.

ஈமேனு:—'அரிது அரிது மானிடராதலரிது
மானிடராயினும் கூன் குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்தல் அரிது'

என்ற பாடலில் குறிப்பிட்டுள்ளபடி கிடைத்தற்கரிய மானிட ஜன்மத்தை அடைந்த ஜீவகோடிகள் கடவுளை வழிபடுவதற்கு தங்கள் சரீரத்தை. உபகரணமாகக்கொள்ள வேண்டும் என்கிற தத்வத்தை உபதேசிக்கிருர். அவ்விதம் செய்யாதவர்களின் ஜன்மம் பயனற்றது என்று,

மானுஷ்யம் துர்லபம் ப்ராப்ய யோஹரிம் நார்சயேத் ஸக்ருத் |
மூர்க்க: பாபதர: பார்த்த கோன்யஸ் தஸ்மாதசேதன:||

மேலே கண்ட ச்லோகத்தால் அறியலாகும்,

காமாதி:—மானிடப்பிறவியின் தன்மையை "மேனு ஜூசி" "எந்துகோ பாக," முதலான கீர்த்தனங்களில் விவரித்துள்ளார். அநித்யமான இப்பிறவியை பகவந் நாமஸங்கீர்த்தனம் செய்து புனிதமாக்கிக் கொள்ளுமாறு உபதேசிக்கிருர்.

ஸம்ஸாரமுன:—இந்தச் சரணத்தால் ஸ்வாமிகள் வால்மீகி மஹரிஷியின் சரித்திரத்தைத் தெரிவிக்கிருர், இவர் பூர்வம் பிரஹ்ம குலத்தில் பிறந்து துஷ்ட ஸஹவாஸத்தால் தன் ஜாதி தர்மத்தை மறந்து மஹா பாபங்களைச் செய்துவந்து, பிறகு ஒரு சமயம் மஹான்களின் அனுக்ரஹத்தால் ராமநாம ஜபம் செய்து புனிதராகி மஹரிஷியானுர்.

தாபஸி சாபமிடக:—'கூஹூ' என்று பெயர்பூண்ட ஓர் கந்தர்வன் புண்ணிய நதி ஒன்றில் நீராடிக் கொண்டிருந்த தவமுனிவரின் கால்களைப்பற்றி இழுத்துவிளையாட, அம்முனிவர் கோபம் கொண்டு முதலைபோன்று தன்னை பயப்படுத்திய குற்றத்திற்கு அவனை முதலையாக மாறும்படி சபித்தார். அம் முதலை கஜேந்திரனைப் பிடித்துக்கொண்டபோது. பகவன் நாமத்தை கேட்கும் பாக்யத்தையடைந்து சாபவிமோசன மடைந்தது. இவ்வரலாற்றையே இங்கு குறிப்பிடுகிருர்,

கரி ராஜு:—இந்தச் சரணத்தால் ஸ்வாமிகள் 'கஜேந்திர மோக்ஷ' கதையைக் குறிப்பிடுகிருர். இந்த ஸந்தர்ப்பம் ஸ்ரீமத் பாகவதம் அஷ்டமஸ் கந்தத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

ஆகம வேதமுனு:—பகவானுடைய முதல் அவதாரமான 'மத்ஸ்யாவதார' உபாக்யானத்தை இங்கு நிரூபிக்கிருர்.

IV

ராகம் வராளி — ஆதி தாளம்

(39-வது மேளஜன்யம். ஆ. ஸகரிகமபதநிஸ். அவ. ஸம்பூர்ணம்.)

பல்லவி

ஸ்ா நித நிதபம	கா; ரீ ஸநி	ஸா ஸா	; கரி	கா மா	பா தநி
ஈ . . மே . . . னு .	கல் கி னந் .	து கு	லி .	தா .	ரா ம .
ஸ்நித நிதப தபம	காரி ஸாநீ	ஸா ;	; ;	; ;	; ;
நா . . ம . . மே . .	பல்க வ லெ	னு			

அனுபல்லவி

மகா மா, பா	தபதம பாதநி	ஸ்ா ;	ஸ்ா ஸ்ரி	க்க்ரீ	ஸ்ா ஸ்ா
கா . மா தி	துர் . . . குண .	ஸ்தோ	ம பூ .	ரி . த .	மை ன
நிஸ்ரீ ஸ்நிஸ்ா	நிதநீ தபதம	கக பம	பத பம	ககரிக	மபதநி
பா . . ம . ரத்	வ . யே கா . னி .	நே . . .	ம . மு .	லே . . நட்	. டி .

சரணம்

பா மா பதபம	காரி ரிஸஸா	ஸநி கா	ரீ கா	பம பா	நிதபா
ஸம் . ஸா	ர . மு . ன	ப்ரோ . .	வ தா	ரி . னி	ப . ர
பம பத பத பம	காரீ ஸநிஸா	காரீ	கா மா	பம பத	பா ;
ஹிம் . . ஸ் ; ஜெங்	. . து கி . .	ரா .	. து	டு . . .	.
ம்ா கா மா பா	தபதம பாதநி	ஸ்ா ஸ்ா	ஸ்ா ஸ்ரி	க்க் ரீ	ஸ்ா ஸ்ா
ஹம் . ஸ ரு	பு . ல . கீ .	ன டு	க ரா .	ம் . நா .	மப்ர
நிஸ்ரீ ஸ்நிஸ்ா	நிதநீ தபதம	கக பம	பத பம	ககரி	கம பதநி
சம் . ஸ ஜே . லி	யு . ப தே . . .	சிஞ் . ச .	தன் . யு . .	டு . .	கா . தா . .

22 கரட், டி. சி. என்.
ரோல்ட்கோல்ட் வளையல்கள்
அசல் தங்க் வளையல்களைப்போல்

எப்பொழுதும் நிறம் மாருமல் இருக்கும். 5 வருஷம் உத்திரவாதமுள்ளது. சிறு குழந்தைகள் முதல் பெரியவர்கள் சையிஸ் வரையில் ஒரே விலைதான். வளையல் ஜதை 1-க்கு ரூ. 6. வி. பி. செலவு: 1 ஜதை முதல் 6 ஜதைகள் வரை அணு 8. விலாசம்:-
டி. சி. நாகலிங்கப்பா & Co
பார்க் டவுன் போஸ்ட், மதராஸ்.

1 மணியில் வாலிபம்!
ரமணவிலாசினி வடிகா
காம சக்தியை விருத்தி செய்து, துரித ஸ்கலிதத்தை நிறுத்தி, எல்லோருக்கும் சிற்றின்பத்தில் திருப்தியைத்தரும் பரம ஔஷதம். டப்பி ரூ. 1.
மதன மஞ்சரி பார்மஸி,
184, சைளுபஜார் ரோட், மதராஸ்

உண்மை உறுதிக்கும் உத்திர வாதம்.
—:—
"ஷண்முகம் பிராண்டு"
ஸ்டீல் டிரங்கு & சூட்கேஸ்கள்
தேவைக்கு வேண்டிய புது மாதிரி தினுசுகளில் கிடைக்கும்.
ஷண்முகம்பிராண்டு ஸ்டீல்டிரங்குஒர்க்ஸ்
தயாரிப்பவர்:- சி. ஞானசுந்திர நாயகர்,
P. 3094. 341, எஸ்பிளநேட், மதராஸ்

பிரபல ஜோதிஷர்
மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு ஜாதகம

கணிக்க ரூ.2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ.5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ.5. ஆருடம்3கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஜாதகம் அல்லது எழுத நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், 58, லஸ் சர்ச் ரோடு, மைலாப்பூர், மதராஸ.

கவலைவேண்டாம்
உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்ல மருந்து வேண்டுமானுல், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினுல் நிவர்த்திக்க தக்க வழிகளைத் தெரிவிப்போம்.
மலையப்பசாமி
வைத்தியசாலை,
பழனி. S. I.

சிறுவர் பகுதி

★

மாசற்ற மல்லன்

★

ஸ்ரீமதி ரத்னுபாய்

மல்லாபுரம் என்கிற ஊரில் மார்தாண்டன் என்னும் ஒரு அசுரன் இருந்தான். அவன் மகா வலிமை பெற்றவன். அவன் ஒருவராலும் ஜயிக்க முடியாத புஜபலத்தை யுடையவன். அவனுடைய கண்கள் எப்போதும் கோவைப் பழம்போல் சிவந்து உருண்டை வடிவத்துடன் காணப்படுவதுடன், அதைச்சுற்றிலும் வளர்ந்திருந்த மயிர்கள் பார்ப்பவர் உள்ளம் கிலி பிடித்து விடும்படியான ஸ்வரூபம் படைத்தவன். அவன் வாயில் இரு கோரைப் பற்கள் யானைக்கு இருப்பது போன்று இருந்தன.

அவனுக்கு அவ்வூரில் உள்ளோர் நாள் ஒன்றுக்கு ஒரு ஆடும், அதற்கு வேண்டிய சாப்பாடும் தயார் செய்து, ஒரு நாளைக்கு ஒரு குடும்பம், மற்ருெரு நாளைக்கு இன்னொரு குடும்பம் இப்படியாக முறை போட்டு கொடுப்பது வழக்கம். அப்படி கொடுக்காவிடில் அவ்வூரிலுள்ள ஆடு, மாடுகளை வதைப்பதுடன், அங்கு குடியானவர்களையும் கொன்று விடுவான். ஆகவே, மேற் கூறியவாறு அவனை அவ்வூரிலுள்ளோர் திருப்தி செய்து வந்தனர்.

அவ்வூரில் ஒரு ஏழைக் கிழவி இருந்தாள். அவளுக்குப் பிறந்த ஒரே மகன் சிறிது காலம் இருந்து இறந்து விட்டான். அவனைப் பிரிந்த துக்கத்தில் அக் கிழவி, எப்பொழுதும், அழுத கண்ணும் சிந்திய மூக்குமாகக்காணப்பட்டாள். அவளுக்கு ஒரு நாள் அவ்வசுரனுக்கு படைக்கும் முறை வந்துவிட்டது. தட்டுத் தடுமாறி சமையல் வகைகளை தயார் செய்து, ஒரு ஆட்டை விலைக்கு வாங்கி, அதை எடுத்துக் கொண்டு போய் அவ்வசுரனுக்கு படைக்க ஆள் இல்லையே என்று தவித்துக் கொண்டிருந்தாள்.

அச் சமயத்தில், கம்பீரமான மனிதன் ஒருவன் அவ்வழியே போய்க் கொண்டிருந்தான். அவன் இடுப்பில் மட்டும் ஒரு சிறிய துணி வாலாக கிழித்து முழங்கால் முட்டிக்கு மேலேயே கட்டப்பட்டிருந்தது. அவனுடைய கையில் ஒரு கதை ஒன்று காணப்பட்டது. அவன் முகமும் தேகமும் பார்க்க அவனும் ஒரு அசுரன் எனக் கூறும்படியான தோற்றத்துடன் காணப்பட்டான். ஆனுல் அவனுக்கு மார்த்தாண்டன் தோற்றுவிடும்படியானதேகம் படைத்தவன் என்று யாரும் கூற மாட்டார்கள். மிகவும் மரியாதையுடனும், ஒரு ஏழையைப் போலும் கிழவி இருக்கும் வீதி வழியே போய்க் கொண்டிருந்தான்.

அவனைக் கண்ட அக் கிழவி, "யாரப்பா! நீ, எனக்குச் சிறிது வேலை இருக்கின்றது. அதை தயவு பண்ணி செய்தால் உனக்குப் புண்ய முண்டு" எனக் கூறினுள்.

வழியே போய்க் கொண்டிருந்த அம் மனிதன். கிழவியின் அருகே வந்து, "அம்மா, நான்இருப்பது அஸ்தினுபுரம், சிறிது காரியமாக இங்கு வந்திருக்கின்றேன். உனக்கு வேண்டிய வேலையை நான் செய்யக் காத்திருக்கின்றேன்" என்ருன்.

"உன் பெயர் என்ன?" என்ருள் கிழவி.

"என்னை மடப்பள்ளி மல்லன் என்று அழைப்பார்கள்" என்ருன் அவன்.

"அப்படியாயின் இதோ இருக்கும் இவ்வுணவை, இவ்வூரின் எல்லையருகே உள்ள மார்த்தாண்டன் என்னும் அசுரனுக்கு படைத்து வந்தால் போதும். இதுதான் நான் இடும் வேலை" என்ருள் கிழவி.

அப்படியே செய்வதாக மடப்பள்ளி மல்லன் கிழவியிடம் ஒப்புக்கொண்டு, அக்கிழவியால் தரப்பட்ட இரட்டை மாட்டு வண்டி ஒன்றில் சாப்பாட்டையும், ஒரு ஆடு ஒன்றையும் எடுத்து வைத்துக் கொண்டு, வண்டியை ஓட்டிக் கொண்டு சென்ருன்.

வழியும் சிறிது கடந்தது. மாட்டு வண்டியும் மெதுவாக போய்க் கொண்டிருந்தது. அச்சமயம் மடப்பள்ளி மல்லன் சாப்பாட்டை தானே சாப்பிட்டுக் கொண்டு சென்ருன். மார்த்தாண்டன் என்னும் அசுரனும் இதை கவனித்து விட்டான். அவனிடம் வண்டியும் சென்றது. ஆனுல் மடப்பள்ளி மல்லன் மட்

குளிர், ஜலிப்பை போக்குங்கள்
மார்பில் ஜாம்-பெக் தேயுங்கள்.

மார்பில் ஜாம்-பெக் தடவி ஜளிப்பு, குளிர் இன்புளூயென்ஸா வராமல் பாதுகாருங்கள். இந்த அற்புத மூலிகை மெழுகு இரு வகையில் குணமளிக்கும். அடைப்பு, மார்பு வலியை போக்கும். ஜாம்-பெக்கிலுள்ள ஆயிலை, சுவாசித்தவுடன், மண்டை கனம் குறைந்து சுலபமாக சுவாசிக்க உதவும். எல்லாமருந்து வியாபாரிகளும் ஜாம்-பெக் ரூ. 1 அல்லது 2-4 வீதம் விற்கின்றனர். ஜாம்-பெக் ஸோப் ரூ. 1. ஜாம்பெக் பவுடர் ரூ. 1. ஏஜண்டுகள்:- மெஸர்ஸ் தாதா&கம்பெனி, பி.டி, மதராஸ். எப்பொழுதும் ஜாம்பெக் உபயோகியுங்கள்.

ZAM-BUK
மிருகக் கொழுப்பற்றது

பாத்ருடுவின் "பாலசஞ்சீவினி"
குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டிகளை குணப்படுத்தும்
Dr பிள்ளா பாபய்ய பாத்ருடு & Bros.,
11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர். :: திருச்சி பிராஞ்சு: 81, ஆண்டார் தெரு, தெப்பகுளம்.
போன் 86257.

மூன்று அவசிய குடும்ப ஔஷதங்கள்.
இரண்டும் அணு 10. ஸ்ரீகர கஸ்தூரி கோரோஜனை மாத்திரை இரண்டும் அணு 10.
பாலக்ஸ்—பேதியாக மாத்திரை, —பாட்டில் அணு 4.
யுனைடெட் கன்ஸர்ன், .54, பந்தாதெரு, மதராஸ் (மாடுங்கா)

டும் சாப்பிடுவதை நிறுத்த வில்லை.

வந்து விட்டது கோபம் மார்த்தாண்டனுக்கு. "யாரடா நீ? எனக்காக அனுப்பியதை நீ சாப்பிட்டுக் கொண்டு வருகிறாயே? உண்மையைக் கூறிவிடு இல்லையேல் உன்னை இங்கேயே கொன்று போடுவேன்" என்று கண்களில் நெருப்புப் பொறி பறக்க முகம் சிவக்கக் கேட்டான் மார்த்தாண்டன்.

மடப்பள்ளிமல்லன் அப்பொழுதும், சாப்பிட்டுக் கொண்டே, "என் பசி நீங்கிய பிறகு உனக்கு இடுவேனே அன்றி இப்பொழுது இட முடியாது" என்றான்.

உடனே மார்த்தாண்டன், "என்னைக் கண்டால் யாவரும் நடுங்குவார்கள். அப்படி இருக்க இவ்வளவு கர்வம் பிடித்த உன்னை சும்மா விடக்கூடாது" என்று மடப்பள்ளி மல்லன் முதுகில் ஓங்கி ஒரு அறை கொடுத்தான்.

மடப்பள்ளிமல்லன் அவ்வறையை லக்ஷியம் செய்யாது, வண்டியை விட்டிறங்கி தன் கையில் உள்ள கதையை எடுத்து சுழற்றி ஓங்கி ஒரு அடி கொடுத்தான் மார்த்தாண்டன் பேரில். இதைக் கண்ட குடியானவர்கள் அனைவரும் காதுகள் செவிடுபடும்படியான ஓசையையும், இவர்கள் இருவரையும் பார்த்து, அருகில் செல்லாது தம் தம் வீட்டின் புறமாகவே இருந்து கவனித்து வந்தனர்.

கதையால் அடிபட்ட மார்த்தாண்டன், தன்னை இதுவரை யாரும் அப்படி அடித்ததேயில்லை என்று ஓங்கி, எதிரிக்கு இடம்விடாமல் மேலும் சண்டை செய்யத் தொடங்கினான்.

இருவருக்கும் பலமான யுத்தம். ஒருவரை ஒருவர் ஜயித்ததாகக் காணோம். நாட்களும் நான்கு ஆகிவிட்டன. மடப்பள்ளி மல்லன், நான்காம் நாள் மார்த்தாண்டன் கால்கள் இரண்டையும் பிடித்து கிழித்து எறிந்தான். ஆனால் உடனே அவ்வசுரன் உயிர்பெற்று எழுந்து கொண்டான். இப்படி அநேகம் தடவை அவன் செய்தும் பயனில்லாது போயிற்று. கடைசியில் அவன் கடவுளை வழிபட்டு, தனக்கு வெற்றி கோரி பிரார்த்தித்தான்.

"மாசற்ற மல்லனே மகிழ்ந்தேன்" என்று கூறிக் கொண்டே தர்ப்பை ஒன்று நேராக கிழித்து தலை வால் பக்கமும், வால் தலை பக்கமுமாக, மடப்பள்ளி மல்லன் முன் விழ்ந்தது. அப்பொழுது தான் அதன் உண்மையைக் கண்டான் மாசற்ற மல்லன். உடனே மார்த்தாண்டனை இரண்டாகக் கிழித்து தலை கீழாக கப்புரட்டி வீழ்த்தினான். உடனே இறந்தான் மார்த்தாண்டன்.

"மாசற்ற மல்லனே, உன் திரம் கண்டு நான் உள்ளம் பூரித்தேன். நீ அவ்வசியம் துரியோதனனைக் கொல்வாய்" என்று கிருஷ்ணபகவான் அவன் முன் பிரதி பிம்பமாகக் கூறி மறைந்தார்.

ரூ. 5,000 வெகுமதி

24 மணி நேரத்தில் யெளவனமாகலாம்.

சோர்வு, களைப்பு முதலியவற்றால் அவதிப்பட்டு, நவீன வாழ்க்கையின் இன்பங்களை அனுபவிக்க முடியாமல் அவதிப்பட்டாலும், அகால வயது, வீர்யக்குறைவு, குறைவான ஜீவசக்தி, மந்தம், ரத்தமின்மை, பித்தம், ரத்தக் கொதிப்பு மனச்சோர்வு, பசியின்மை ஞாபக மறதி, தூக்கமின்மை முதலிய சங்கடங்களிருந்தாலும், விடமின் ஒளஷதமான "எவர்ஷைன்" உபயோகியுங்கள். சமீபத்திய சாஸ்திரீய ஆராய்ச்சியின் வெற்றி. 24 முதல் 48 மணிக்குள், வீர்யம், வன்மை ஆச்சரிய வகையில் அதிகரிப்பதுடன், பலம், ஆரோக்யம் ஒரு வாரத்திற்குள் 100 மடங்கு அதிகரிக்கும். முகத்தில் ஏற்படும் பிரகாசத்தை பிரதி தினமும் கவனித்து வாருங்கள். வாரா வாரம் எடையை கவனித்து எடை அதிகரித்திருப்பதை கவனியுங்கள். "எவர்ஷைன்" வன்மை, வீர்யத்தை அளித்து 25 வயதுள்ளவராகச் செய்வதைப்பாருங்கள். ஸ்விட்ஜர்லாந்தில் ஆயிரக்கணக்கானவர்களுக்கு பரீக்ஷித்த பின் இப்பொழுது இந்தியாவில் கிடைக்கிறது.

விடமின் ஏ. பி. ஸி. டி. & இ. அடங்கியதும் யெளவனம், வன்மை, வீர்யம் அளிக்கத்தக்கதுமான "எவர்ஷைன்" தயாரிப்பிற்கு புரொபஸர் ஏ. பி. டேவிஸ், பலநாள் ஆராய்ச்சிக்குப் பின் "எவர்ஷைன்" தயாரிப்பிற்கு ஒரு புது முறை ஏற்படுத்தியுள்ளார் என மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம். இது மருந்தல்ல. இயற்கை உணவாகும். எக்காலத்தும், எந்த வயதிலும் ஆண், பெண் அனைவரும் உபயோகிக்கலாம். முகத்தோற்றம் அபிவிருத்தியடையும். உங்களுக்கு ஏற்படும் பௌருஷத்தை கண்டு அனைவரும் பிரமிப்பார்கள். வசீகரமில்லாமலும், முகம் சுருக்கத்துடனுள்ள ஸ்திரீகள் இதன் உபயோகத்தால் பள்ளி மாணவிகளுக்குள்ள புது சோபையைப் பெறுவார்கள். "எவர்ஷைன்" உபயோகிக்கும் ஒவ்வொரு ஆண், பெண்ணிற்கும் சந்தோஷமான நாட்கள் ஆரம்பமாகும். இம்மருந்தை இந்தியாவில் பிரபலப்படுத்த விலை ரூ. 3 என நிர்ணயித்துள்ளோம். இந்த விலை சில காலம்தான். பின்பு இதன் விலை ரூ. 15. இம்மாதிரியான அதிசயம் வாழ்க்கையில் ஒரு முறைதான் சம்பவிக்கும். இன்றே ஆர்டர் செய்யுங்கள். நாளை தாமதமாகிவிடலாம்.

குறிப்பு:—எமது அற்புத தயாரிப்பு பலனில்லையென நிரூபிக்கும் எந்த வைத்யர் அல்லது பொது மக்களுக்கு ரூ. 5,000/- ரொக்க வெகுமதியளிக்கப்படும். கடிதங்கள் ஆங்கிலத்திலேயே இருக்கவேண்டும்.

கிடைக்குமிடம்:
THE ROYAL CHAMBER OF SCIENCE,
P. O Box No. 82, (SW) CALCUTTA.

கர்ப்பத்தைத்தடுக்க "ரஹாத்"

நிச்சயமான மருந்தாகும். மூன்று நாட்கள் உபயோகித்தால் கர்ப்பம் தரிக்காது. ஆர்டருடன் உத்திரவாத பாரமும் அனுப்பப்படும். விலை ரூபா 5/8. அல்லது 10 ஷில்லிங். மாதவிடாய் தவறாமல் ஏற்படும்.

Dr. S. H. KHAN, (S.M.) 42,
Churchgate St., Fort, Bombay.
Phone 21343.

அமெரிக்க ஜனாதிபதி மனைவியான மிஸஸ் ரூஸ்வெல்ட் நியூயார்க் மேயர் லாகார்டியாவுடன் சம்பாஷிக்கிறார். அமெரிக்கா உள்நாட்டுப் பாதுகாப்பு இலாகா உதவி டைரக்டராக அவர் வேலையேற்றவுடன் எடுத்த படம். இலாகா டைரக்டர் லாகார்டியா, தொண்டர் படை திரட்டுவதில் மிஸஸ் ரூஸ்வெல்ட் கவனம் காட்டுவார். (இ. என். பி.)

நவநாகரீகம்

★

ஒரு புடவை

★

காசினி எழுதியது

* * * 'இந்த யுத்தம் எப்படி ஆனால் என்ன, இல்லை, நம்ம ஊருக்கேதான் வந்தால் என்ன? அவரவர் தினப்படி செய்யும் காரியங்களில் மனதைச் செலுத்துவது தான், நாம் தீரர்கள், வெறும் கோழை இல்லை என்பதற்கு அடையாளம்!' என்று மாலினி மூச்சு விடாமல் சொன்னாள்.

'நம்ம ஊருக்கு வரும் போல் தான் இருக்கு; ஆகாய விமானம் குண்டுமாரி பொழியப் போகிறது என்று எச்சரிக்கும் அபாயச் சங்கு ஊதும் போது, வெளியில் நின்று, நிதானமாக நாம் செய்துகொண்டிருக்கும் வேலையில் கவனத்தைச் செலுத்துவது வீரத்தனத்திற்கு அடையாளமாகுமா? அசட்டுத் தனத்தைக் குறிக்குமா?' என்று சுலோசனா ஆக்ஷேபித்தாள்.

'அப்பொழுது வேண்டிய ஜாக்கிரதையுடன் நடந்துகொள்ள வேண்டியதுதான்! வாசலில் நின்று பாழ் விழும் வேடிக்கையைப் பார்க்க வேண்டும் என்று நான் சொன்னேனா? அதுக்காக நாளைக்கு என்ன வருமோ, பொழுது எப்படி விடியுமோ என்று குருட்டு யோசனை செய்து, எதிலும் ஒட்டம் இல்லாமல் இருக்கக்கூடாது என்பதையே சொன்னேன். நீங்கள் சொல்லுங்கள் அத்தை!' என்று மாலினி என் அத்தை பக்கம் திரும்பினாள்.

'நீங்கள் சாதாரணமாகப் பேசாமல், ஏதுக்கு இப்படி மேடைமேல் நின்று பிரசங்கம் செய்பவர்கள் போல்—!' என்று என் அத்தை சொல்லிக்கொண்டிருக்கும் போதே,

'அந்தக் காத்து உங்களுக்கும் அடித்து விட்டால் போலிருக்கே!' என்று லேடி சின்னையாவின் மகள் குறுக்கிட எல்லாரும் (கொல், என்று நகைத்தோம்,

பிறகு விஷயம்என்னவென்று நான் கேட்டேன். அடுத்த மாதம் மாலினி சிநேகிதி குழந்தைக்கு பிறந்த நாளாம். அந்த சிநேகிதி குண்டக்கல் கிட்டே ஒரு ஊரில் வசிக்கிறாளாம். மாலினியை பிறந்த தினக் கொண்டாட்டத்துக்கு கட்டாயமாக வரும்படி எழுதி இருக்கிறாளாம்.

'சரி, வருகிறேன் என்று எழுதி இருக்கிறேன். போகத்தான் போகிறேமோ, செலவோடு செலவாக அன்றைக்குக் கட்டிக் கொள்ள நமக்கு ஒரு புதிய புடவை வாங்கிக் கொள்ளலாமே என்று தோன்றிற்று!' என்றாள் மாலினி.

'தோன்றாமல் இருக்குமோ? புதிய புடவை வாங்கிக்கொள்ள சாக்கு எது என்றுதான் கண்ணில் எண்ணெயை விட்டுக் கொண்டு காத்துக்கொண்டிருக்கிறீர்களே!' என்றாள் பங்கஜத்தின் மாமியார்.

'ஒரு புதிய புடவை வாங்கப் போகிறேன். நேத்திக்குப் பார்த்து வைச்சுவிட்டு வந்தேன். நாளைப்பொழுது எப்படி இருக்குமோ என்பது தெரியாத நிலை கெட்ட இந்த நாள்களிலே, எப்படி அடுத்த மாதம் அலங்காரம் செய்து கொள்ளுவதிலா புத்தி போகும்! உனக்கு கொஞ்சமும் முன் யோசனை இல்லை என்று சுலோசனா சொல்லுகிறாள்! என்றாள் மாலினி.

'உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சம் இல்லை என்கிறாள் மாலினி. எனக்கு நினைத்துக்கொண்டால் நெஞ்சு பட படக்கத்தான் செய்கிறது!' என்று சுலோசனா ஒப்புக் கொண்டாள்,

'எனக்கும் என்னமோ சுலோசனா சொல்லுவது தான் சரி என்று தோன்றுகிறது. துஷ்டரைக் கண்டால் தூர விலகு என்று தெரியாமலா நம்ம பெரியவா சொன்னா? தலை மேலே பாம், கீம் விழுவதாக இருந்தால் பேசாமே எங்கேயாவது போனால் என்ன என்றுதான் தோன்றுகிறது!', என்றாள் பங்கஜத்தின் மாமியார்.

'எல்லாம் இவாளுடைய புதிய நாகரீகத்தின் மகிமை! முன்னாளிலே என்ன இருந்தது! காசிக்குப்போக ஒரு வருஷம் கட்டை வண்டிப் பிரயாணம் செய்யவேண்டி இருந்தது! என்ன சௌகரியம் இருந்தது? எல்லாம் சுத்தக் கர்நாடகமாக இருந்தது என்று பழித்தார்கள். இப்போ தெரியறதா உங்கள் நாகரீகத்தின் பலன்? தலைமேலே குண்டுவிழ பெரிச்சாளிகளாட்டமா, வளைக்குள்ளே புகுந்துகொள்ள வேண்டியிருக்கு! கலிமுத்தி விட்டது! உங்களையும் சொல்லுவதற்கில்லை!' என்றாள் என் அத்தை

'எது எப்படியானாலும் சரி, நான் போய் அந்தப் புடவையை வாங்கி வரப்போகிறேன்!' என்று மாலினி கிளம்பினாள்.

புடவை ஆழ்ந்த சிகப்பு நிறமாக இருந்தது. சிகப்பில் கறுஞ்சிகப்பு என்று கூறலாம். நார் பட்டு மாதிரியில் உறுதியாகவும் மிகவும் மெல்லியதாகவும் இருந்தது. புதிய மோஸ்தருக்கு ஏற்ப கரை போடவில்லை. உடலில் நல்ல கனத்த தங்க சரிகையில் இலைக்கொத்துக்கள் மாதிரியில் அங்கங்கே போட்டிருந்தது, தலைப்பு என்று வேறாகப் போடவில்லை. ஆறு கஜம் புடவை தான். விலை எண்பது ரூபாய்கள் ஆச்சுது என்று மாலினி சொன்னாள். புடவை நல்ல களையாக, சோபையாகத்தான் இருந்தது. இதறகு ஏற்றாப்போல் சட்டைப் பட்டு மாலினி வாங்கி இருந்தாள். பழுப்பு நிறமான பட்டு; இதில் சிறிய, சிறிய சரிகைப் புள்ளிகள் போட்டிருந்தது. சிகப்புப் பட்டு பைபிங் வைத்துத் தைத்துக் கொள்ளப் போவதாகச் சொன்னாள்



பிரிட்டனில் விமானப் படையெதிர்ப்பு எதிர்ப்பு. ஸ்திரீகளும் அங்கு இப்போது ஏராளமாக முன் வந்திருக்கின்றனர்; படத்தில் அவர்கள் பீரங்கியை பிரயோகிக்கும் விஷயமாக பயிற்சி பெறுவதைப் பார்க்கலாம்.

தேங்காய் பர்பி

முத்தின தேங்காயை உடைத்து, மெல்லிய துருவலாகத் துருவிக் கொள்ள வேண்டும். துருவுவதற்கு முன், தேங்காயின் மேல் உள்ள நாரை ஒரு கத்திரியால் நன்றாகச் சீவி அலம்பி விட வேண்டும். இவ்விதம் கொட்டாங்கச்சியின் மேல் பாகத்தைச் சுத்தம் செய்து விடுவதினால், துருவலில் நார் விழாமல், சுத்தமாக இருக்கும். அடியை வரண்டியும் துருவக் கூடாது, ஒன்னிரண்டு அடல் விழுந்திருந்தால் பொருக்கி எடுத்து விட வேண்டும். துருவல் தும்பப்பூ மாதிரியில் வெளுப்பாக இருக்க வேண்டும்.

அடுப்பை நிதானமாக எரிய விட்டு, கனத்த பாணிலியை வைத்து துருவலைக் காந்தாமல் வதக்க வேண்டும். பிறகு, துருவல் ஒரு பங்கானால் இரண்டு பங்கு அஸ்கா சக்கரையைப் பாகு வைக்க வேண்டும். பாகை அழுக்கு எடுத்து, நல்ல முதிர்பாகாகக் காய்ச்சி, துருவலை அதில் கொட்டி, ஒன்றாகத் திரண்டுவரும் வரையில் கிளறி, ஒரு தாம்பாளத்தில் கொட்டி, சமனாகப் பரப்ப வேண்டும். இஷ்டமானால், கொட்டுவதற்கு முன். ஏலப்பொடி, குங்குமப் பூ முதலிவை போடலாம். சற்றே ஆறினதும் கீறிவிடவேண்டும். சூட்டுடன் கீறிவிட்டால் சீராக வில்லை போட வராது. இந்த பர்பி, பார்வைக்கு வெளுப்பாக இருப்பதுடன், வாய்க்கு கரகரப்பாகவும், மிருதுவாகவும் இருக்கும்.

ஜுரத்தில்

உஷ்ணம் 102 டிக்ரிக்கு மேலே போனால், கூந்தல் உதிர்வது நிச்சயம். அம்மையானாலும் சரி, 'டைபாயிட்' 'மலேரியா' 'இன்புளுயன்ஸா' முதலிய விஷ ஜுரங்களானாலும்சரி, சூடு காரணமாகவே மயிர் அபரிமிதமாகக் கொட்டுகிறது. ஜுர ஸமயங்களில் உஷ்ணம்அதிகமாக ஏறுவிடினும், மயிர் உதிர்வதுமட்டும் தவறுவதேயில்லை. அப்படி உதிரும்போது தக்க சிகிச்சைசெய்து தடுக்காமலிருந்துவிட்டால், மயிர் விடாமல் உதிர்ந்து தலையும் வழுக்கையாய்விடும்.

வெள்ளம் வந்தபிறகு அணையிடுவதேன்? மயிர் உதிர ஆரம்பிக்கு முன்னரே, கூந்தலைக் காப்பாற்றிக்கொள்ளுங்கள். ஜுரத்துக்குப் பிறகு கேசம் அரைப்பங்கு கால் பங்காகிக் குறைத்துவிட்டால், கேசவர்த்தினியைக் கொண்டு கேசத்தை விருத்திசெய்து பூரணமாக்கிக் கொள்ளுங்கள். கடைசியாக எல்லாப்பரீக்ஷைகளும் செய்தானபிறகு கேசவர்த்தினியே கூந்தலுக்குச்சிறந்தது என்று தெரிய வந்தால்,கேசவர்த்தினியைமுதலிலேயே கைக்கொள்ளலாமே?

கேசவர்த்தினி

கூந்தலைகாப்பது, விருத்தி செய்வது, அழகுபடுத்துவது. விலை அணா 12. மேற்செலவு வேறு. எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்:
தென் இந்திய ரஸாயன சாலை,
ஆர். எஸ். புரம் — கோயமுத்தூர்.

இனம்! இனம்!! இனம்!!!
ஐந்தணா தபால்பில்லை அனுப்புகிறவர்களுக்கு 'விறலிவிடுதூது வசனம்' என்ற புத்தகம் இனம். எந்த தேசத்து ஸ்டாம்பும் அனுப்பலாம்.
ஒற்றுமை ஆபீஸ், : :
தியாகராய நகர், மதராஸ்.

IMMEDIATE VASHIKARAN

On contract basis we undertake to influence or subjugate like spellbound any one or more persons (male or female) instantly and surely cause them entirely at your own grasp quite easily. Particulars against Stamps. SANTI ASRAM, Dacca (Bengal).

சித்திரமும் சிருங்காரமும்

★

மார்க்ஸ் சகோதரர்கள் படம்: குலுங்க வைக்கும் நகைப்பு: 'ஹவானுவில் விடுமுறை': சங்கீதம் நிறைந்தது: விவாக முறைகள்: மாறிவருகின்றனவா? எது சரியான மருந்து?: டைரக்டர் டாராக் கருத்து: ஷேர்லி டேம்பிள்: எதிர்பாராத தோழி.

இதில் எது பொம்மைப் பாவை ?

மார்க்ஸ் சகோதரர்கள் நடிக்கும் "தி பிக் ஸ்டோர்" என்ற படத்தில் சிக்கோவும் ஹார்ப் போவும் நடத்தும் வேடிக்கைக் காட்சி.

மார்க்ஸ் சகோதரர் படம்

மார்க்ஸ் சகோதரர்கள்–க்ரௌசோ, சிக்கோ. ஹார்ப்போ—பிரசித்தி பெற்று பதினேறு வருஷங்களாகி விட்டன: இந்த காலத்தில் அவர்கள் பதினேறு படங்களில் நடித்திருக்கின்றனர்.

ஒவ்வொரு படத்திலும் அவர்களது வேடிக்கையான நடிப்புக்குக் குறை கிடையாது. ஒவ்வொரு படமும் அவர்களிடம் அதிக அபிமானம் வளரச் செய்திருக்கிறது: இம்மாதிரியான பெருமை எல்லோருக்கும் கிடைப்பதில்லை; ஹாலிவுட்டில் இன்னும் இவர்களது பிரசித்தி பிரகாசிக்கிறது:

இவர்கள் கடைசியாக நடித்திருக்கும் "தி பிக் ஸ்டோர்" (The Big Store) என்ற படத்தில் குறும்புத்தனத்திற்கும் சங்கீதத்திற்கும் குறைச்சலே கிடையாது. ஒவ்வொரு காட்சியும் நம்மை நகைக்கப் பண்ணுகிறது: ஒவ்வொரு கீதமும் நம்மைக் குதூஹலப்படுத்துகிறது. அத்தகைய படம் இது! எங்கு பார்த்தாலும் கவலையும் கலக்கமும் கலந்திருக்கும் இக்காலத்தில், இம்மாதிரியான படங்களைப் பார்ப்பதால் நமது மனம் கொஞ்சம் ஆறுதல் அடைகிறது.

இதில் டோனி மார்டினும், வர்ஜீனியா க்ரேயும் கூட நடிக்கின்றனர்.

ஹார்ப்போ இதில் ஒரு துப்பறிபவன்: அவனைப் பற்றி சிந்திப்பவர் ஒருவரும் இல்லை. ஒரு பெரிய கடை சொந்தக்காரி மார்தா பெல்ப்ஸ், வுல்பிடம் வந்து கடையின் கூட்டாளியும் தனது அபிமான சகோதரனுமான டாம்மி ராஜர்ஸ் பற்றி தனக்குக் கவலை ஏற்பட்டிருப்பதாகவும், அவனைக் கொலை செய்ய முயற்சிக்கப்பட்டதாயும் ஆகவே ஒரு. துப்பறிபவனின் உதவியைத்தான் நாடுவதாகவும் கூறுகிருள். வுல்பும் அவளது ஏவல்களை எல்லாம் செய்யும் வாக்கியும், இதில் சிரத்தை எடுத்துக்கொண்டு துப்பறிபவதில் முனைகின்றனர். அங்கு வாக்கியின் சகோதரனும் டாம்மியின் சிநேகிதனுமான ரேவல்லி இவர்களுக்கு உதவியாக வருகிருன். டாம்மியின் காதலி ஜோன் ஸட்டனும், டாம்மியைப் பாதுகாப்பதற்காக இதில் சேருகிருள். தனக்கிருக்கும் அபாயத்தை டாம்மி உணரவில்லை: கடையில் இருக்கும் தனது பாகத்தை விற்கவே அவன் விரும்பினுன்: இந்த பணத்தைக் கொண்டு ரேவல்லி நடத்தும் சங்கீதபள்ளிக் கூடத்திற்கு உதவ அவன் விரும்புகிருன். டாம்மியை ஒழித்து மார்தாவை மணக்க ஆசை கொண்டிருக்கிருன் கடை மானேஜர் க்ரோவர் என்பவன்: இதற்கப்புறம் கடைசியில் மார்தாவும் வுல்பும் நட்பு காட்டுவது விபரீதமாகிறது: தகராறு தலை காட்டுகிறது.

இந்தப் படம் நகரில் கஸீனே தியேட்டரில் சனிக்கிழமை முதல் காட்டப்படுகிறது.

* * * *

"ஹவானுவில் விடுமுறை"

ஹவானுவுக்குப் போய்க்கொண்டிருந்த கப்பல் ஒன்று பாறை மீது மோதி கரை சேர நேர்ந்தது: டெர்ரி மக்ராக்கன் என்ற பணக்காரியை ஜே வில்லியம்ஸ் மணக்க ஏற்பாடாகியிருந்தது: மோதுண்ட கப்பல் பிரயாணிகளிடம் போய், தாங்கள் குறிப்பிட்ட ஸ்தலத்திற்குப் போக வற்புறுத்தவில்லை என்ற உறுதி பத்திரத்தை வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் பிறந்தது: இந்த கடமையை நிறைவேற்றிவைக்கும் பொறுப்பு விவாகத்திற்குத் தயாராகிக் கொண்டிருந்த வில்லியம்ஸ் மீது விழுந்தது: அவன் உடனே ஸ்தலத்திற்குப் புறப்பட்டுச் சென்ருன்: ஒருத்தி தவிர மற்ற பிரயாணிகள் யாவரும் நிர்ப்பந்தம் பண்ணுவதில்லை என்று தெரிவித்து விடுகின்றனர். நான் ஸ்பென்ஸர் மட்டும், இரண்டு வார காலம் நிம்மதியாகவும் மனோல்லாஸமாகவும், காலத்தைக் கழிப்பதற்காகத்தான் விடுமுறை எடுத்துக் கொண்டிருப்பதாகவும், ஆகவே இந்தசந்தர்ப்பத்தை நழுவவிடத் தான் இஷ்டப்படவில்லை என்றும் பிடிவாதமாகக் கூறி விடுகிருள்.

இது காரணமாக ஜே வில்லியம்ஸ் ஸ்பென்ஸரை ஒரு விமானம் மூலம் ஹவானுவுக்கு அழைத்துக்கொண்டு போய், அங்கு ஒருபெரிய ஹோட்டலில் அவளை இறக்கி, அவளுக்கு வசதி செய்விக்கிருன்; இந்த ஹோட்டலில் தினசரி ஏற்படும் செலவு மிதவும் அபாரமானது. பிறகு அன்றிரவு கிளப்புக்கு அவளை அழைத்துக்கொண்டு போகிருன். அங்கு ராஸிடா ரிவாஸ் என்பவளின் நடனமும் சங்கீதமும் எல்லோரையும் குதூஹலிக்கச் செய்கின்றன. ராஸிடாவின் அத்தியந்த நண்பனும் அவளது காரியதரிசியுமான மாண்டி ப்ளாங்கா அந்த சமயத்தில் வந்து சேருகிருன். அவனைக் கண்டதும் ஸ்பென்ஸரின் உள்ளத்தில் சிருங்கார ரசம் உதயமாகிறது; காதல் உணர்ச்சி மேலிடுகிறது.

ஹோட்டல் பையன் மாண்டியிடம் போய். ஸ்பென்ஸர் ஒரு பணக்கார அமெரிக்க ஸ்திரீ என்று கூற, அவளிடம் போய் எப்படியாவது அவளுடைய உள்ளத்தை கொள்ளை கொள்ள வேண்டும் என்ற ஆசை மாண்டிக்கு ஏற்படுகிறது; ஆகையால் அவன் அவளிடம் போய் காதல் பேச்சுகளைப் பிரஸ்தாபிக்கிருன்: ஸ்பென்ஸரை அவன் ஒரு சூதாட்ட ஸ்தலத்திற்கும் அழைத்துக் கொண்டு போகிருன்: கடைசியில் அவள் கம்பெனியில் வேலை செய்யும் ஒரு சாதாரணப் பெண் என்று தெரிகிறது; ஏற்பட்ட நஷ்டத்தை எப்படி சரிக்கட்டுவது என்று அறியாமல் மாண்டி தவிக்கிருன். இந்த சமயத்தில் ஜே வில்லியம்ஸ் அங்கு வந்து சேருகிருன்: நஷ்டத்தைத் தீர்த்துக் கொடுக்க இணங்குகிருன்: ஆனல் இதற்கு அவன் ஒரே நிபந்தனை விதிக்கிருன்: அது என்னவென்ருல் மாண்டி ஸ்பென்ஸரை எப்படியாவது குதூஹலப்படுத்தி, அவளிடமிருந்து மற்ற கப்பல் பிரயாணிகள் கொடுத்ததுபோன்ற உரிமை துறக்கும் பத்திரத்தை வாங்கித் தர வேண்டும் என்பதே.

மாண்டி ஸ்பென்ஸருடன் சந்தோஷமாகக் காலங் கழிப்பதை ராஸிடா வெறுக்கிருள்: ராஸிடா மூலம் ஒரு வித தடங்கலும் ஏற்படக்கூடாதென்பதற்கா ஜே வில்லியம்ஸ அவளுக்குக் காரியதரிசியாக இருக்க சம்மதிக்கிருன்: இரு கோஷ்டியாரும் ஒரு நாள், மற்ருெரு கோஷ்டியாருக்குத் தெரிவிக்காமல், வேறு ஒரு ஹோட்டலுக்குப் போகின்றனர்: ஒரு வித சந்தடியுமில்லாமல் இருக்க விரும்புகின்றனர். அங்கு மாண்டியுடன் ஸ்பென்ஸர் இருப்பதை ராஸிடா பார்த்து விடுகிருள்: உடனே அவள் செய்யும் ஆர்ப்பாட்டத்திற்கு எல்லையில்லை: அப்போது அவன் அந்த அமெரிக்கப் பெண்ணுடன் தான் உறவாடி வந்த தன் காரணத்தை ராஸிடாவிடம் விளக்குகிருன்.

மயிலை ஸ்ரீதியாகராஜ வித்வத் சமாஜத்தார் நடத்திய ஸ்ரீதியாகராஜ ஸ்வாமியின் உருவப்பட ஊர்வலம்.

நீ அதற்கு மேல் வியாக்கியானம் செய்ய வேண்டாம். மேலே சொல்லு." என்ருள்

"அதற்குப் பிறகு தூளியிலிருந்து வயிற்றுக் கோளாறு அல்லது மலேரியா ஜ்வரம். பிறகு தகப்பனுரின் போஷணையில் குனேன், பார்லிக் கஞ்சி. அதற்குள் தான் மற்ருெரு குழந்தை பிறந்து விடும் என்று முன்பே சொன்னேனே, அதற்குப் பிறகு பிரசவ அறையின் பாடுகளையெல்லாம் பட்டுவிட்டு தாய் குழந்தையை மடியில் கொண்டு வெளியே வருவாள். கொஞ்ச நாள் முதல் குழந்தைக்காக அழுவாள்"

ராஜலக்ஷ்மி முகம் வெளுத்துப் போய் "அழுவது எதற்காக?" என்று கேட்டாள்.

"அது தாயாரின் இயற்கை என்று தான் சொல்லவேண்டும். குமாஸ்தாக்கள் வீட்டில் எல்லாம் அதே மாதிரிதான்! பகவான் அவர்களுடைய கஷ்டத்தைக் குறைப்பதற்காக குழந்தைகளைத் தம்மிடம அழைத்துக் கொண்டு விடுகிருர்."

"ஐயையோ!"

அது வரை வெளியே பார்த்துக்கொண்டே கதை பேசிக் கொண்டிருந்தேன். திடீரென்று முகத்தைத் திருப்பிப் பார்த்த பொழுது அவளுடைய கண்களில் கண்ணீர் நிரம்பி இருந்தது. அவள் மிகவும் வருந்தமடைந்து போய்விட்டாள் என்று கண்டேன். அந்த அப்பாவிக்கு அநாவசியமாக ஏன் இவ்வளவு மனக்கிலேசத்தை உண்டு பண்ணினேம் என்று எனக்குத் தோன்றிற்று. மற்ற பெரிய மனிதர்களைப் போல உலகத்தினுடைய கஷ்ட நிஷ்டூரங்களை இவனும் அதிகமாக அறியவில்லை. வங்காளி ஏழைகளின் தரித்திர வாழ்க்கையைக் கண்டு கொஞ்சம்கூட மனங்கலங்காத பெரிய மனிதர்களைப் போல இவள் இருந்திருந்தால் இந்தக் கதையைக்கூட இவளிடம் சொல்லி இருக்கமாட்டேன். இப்பொழுது எப்படி இதை மறக்கடிக்கிறது? என்று நான் யோசித்துக் கொண்டிருக்கும் பொழுது ராஜலக்ஷ்மி கண்களைத் துடைத்துக் கொண்டு அடைபட்ட குரலில் திடீரென்று "அவர்கள் குமாஸ்தாக்களாக இருந்தாலும் உன்னைக் காட்டிலும் மேல் நீ வெறும் கருங்கல். நீ உன்னுடைய கஷ்டம் ஒன்றையும் சொல்லவே இல்லை. இவர்கள் வாழ்க்கையை வெகு சந்தோஷத்துடன் வர்ணிக்கிருய். ஆனல் என் உள்ளம் வெடித்து விடும் போலிருக்கிறது" என்று சொல்லி மேலும் அழ ஆரம்பித்தாள். நான் அதற்குப் பதில் சொல்லவில்லை: ஏனென்ருல் அதில் லாபம ஒன்றும் இல்லை.

வெகு வினயத்துடன் "இந்த துர்ப்பாக்கியர்களுக்கு இருக்கும் சுகம் கூட எனக்குக் கிடையாது. வீடு போய்ச்சேர்வதில் அவர்களுக்கு இருக்கும் ஆவலைக் கொஞ்சம் கவனித்துப் பார்க்க வேண்டும்" என்றேன்.

ராஜலக்ஷ்மியினுடைய முகம் ஏககாலத்தில அழுகையும் சிரிப்பும் கலந்து மலர்ச்சி அடைந்தது.

"நானும் அதைத்தான் சொல்லுகிறேன தங்கள் தகப்பனுர் வருவார் என்று குழந்தைகளெல்லாம் வழியைப பார்த்துககொண்டிருக்கின்றன. அவர்களுக்குக் கஷ்டமேது? அவர்களுக்குச்சம்பளமும் குறைச்சல். ஆடம்பரமும கிடையாது. ஆனல் இருபத்தைந்து முப்பதுரூபாயா? அவ்வளவு குறைந்த சம்பளமா? இருக்கவே இருக்காது, குறைந்தது நூறு, நூற்றைம்பது இருக்கும் என்று நான் நிச்சயமாக நினைக்கிறேன்" என்ருள்.

"இருக்கலாம், எனக்கு அவ்வளவாகத் தெரியாது" என்றேன்.

ராஜலக்ஷ்மி உடனே உற்சாகமடைந்து விட்டாள். குமாஸ்தாவுக்கு நூறு நூற்றைம்பது இருந்தது கூட அவளுக்குத் திருப்திாக இல்லை.

"அந்த சம்பளம் மட்டும்தான் என்று நினைக்கிருயா நீ, மேல் வரும்படியும் ஏதாவது கிடைக்காதா?" என்ருள்.

"மேல் வரும்படியா? ஓடுதான்!"

அதற்கு மேல் அவள் ஒன்றும் சொல்லவில்லை. முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு பாதையைப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். சிறிது நேரம் அங்கேயே பார்த்துக் கொண்டிருந்து விட்டு அவள் "நான் உன்னைப் பார்க்கப் பார்க்க என் மனம் உன் வசப்படுகிறது. உன்னைத் தவிர எனக்கு வேறு கதியில்லை என்பதால்தான் நீ இந்த மாதிரி என்னைப் பாடுபடுத்துகிருயா?" என்ருள்.

அவ்வளவு நாட்களுக்குப் பிறகு அன்று தான் என்று நினைக்கிறேன். நான் முதன்முதலாக அவள் கைகளைப் பலவந்தமாகப் பிடித்திழுத்து என் கையில் வைத்துக்கொண்டேன். அவளைப் பார்த்து ஏதோ ஓரிரு வார்த்தை சொல்ல வாயெடுத்தேன். அதற்குள் வண்டி ஸ்டேஷன் வாசலில் போய் நின்றது, ஒரு தனி வண்டியை ரிசர்வ் செய்வதற்காக பங்கு முன்பே சாமான்களுடன் அங்கு போயிருந்தான்.

ரதனைக்கோச்சு வண்டியின் மேல் பார்த்ததும் அவன் அவசரமாக அருகில் வந்தான். நான் கைகளை விட்டுவிட்டு முன்போலவே உட்கார்ந்தேன். நாக்கு நுனிக்கு வந்த வார்த்தை மறுபடியும் உள்ளே போய் உள்ளத்தில் மறைந்து கொண்டது.

இரண்டரை மணிக்கு லோகல் வண்டி புறப்படும், அதற்குப் பிறகு தான் எங்கள் வண்டி. அப்பொழுது நல்ல வயதுள்ள உயர்ந்த வகுப்பைச் சேர்ந்த ஏழை ஒருவன் ஒரு கையில் சில காய்கறி மூட்டையையும் மற்ருெரு கையில் மண் பொம்மைப் பட்சி ஒன்றையும் எடுத்துக் கொண்டு பிளாட்பாரத்தை நோக்கி வேகமாக வந்துகொண்டிருந்ததில் எதிரில் இருப்பது கூடத்தெரியாமல் ராஜலக்ஷ்மியின் மேல் மோதிக்கொண்டான். மண் பொம்மை கீழே விழுந்து உடைந்துவிட்டது. அவன் "அடடா!" என்று சொல்லிக்கொண்டு கீழே விழுந்ததை எடுக்கக் குனிந்தான்.

அவ்வளவுதான்! கிழ பாண்டே 'உம்' என்று கர்ஜித்துக்கொண்டு அவன் மேல் பாய்ந்தான். செருப்பை எடுத்துக்கொண்டு ஓடி வந்தான். நான் ஏதோ நினைத்துக் கொண்டு நின்றிருந்தவன் அங்கே வந்தேன். அவன் நடுநடுங்கிக் கொண்டு "நான் பார்க்கவில்லை, அம்மா பெருத்த தவறு செய்து விட்டேன்!" என்று கெஞ்சிக் கொண்டிருந்தான்.

நான் உடனே அவனை விடுவித்து "இந்த வண்டிக்குப்போக வேண்டுமா? ஓடு, வண்டி புறப்படப்போகிறது!" என்றேன.

அந்த மனிதன் அப்பொழுதும் உடைந்தபொம்மையைப் பொறுக்குவதற்காக அங்குமிங்குமாக ஓடிவிட்டுக் கடைசியாக வண்டியைப் பார்க்க விரைந்தான். ஆனல் அவன் சிறிது தூரம் போவதற்குள் வண்டி புறபபட்டுவிட்டது. அவன் மறுபடியும் திரும்பி வந்து மற்ருெருமுறை மன்னிப்புக் கேட்டுக்கொண்டு உடைந்த பொம்மையின் பாகங்களைப் பொறுக்க முயலுவதை நான் கண்டு சிரித்துக் கொண்டே, "அதை என்ன பண்ணப்போகிருய்?" என்று கேட்டேன்.

"ஒன்றுமில்லை ஐயா, என் பெண்ணுக்கு உடம்பு சரியாயில்லை. போன திங்கட்கிழமை வீட்டிலிருந்து புறப்படும் பொழுதே அவள் பட்சி பொம்மை ஏதாவது வாங்கிக்கொண்டு வா அப்பா என்ருள். வாங்கப் போனேன். அயோக்கியப் பயல் இரண்டணவுக்குக் குறையமாட்டேன் என்று சொல்லி விட்டான். எப்படியோ கெஞ்சிக் கூத்தாடி என்னிடம் இரண்டணு வாங்கிவிட்டான். ஆனல் துர்ப்பாக்கியத்தைப் பாருங்கள், இதோ உடைந்து போய் விட்டது. உடம்பு சரியாயில்லாத குழந்தை கையில ஏதாவது கொடுப்பதற்கில்லை. 'அப்பா, வாங்கிக் கொண்டு வரவில்லையா?' என்று அழும். இந்த உடைந்த பொம்மையையாவது எடுத்துக் கொண்டு போய் காட்டி அம்மா அடுத்த மாசம் சம்பளம் வாங்கினதும் முதலில் உனக்கு வாங்கித் தருகிறேன். வாங்கிக் கொடுத்து விட்டு மறு காரியம் பார்க்கிறேன்' என்று சொல்லுவேன்" என்று சொல்லி விட்டு அந்தத் துண்டுகளைப் பொறுக்கி முடிந்து கொண்டு "உங்கள் மனைவிக்கு கொஞ்சம் சிரமம் ஏற்பட்டு விட்டது. நான் பார்க்கவில்லை. சாமானும் நஷ்டமாயிற்று. வண்டியும் கிடைக்கவில்லை கிடைத்திருந்தால் குழந்தையை இன்னும் அரைமணிக்கு முன்பாவது போய்ப் பார்ப்பேன்" என்று சொல்லி விட்டுப் போய் விட்டான். பங்குபாண்டேஜீயை கூட்டிக்கொண்டு ஏதோ காரியமாக எங்கோ போனுன், நான் திரும்பி ராஜலக்ஷ்மியைப் பார்த்த பொழுது அவளுடைய இரண்டு கண்களிலும நீர் பெருகிக் கொண்டிருந்தது. நான பரபரப்படைந்து போய் அருகில் சென்று "நன்ருக அடிபட்டதா இல்லையே, எங்கே!" என்றேன்.

ராஜலக்ஷ்மி முந்தானையில் கண்களைத் துடைத்துக் கொண்டே மெள்ள "ஆமாம் நன்ருகத்தான் அடிபட்டு விட்டது. ஆனல் இந்தமாதிரி சந்தர்ப்பத்திலும் உன்னைப்போல் கல்லாக இருக்கும் ஆளை நான் பார்த்ததும் இல்லை, இருப்பதாகக் கேள்விப் பட்டதும் இல்லை!" என்ருள்.

(தொடரும்.)

பயஸ்யா

தாய்மார்களே!

குழந்தைகளுக்கு தாய்ப்பால் தவிர மற்ற எந்த உணவும் ஏற்றதல்ல.

●

உங்கள் பாலை விருத்தி செய்து கொண்டு குழந்தைகளை நீங்களே ஆரோக்கியமாய் வளருங்கள்.

●

தாய்ப்பாலினுல் வளர்ப்பது ஆரோக்கியம் மட்டுமல்ல. மிகச் சிக்கனம்கூட.

பயஸ்யா (Regd)

தாய்ப்பாலை மிகுதியாய் உண்டு பண்ணும் உத்தம ரஸாயனம்.

விலை ரூ. 2—4—0

(Packing & Postage Extra.)

எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.

அல்லது நேரில்:—

ஆத்ரேய ஆயுர்வேதிக் ஒர்க்ஸ்,

தென்னூர்ரோடு, திருச்சினுப்பள்ளி.

Prop. V. B. Nataraja Sastri, Ayurvedacharya.

(தாய்மாருக்கு உபயோகமுள்ள பயஸ்யா புஸ்தகம் இனம்.)

22 காரட், டி. சி. என்.

ரோல்ட்கோல்ட் வளையல்கள்

அசல் தங்க வளையல்களைப்போல்

எப்பொழுதும் நிறம் மாருமல் இருக்கும். 5 வருஷம் உத்திரவாதமுள்ளது. சிறு குழந்தைகள் முதல் பெரியவர்கள் சைஸ் வரையில் ஒரே விலைதான். வளையல் ஜதை 1-க்கு ரூ. 6. வி. பி. செலவு: 1 ஜதை முதல் 6 ஜதைகள் வரை அணு 8. விலாசம்:-

டி. சி. நாகலிங்கப்பா & Co

பார்க் டவுன் போஸ்ட், மதராஸ்.

1 மணியில் வாலிபம்.!

ரமணவிலாசினி

காம சக்தியை விருத்தி செய்து, துரித ஸ்கலிதத்தை நிறுத்தி, எல்லோருக்கும் சிற்றின்பத்தில் திருப்தியைத்தரும பரம ஒளஷதம். டப்பி ரூ. 1.

மதன மஞ்சரி பார்மஸி,

184, சைனுபஜார் ரோட், மதராஸ்.

இனி கவலை இல்லை!

கலியாண ஆபீஸ்

உங்களுக்குகந்த பெண்ணே, மாப்பிள்ளையோ தேவையா? இன்றே ஜாதகமும், ஸ்டாம்பும் அனுப்புங்கள்.

விவரங்களுக்கு:

MATRIMONIAL BUREAU,

588, High Road, Triplicane, MADRAS.

இவர்களுக்கு என்ன சந்தோஷம்!

ஜான் பெய்ன், ஆலிஸ பே, கார்மன் மிராண்டா, ஸிஸர் ரோமிரோ, "வீக் எண்ட் இன் ஹவானு" என்ற படத்தில் ஒரு காட்சி,

இது ஸ்பென்ஸரின் கோபத்தை மூட்டி விடுகிறது: பத்திரத்தில் கையொப்பமிட மறுக்கிருள். கடைசியில் ஜே வில்லியம்ஸ் வந்து அவளைச் சாந்தப் படுத்தி காரியத்தை சாதித்துக் கொள்கிருன்: இதற்கப்புறம் டொர்ரியிடம் திரும்பிப் போய் அவளை சமாதானப் படுத்துவதும் வேடிக்கையும் புதுமையும் நிறைந்த காட்சிகள்.

இருபதாம் நூற்ருண்டு பாக்ஸ் கம்பெனியாரின் இந்தப் படத்தில் ஆலிஸ் பே, கார்மன் மிராண்டா ஜான் பேய்ன், ஸிஸர் ரோமிரோ ஆகியோர் நடிக்கின்றனர். காதுக்கினிய சங்கீதமும் காணத் தக்க நடிப்பும் நிறைந்த இந்தப் படத்தை சினிமா அபிமானிகள் பாராட்டாமல் இருக்க முடியாது.

* * * *

விவாக முறைகள்

இவ்வுலகத்திலேயே மிகப் பழமை வாய்ந்தது விவாக முறை தான்: அது மட்டுமல்ல. அநேக நூற்ருண்டுகளுக்குப் பின்னரும் அதில் மாறுபாடு ஏற்பட்டிருப்பதாக எண்ண இடமில்லை. தற்காலத்திலும் நாம் நமது முன்னோர் வகுத்த முறை நீடித்திருப்பதைக் காணலாம். பழைய காலத்திய ரோமாபுரி மக்கள், ஹிப்ருக்கள், கிரேக்கர்கள், ஆங்கிலோ-ஸாக்ஸன் ஜாதியார், இவர்கள் கடைபிடித்த மார்க்கத்தையே நாம் இன்னும் அனுஷ்டித்து வருகிருேம். மேனுட்டில் இந்த முறை சிறிதளவுக்குக்கூட மாறியிருக்கிறது என்று கூற முடியாது. விவாக மோதிரத்தை அணிவித்தல் முதற்கொண்டு, விவாகமானதும் உல்லாஸ யாத்திரையாகப் போவது வரை, பழையகாலத்திய நிலைமை தான் இன்றும் இருந்து வருகிறது.

தென் கடல் தீவுகளில் இந்த சம்பிரதாயம் சிறிது கூட சஞ்சலமடைந்தது கிடையாது. பஸிபிக் மஹா சமுத்திரத்தில் இருக்கும் இந்தத் தீவுகளைப் பற்றி, சென்ற நூறு வருஷகாலமாகத்தான் இதர நாட்டார் அறிவார்கள். உலகிலுள்ள இதர மக்களுக்கும் இப்பிரதேசத்தாருக்கும் ஒரு வித தொடர்பு கூட இருந்தது கிடையாது. இந்தத் தீவுகளிலும், அவர்கள் அனுஷ்டிக்கும் சம்பிரதாய முறைகளை ஆராய்ந்து பார்த்தால், ருது சாந்தி விஷயத்தில் மற்ற விடங்களில் அனுஷ்டிக்கப்படும் சடங்குகளே அனுஷ்டிக்கப்படுவது புலனுகும். இதன் மூலம் நாம் அறியக்கூடியது ஒன்று தான்: அதாவது ஸ்திரீ புருஷர் தோன்றிய தினத்திலேயே விவாக முறையும் நிர்ணயமாகி விட்டது.

யுனைடட் ஆர்டிஸ்ட்ஸ் கம்பெனியாருக்காக எட்வர்ட் ஸ்மால் "பேகோ பேகோவுக்குத் தெற்கே" என்ற படத்தைப் பிடிக்க முன் வந்தபோது, இந்தத் தென்கடல் பிரதேசத்தில் நடக்கும் விவாகத்தைப்பற்றி விசாரணை நடத்தப்பட்டது. இந்தப் படத்தைப்பிடிப்பதற்கு முன், டைரக்டர் தென் கடல் தீவுகளுக்கு மேற் குறிப்பிட்ட விஷயமாகத் தமக்கு சில ஆதாரங்களைக் கொண்டு வந்து கொடுக்கும்படி சில ஆட்களை யனுப்பினுர். இதற்குக் காரணம் தாம் தயாரிக்கும் படம் குற்றம் குறையின்றி சோபிக்க வேண்டும் என்பதே. அவர் தமது படத்திற்காக அநேக விஷயங்களை சேகரித்தார். அது வரை வெளியார் அறியாத ஒரு பிரதேசத்தின் மக்களைப் பற்றி அவர் பல புது விஷயங்களை அறிந்து கொண்டார்: தமக்குத் தெரிய வந்த விஷயங்கள் இதரர்களுக்கும் பயன்பட வேண்டுமென்ற நோக்கத்துடன் அங்கு படத்தைத் தயாரித்தார். தென் கடலில் ஒரு சிறுவனுக்கும் சிறுமிக்கும் விவாகம் நடப்பது தான் அவர் தயாரித்த படத்தின் அடிப்படையான கருத்தாகும்.

மனேவா என்ற தீவு படத்திற்காகக் கற்பனை செய்யப்பட்டது: ஆனல் அது தென் கடல் தீவுகளின் உண்மைப் பிரதிநிதி என்று கூறலாம். இந்த மனேவா தீவில் தனது காதலியின் தலையில் காதலன் ஒரு வெண்மையான மலரைச் சூட்டுகிருன். வேறு சில இடங்களில் வைர மோதிரம் அணிவிப்பதை இதற்கு சமமாகக் கருதலாம். இதற்கப்புறம் தன் மனைவியுடன் வாழ்வதற்காக, அவன் வீட்டை புதுப்பிக்கிருன்: அலங்காரம் செய்கிருன்: இதெல்லாம் முடிந்த பின்பு பூக்களால் சிங்காரிக்கப்பட்ட ஒரு தோணியில் மனைவியை அழைத்துக்கொண்டு அவன் சில நாட்கள் உல்லாசமாகக் கழிக்கக் கிளம்புகிருன். தற்போதும் தம்பதிகள் விவாகமான தினம் மோட்டாரில் மிகவும் குதூஹலமாகப் போகிருர்கள் அல்லவா? இந்தப் பிரயாணத்திற்கு முன்பு ஒரு பெரிய விருந்து நடக்கிறது; விருந்துச் சாப்பாடு பிரதேசத்தைப் பொறுத்ததாகும். விவாக தினத்தன்று காலை, தம்பதிகளாக விரும்புவோர் பக்கத்து தீவுக்குப் போய், அங்கு கோவிலில் தங்களது விவாகத்தைப் புனிதமாக்கிக் கொள்கின்றனர்; இதே மாதிரிதான் எங்கும்! தெய்வத்திற்கும் திருமணத்திற்கும் சம்பந்தம் இல்லாத இடமே கிடையாது: விவாக விஷயத்தில் மதம் முக்கியமாகப் பிரவேசிக்கிறது; இதே தீவில் இரவைக் கழித்து விட்டுத் திரும்புகிருன்.

இந்தத் தீவுகளில் மற்ருெரு வேடிக்கையான வழக்கமும் நிலவி வருகிறது: விவாக சமயத்திற்கு முன்பு கல்யாணப் பெண்ணின் பெற்ருேர் அவளைக் கண்டுபிடிக்கத் தேடுகின்றனர். விவாக தினத்தன்றுகூட அவளுடைய தாயும் தகப்பனும் ஒவ்வொரு வீட்டிற்கும் போய், தங்கள் பெண் அங்கிருக்கிருளா என்று வினவுகின்றனர்; ஆனல் அவள் எந்த வீட்டில் இருக்கக்கூடும் என்று அவர்கள் எதிர்பார்க்கின்றனரோ, அந்த வீட்டிற்கு மட்டும் போய்க் கேட்பதில்லை. தங்கள் பெண்ணையும் அவளது காதலனையும் எந்த வீட்டிலாவது அவர்கள் கண்டு பிடித்துவிட்டாலும் அவர்களைப் பார்க்காதது போல் பாசாங்கு செய்கின்றனர். தம்பதிகள் ஓர் இரவு வெளியே இருந்துவிட்டுத் திரும்பியவுடன், பெற்ருேர் தங்களது ஆச்சர்யத்தைத் தெரிவிப்பதுடன், பெண் காணுமல் மறைந்துவிட்டதற்காக வெளிக்கு மட்டும் கோபம் காட்டுகின்றனர். பெற்ருேர்களிடமிருந்து வந்த ஒருத்தியைத் தனிப்படுத்தி விவாகம் செய்துகொள்ளுவதையே இவ் வழக்கமும் சூசிப்பிகிறது.

எட்வர்ட் ஸ்மால் தயாரித்திருக்கும் புதிய படத்தில் இப்பழக்க வழக்கங்கள் தத்ரூபம் அப்படியே சித்தரிக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் விவாக முறையில் ஒருவித மாறுதலும் கிடையாது. அதே பழைய வழக்கம் தான் நீடித்து வருகிறது.

* * * *

"கோல்ப்" ஆட்டம்

மெட்ரோ கோல்ட்வின் மேயர் படமான "வுமன் ஆப் தி இயர்" என்ற படத்தில் ஸ்பென்ஸர் ட்ராஸியும் காதரைன் ஹெப்பர்னும் நடிக்கின்றனர். இப்படத்தை டைரக்ட் செய்த ஜார்ஜ் ஸ்டீவன்ஸ் மிஸ் ஹெப்பர்னை ஒரு நாள் கோல்ப் ஆட்டப் போட்டிக்கு வலித்திழுத்தார்.

"பரவாயில்லை. உனக்கு ஆட்டத்தில் அதிகமான சலுகை கொடுக்கிறேன்" என்ருர் அவர்.

"அவ்வளவு போதும். பன்னிரண்டு ஸ்ட்ரோக்குகள் கொடுங்கள்" என்ருள் மிஸ் ஹெப்பர்ன். (கோல்ப் ஆட்டத்தில் பந்தை பறக்கடிப்பதற்குத் தான் "ஸ்ட்ரோக்" என்று பெயர். அதிக ஸ்ட்ரோக்குகள் இல்லாமல் பந்தை குறிப்பிட்ட குழிக்குள் தள்ளி விடுபவருக்குத் தான் இந்த ஆட்டத்தில் வெற்றி)

"அது முடியாது! ரொம்ப ஜாஸ்தி. ஸ்திரீகளுக்காக அவ்வளவு விட்டுக் கொடுக்க முடியாது." என்ருர் அவர் இதற்கப்புறம்.

பிறகு சிறிது நேரத்திற்கெல்லாம் இருவரும் ஒரு ஏற்பாட்டிற்கு இணங்கினர். வெகு சீக்கிரத்தில் மிஸ் ஹெப்பர்ன் இந்த

ஆட்டத்தில் நல்ல தேர்ச்சியடைந்து தன்னையும் மீறி விடுவாள் என்பது ஸ்டீவன்ஸுக்கு அச்சமயம் எப்படித் தெரியும்?

கனக்டிகட் ஸ்திரீகள் கோல்ப் ஆட்டப்போட்டியில் அவள் முன் நின்ருள். "பெல்-ஏர்" கோல்ப் மைதானத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமையும் ஆட அனுமதிக்கப்பட்டிருக்கும் ஸ்திரீ அவள் ஒருவள்தான்!

* * * *

எது சரியான மருந்து?

"சினிமாப் படத் தொழிலின் சரித்திரத்தில் வேடிக்கையான படத்தின் அவசியம் இதற்கு முன்பு இவ்வளவு அவசரமாக இருந்ததில்லை" என்கிருர் நார்மன் டாராக். இவர் ராஸலிண்ட் ரஸ்ஸல், வால்டர் பிட்ஜன் ஆகியவர்கள் நடிக்கும் "டிஸைன் பர் ஸ்காண்டல்" (Design for Scandel) என்ற மெட்ரோ-கோல்ட்வின் படத்தை டைரக்ட் செய்கிருர்: இப்போது "எதையும் குணப்படுத்த சிரிப்புதான் மருந்து" என்ற பழமொழியில் நம்பிக்கை கொண்டவர் டாராக். ஹாலிவுட்டிலேயே வேடிக்கைக்கே இடமளிக்காத படங்களை டைரக்ட் செய்வதில் பிரசித்தி பெற்ற ஒருவர் இவ்விதம் கூறுவது புரட்சிகரமானதல்லவா?

"உலகில் பல முக்கிய மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன. இவ்வளவு வேகமாக மாறிவரும் கால நிலைக்கு அனுகுணமாக நாமும் இருக்கவேண்டுமானுல் நாமும் அதற்கேற்றவாறு மனே நிலையை மாற்றிக்கொள்ள வேண்டும்" என்கிருர் அவர்.

டாராக் மேலும் கூறியதாவது:— "ஹாலிவுட்டின் சரித்திரத்திலேயே மிகவும் முக்கியமான கட்டம் இப்போதுதான் வந்திருக்கிறது. சினிமா அபிமானிகளைத் திருப்தி பண்ண வல்லது ஹாஸ்யமும் வேடிக்கையும் நிறைந்த படம்தான். ஏனெனில் தற்போது இந்த உலக யுத்தம் காரணமாக அவர்களது உள்ளம் மிகுந்த கவலையடைந்திருக்கிறது."

* * * *

ஷெர்லி டெம்பிள்

"காத்லின்" படப் பிடிப்பு பூர்த்தியானதும் ஷெர்லி டெம்பிள், வெஸ்ட் லேக் பெண் பள்ளிக்கூடத்தில் சேர்ந்திருக்கிருள். அங்கு அவளுக்கு எதிர்பாராத சகா ஒருத்தி வாய்த்திருக்கிருள்: இவள் ஹெர்பர்ட் மார்ஷல் பெண் ஸாராலின் மார்ஷல்: இவளுக்கு எட்டு வயதாகிறது, மெட்ரோ-கோல்ட்வின் மேயரின் "காத்லின்" படத்தில் ஹெர்பர்ட் மார்ஷல் ஷெர்லியின் தகப்பனுராக நடித்திருக்கிருர்.

"ஆகவே நாம் இருவரும் சகோதரிகள்தான்" என்ருள் ஷெர்லி ஸாராவைப் பார்த்து. இந்தப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்திருப்பது ஷெர்லிக்கு மிகுந்த குதூஹலத்தை அளித்திருக்கிறது,

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வைத்துத் தகர்க்கும் வித்தை அந்தக் காலத்திலே தக்ஷிணத்தில் ஒருவருக்கும் தெரியாததாகையாலேதான் கோட்டைக்குள்ளிருப்பவர்கள் அவ்விதம் செய்வதை லட்சியமாகக் கொள்ளாமல் சும்மா இருந்து விட்டனர் என்று கூறுகிருர்.

விஜயநகர சாம்ராஜ்ய நாளில்

அதற்கு முந்திய காலத்திலும் விஜயநகர ஸாம்ராஜ்ய சக்கரவர்த்திகள் வெடி மருந்தை உபயோகித்து வந்திருக்கிருர்கள் என்று தெரிகிறது. கி. பி. 1453-ம் ஆண்டில் விஜயநகர சக்ரவர்த்தியின் ராஜசபையில் வந்து கொஞ்ச நாள் தங்கிச் சென்ற அப்துர் ரஜாக் என்பவர் மன்னர்கள் மஹாநவமிக் கொண்டாட்டத்தின் பொழுது வெடி மருந்தை உபயோகித்துப் பல வாண வேடிக்கைகளைச் செய்தார் என்பதை விவரமாகக் குறித்து வைத்திருக்கிருர்.

சரித்திர ஆதாரங்களில் காணப்படுவதைப் போலவே இலக்கியங்களிலும் பீரங்கி துப்பாக்கி முதலியவற்றைப்பற்றிய குறிப்புகள் உள்ளன.

மற்ருெரு ஆதாரம்

கண்டீரவ நரஸ ராஜ விஜயம் என்னும் நூல் கி. பி. 1648-ம் ஆண்டில் மைசூர் மன்னரான கண்டீரவ நரஸ ராஜரைப் புகழ்ந்து அவருடைய தளவாய் நஞ்ச ராஜேந்திரன் கோரிக்கைபடி எழுதப்பெற்றதாகும். அதை எழுதியவர் கோவிந்த வைத்யர் என்னும் அந்தணர். அந்த நூலில் ரணதுல்லாகான் நிகழ்த்திய போரில் வண்டியில் இழுத்து வந்த பீரங்கிகளையும் ஆயிரக்கணக்கான மூட்டைகளில் கொண்டு வந்த வெடி மருந்தையும் உபயோகித்தான் என்று அவர் கூறுகிருர்.

பதினுரும் நூற்ருண்டின் கடைசியில் ருத்ர கவி என்பவர் எழுதிய ராஷ்ட்ரௌட வம்ச மஹா காவியம் என்னும் நூலில் பீரங்கிகள் கக்கும் இரும்பு வெடிகுண்டுகளுக்குள் கூரிய அம்புகள் கருங்கல் துண்டுகள் முதலியவை இருந்தனவென்று காணப்படுகின்றது.

வேறு ஒரு பழைய நூல்

தளபதிராயர் என்பவர் எழுதிய 'யாவன பரிபாடீ அனுக்ரமம்' என்னும் நூலினின்றும், அந்தக்காலத்தே அரசர்கள் பீரங்கிப்படை ஒன்றைத் தனியாக வைத்திருந்தார்கள் என்பது விளங்கும். அதன் தலைவனுக்கு அனலாத்யக்ஷன் என்ற பெயர் காணப்படுகின்றது, பீரங்கிகள் சேமிக்கப்பட்டிருந்த இடத்தை யந்த்ரசாலை என்றும் வெடிமருந்தை குலி காங்கார சூர்ணம் என்றும் கூறிவந்தார்கள். ஒட்டகை மீது ஏற்றிச் செல்லக்கூடிய பீரங்கிகளுக்கு உஷ்ட்ரநாலிகா என்று பெயர். அதே போலக் குதிரைமீதும் யானைமீதும் ஏற்றிச் செல்லக் கூடியவற்றுக்கு முறையே ஹயநாலிகா, கஜநாலிகா என்ற பெயர்கள் வழங்கி வந்தன.

பீரங்கி வாயினின்றும் வெடி மருந்தைக்கொண்டு உந்தி வெளியே தள்ளும் குண்டுகளை இரும்பால் செய்துவந்தார்கள், அதனுள் ஈயம், வெண்கலம், முதலியவற்றுல் செய்த சிறு மணிகள் போன்ற ரவைகளும், கருங்கற் சிப்பிகளும் கலந்து திணித்து வைத்திருந்தார்கள்.

"ஆகாச பைரவ தந்திரம்"

ஆகாச பைரவதந்திரம் என்னும் நூல் ஒன்று பதினுரும் நூற்ருண்டின் மத்தியில் எழுதப்பட்டது: அது தந்திர சாஸ்திரத்தைக் கூறும் நூல் அன்று, விஜயநகர மன்னர்கள் நடத்திவந்த வாழ்க்கையையும் அவர்கள் அனுஷ்டித்த விதிகளையும் எடுத்துக் கூறும் நூல். ராஜகுமாரர்களுக்கு உபயோகமாக இருக்க வேண்டி இயற்றப்பட்டது: அதனுள் சக்ரவர்த்தி மஹா நவமி உத்ஸவத்தில் ஆயுதபூஜை செய்வதைக் கூறுமிடத்து:

"த்ரயோ விம்சம்
நாலி காஸ்த்ரம்
ஸ்வாஸ்திகம் ததனந்தாம்"

என்று சொல்லுகிருர்: அதனுல் அந்தக் காலத்திலேயே துப்பாக்கி பிரபலமடைந்து தெய்வ சக்தி பெற்ற ஆயுதமாக மாறி விட்டது விளங்கும்.

சீனர் எழுதியது

துப்பாக்கிகள் தக்ஷிணத்தில் வழக்கில் இருந்தனவாக நாம் நிச்சயமாகக் கூறக்கூடிய காலத்துக்கு முன்னமேயே வங்காளத்தில் அது இருந்து வந்தது என்று தெரிகிறது. சீன தேசத்து அரசனுன யுங்-லோ என்பவன் தன்னுடைய மகிமையையும் பிரபாவத்தையும் உலகம் அறியச் செய்ய வேண்டிய, முப்பதாயிரம் போர் வீரர்களுடன் ஒரு தூது கோஷ்டியை அமைத்து அவர்களை அறுபத்திரண்டு கப்பல்களில் ஏற்றி ஒவ்வொரு தேசமாக அனுப்பி வைத்தான். 1406-ஆம் ஆண்டில் வங்காளத்துக்கு வந்திருந்த அந்தக் கோஷ்டியில் ஒருவனுன மஹாவுன் என்பவன் வங்காளத்தே துப்பாக்கிகள் கிடைத்தன என்று எழுதியிருக்கிருன்.

இவ்விதமாகக் கி-பி-1400-ம் ஆண்டிலிருந்து துப்பாக்கிகள் நம் நாட்டில் வழக்கில் இருந்து வந்திருக்கின்றன என்பதை நாம் நிச்சயம் கூறலாம். ஐரோப்பிய நாட்டிலும் அதற்கு முன்னர் வெகு காலமாக அது வழக்கில் இருந்திருக்கவில்லை.

அதிசயம்தான்

அங்கேயும் கி.பி. 1326-ஆம் ஆண்டில் பிளாரன்ஸில் துப்பாக்கி இருந்தது என்று கூறப்பட்டுள்ளது. அன்றி 1325-அம் ஆண்டில் எழுதியதும் ஆக்ஸ்போர்ட்டில் இருப்பதுமான சுவடி ஒன்றில் துப்பாக்கியின் சித்திரம் ஒன்று காணப்படுகின்றது. ஆராய்ச்சியாளர்கள் அவைகளே துப்பாக்கியைப்பற்றிக் கிடைக்கும் பழமையான குறிப்புகள் என்று சொல்லுகிருர்கள்.

அங்ஙனமாயின் மேல் நாட்டாருக்குத் தெரிந்த எழுபத்தைந்து ஆண்டுகளுக்குள்ளேயே துப்பாக்கி நம் நாட்டிலும் வழக்கில் வந்து விட்டது என்பதை நிச்சயமாகக் கூறலாம். தற்காலத்தில் உள்ளதைப் போன்று, போக்கு வரத்துக்கு நவீன சாதனம் வாய்க்கப் பெருததும், பழைய பாட்டைகளைவிட்டுப் புதிய வழிகளில் செல்லுவதற்குச் சிறிதும் சம்மதிக்காத மனப்பான்மையையும் பெற்றிருந்த அந்த நாளில் அதை ஓர் அதிசயம் என்றே கூறவேண்டும்.

ART PHOTO ALBUM

French Art Photos of beautiful young girls in charming poses are sent against /5/ postage stamps with one album free Limited albums ett Order now lest you be disappcinted

LONDON COMMERCIAL CO.

P. B 165 (S M M.) LAHORE (INDIA)

(F A B.)

மதராஸ் போர்ட் டிரஸ்டிற்கு ஆந்திர வியாபார சபைப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் ஸ்ரீ எஸ். வெங்கட ரங்க செட்டியார்

(பி. எஸ். எ.)





1. மத்வ சித்தாந்த உன்னுஹினி சபை வைர விழா ஸ்ரீ பீமசேன ராவ் தலைமையில் நடந்தது. 2. வங்க மந்திரிகள் ஸ்ரீ சந்தோஷ குமார் வசுவும், டாகா நவாபும் நகருக்கு விஜயம் செய்தனர். 3. பச்சையப்பன் கலாசாலை நூற்றுண்டு விழாவின்போது மே. த. கவர்னர் தம்பதிகள், டிரஸ்ட் போர்டு மெம்பர்கள், கலாசாலை ஆசிரியர்கள் முதலியவர்கள் சேர்ந்து எடுத்துக்கொண்ட படம்,

மயிலை

ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்துப் பிரசுரங்கள்

	ரூ.	அ.	பை.
ஸ்ரீ ராமகிருஷ்ண தேவரின் திவ்ய சரிதம்	5	0	0
ஞான தீபம்	2	0	0
உபதேச மொழிகள் (சாதா)	1	12	0
ஷை (காலிகோ)	2	0	0
ஸ்ரீராம கிருஷ்ண வசனாம்ருதம்	1	8	0
ராஜயோகம்	1	4	0
கருமயோகம்	0	12	0
ஜகஜ்ஜீவ பரவிளக்க வினாவிடை	0	12	0
பக்தி யோகம்	0	10	0
விவேகாநந்தர் சரிதம்	0	3	0
ஷை	0	12	0
ஷை கடிதங்கள்	0	10	0
நமது தாய்நாடு	0	8	0
சாரதா தேவி சரிதம்	0	8	0
குருதேவா வாக்யம் (சாதா)	0	6	0
ஷை (காலிகோ)	0	10	0
ஈசோப நிடதம்	0	6	0
சிகாகோ பிரசங்கம்	0	5	0
பக்தி மார்க்கம்	0	5	0
எனது குருநாதர்	0	3	0
நடராஜ வடிவம்	0	3	0
பவாஹரி பாபா	0	3	0
நம்மவர் நாட்டு ஞானவாழ்க்கை	0	2	0
எல்லாவற்றிலும் இறைவனைக் காணல்	0	2	0
முத்திநெறி	0	2	0
விவேகாநந்தர் வரலாறு	0	1	0
சந்யாசி கீதம்	0	0	6
Sri Sarada Devi	3	8	0
Gospel of Sri Ramakrishna	2	8	0
Spiritiual Teachings of Swami Brahmananda	2	0	0
Message of Eternal Wisdom Calico	2	0	0
Do Do Wrapper	1	8	0
Divine Life	1	14	0
Inspired Talks (Calico)	1	12	0
Do (Wrapper)	1	4	0
Universal Prayers	1	6	0
Vedic Religion & Philosophy	1	4	0
Complete Works of Swami Abhedananda	1	0	0
Saint Durgacharan Nag	1	0	0
Sri Krishna the Pasteral and King-maker	0	12	0
Katha Upanishad	0	12	0
Mundakopanishad	0	12	0
Hinduism	0	10	0
Prasna Upanishad	0	10	0
Education	0	8	0
Isavasyopanishad	0	6	0
Kenopanishad	0	6	0
Mandukyopanishad	0	6	0
Aitareya Upanishad	0	6	0
Path to Perfection	0	4	0
Message of Swami Vivekananda	0	4	0
Sri Ramakrishna Paramahamesa	0	3	0
Women of India	0	3	0
Ramakrishna & Vivekananda	0	2	0

தபாற் செலவு, ரயில் செலவு முதலியவை பிரத்யேகம்.

எமது எல்லா ரயில்வே புத்தகசாலைகளிலும், ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.

இவைகள் தவிர வியாபாரிகளுக்கும், வாசகசாலைகளுக்கும், பஞ்சாயத்து போர்டுகளுக்கும் கோர்வையான அகப்படக்கூடிய நாவல்கள் முதலியன ஆர்டரின்பேரில் அனுப்பப்படும்.

மானேஜர்,

"சுதேசமித்திரன்" புத்தகசாலை, சென்னை.

Printed and Published by T.S. Visvanatha Iyer, B.A., at the Swadesamitran Power Press, Mount Road, Madras. Editor, C.R. Srinivasan, B.A.